நவமணி සති අන්ත NAVAMANI WEEKLY

# நவமணி

தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

மணி 09 | 2016 ஜனவரி 01 - 03 | ஹிஜ்ரி 1437 ரபிஉல் அவ்வல் பிறை 21 - 23 | ஒளி 01

PAGES: 16 | Facebook.com/ NavamaniOfficial | twitter.com/NavamaniLK | PRICE: 30/=

QD / 167 / NEWS / 2015


போராட்டங்கள்

அரசுக்கெதிரான


போராகுமா?



P04

2016 happy new year

1996 - 2016 நவமணி 20





P07

## ஜெனீவா முன்மொழிவுகள்

# விசேட செயலக பணிகள் இவ்வாரத்தில் ஆரம்பம்

அ.அருண் பிரசாந்த்

ஜெனீவா பிரேரணைகளை இலங்கையில் செயற்படுத்துவதற்காக தேசிய அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட விசேட செயலகம், மலர்ந்துள்ள புதுவருடத்தின் முதல் வாரத்திலிருந்து செயற்படவுள்ளது.

மேலும், இதன்மூலம் இவ்வருட இடைப்பகுதிலேயே ஜெனீவா முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் செயற்திட்டங்களும் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் விவகாரங்கள் தொடர்பில் கடந்த வருடம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டது.

இதில், இலங்கை இராணுவம்-தமிழீழ விடுதலைப் புலிகள் என இருதரப்பினர் மீதும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டதோடு, இவை தொடர்பில் இலங்கையின் புதிய அரசானது உரியமுறையில் விசாரணைகளை நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டிருந்தது.

அத்தோடு, இந்த விசாரணைகளுக்காக சர்வதேசத்தின் உதவியை கொழும்பு அரசு நாடலாம்; சர்வதேச நீதிபதிகள் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளலாம் எனவும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் தெரிவித்திருந்தார்.

இதற்கு இலங்கை அரசு சம்மதம் தெரிவித்த போதிலும், எதிரணி உறுப்பினர்கள் குறிப்பாக மஹிந்த ஆதரவணியினர் கடுமையான எதிர்ப்பினையே வெளியிட்டு வருகின்றனர்.

அதாவது, ஐ.நா. தீர்மானத்தின் மூலம் இலங்கை இராணுவத்துக்கு ஆபத்து வந்துள்ளதாகவும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தவர்கள் மின்சாரக் கதிரைக்குச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தொடர்ந்து கூறிக்கொண்டுவருகின்றனர்.

இந்நிலையில், ஐ.நா. தீர்மானங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த வருடம் தேசிய

12ஆம் பக்கம்

## சம்மாந்துறையில் துக்கதினம்



எம்.சி. அன்சார், சம்மாந்துறை

வரக்காபொல - தும்மலதெனிய பிரதேசத்தில் தனியார் பேருந்து ஒன்றும் வேன் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட வீதி விபத்தில் சம்மாந்துறை பிரதேசத்தினைச் சேர்ந்த உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு நேற்று வியாழக்கிழமை சம்மாந்துறை பிரதேசமெங்கும் வெள்ளைக் கொடிகள்

12ஆம் பக்கம்

## ஒற்றுமை, சகவாழ்வினை ஒன்றிணைந்து பலப்படுத்துவோம்

### ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்து



ஒற்றுமை, அகனூடாக வலுவடையும் கூட்டு ஒத்துழைப்பு, சகவாழ்வினை பாதுகாப்போமென பிறக்கும் இப்புத்தாண்டில் நாம் திடசங்கற்பம் பூணுவோமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது புதுவருட வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியில்

12ஆம் பக்கம்

## மலரும் புத்தாண்டு நாட்டுக்கு வெற்றி

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



அழுத்தம் மற்றும் அடக்குமுறையுணர்வின்றி சுதந்திரமான ஒரு சூழலில் மலர்ந்துள்ள 2016ஆம் ஆண்டு புது வருடத்தை வரவேற்கக் கிடைத்தமையானது நாம் பெற்றுக்கொண்ட பாரிய வெற்றியாகுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

12ஆம் பக்கம்

## பௌத்த பிக்குகளை மக்கள் சந்தேகத்தோடு பார்க்கின்றனர்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

இளம் பௌத்த பிக்குகள் தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கையற்ற தன்மை காணப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசனத்தில் இணைந்துகொள்ளும் பௌத்த பிக்குகளை, சாதாரண பொதுமக்கள் சந்தேகக் கண்ணில் நோக்குகின்றனர். இளம் பௌத்த பிக்குகள் தொடர்பில் மக்கள் மத்தியில் அச்சநிலைமை காணப்படுகின்றது. இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

பௌத்த பிக்குகள் தொடர்பிலான மக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

12ஆம் பக்கம்

## மக்காவின் இலங்கை இல்லத்துக்கு புது நம்பிக்கையாளர்களை நியமிக்குக

### மக்காவிலிருந்து முஜிபுர் ரஹ்மான்



சவூதியிலிருந்து முஹம்மத் ரசூல்தீன்

புனித மக்கா நகரிலுள்ள இலங்கை இல்லம் இலங்கை முஸ்லிம்களது பாதுச் சொத்தாகும். இதனை தற்போதுள்ள தனிநபரிடமிருந்து மீட்டெடுத்து இதனை நிர்வகிப்பதற்கு நம்பிக்கையாளர்களை நியமிக்கவேண்டுமென கொழும்பு மாவட்ட

12ஆம் பக்கம்

## துறைமுகநகர் திட்டத்தில் விரைவில் மாற்றங்கள்



அ.அருண் பிரசாந்த்

கொழும்பு துறைமுக நகர திட்டம் தொடர்பில் சீன அரசுடன், இலங்கையின் கடந்த அரசினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மிகவிரைவிலேயே மாற்றி

12ஆம் பக்கம்

## ஏகமனதாக நிறைவேறியது மேல் மாகாணசபை பட்ஜட்

எம்.எஸ்.எம். முன்தஸிர்

மேல் மாகாண சபையின் வரவு செலவுத்திட்டம்-2016 மாகாண சபையின் விசேட அமர்வில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேல் மாகாண சபையின் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளின் ஒன்பது உறுப்பினர்கள்

12ஆம் பக்கம்

## நவாஸ் ஷெரீப் கண்டி விஜயம்



புத்தாண்டில் இலங்கைக்கு வரும் முதலாது வெளிநாட்டு தலைவர் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீப் ஆவார். எதிர்வரும் 5ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமரை இவர் சந்திக்கிறார்.

6ஆம் திகதி இவர் கண்டிக்கு விஜயம் செய்கிறார். கண்டியில் சிறி தலதா மாளிகை மீரா மக்காம் பள்ளிவாசல் ஜின்னா நிலையம் பேராதெனிய பூங்கா ஆகியவற்றுக்கும்

12ஆம் பக்கம்








.'.பிலெக்சி தவணை முதலீட்டுக் கணக்கு

அமானா வங்கியின் புதிய .'.பிலெக்சி தவணை முதலீட்டுக் கணக்கின் மூலம் தேவையான நேரத்தில் சௌகரியமான முறையில் மேலதிக வைப்புக்களை செய்யும் வாய்ப்பினை உங்களுக்கு வழங்குகின்றது. இச்சேவையின் மூலம் உங்கள் முதலீடுகள் முறையாக பராமரிக்கப்படுவதோடு உங்கள் முதலீட்டுக்கு அதிக இலாபத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறப்பியல்புகளும் பயன்களும்

- எந்த நேரத்திலும் மேலதிக பணத்தினை வைப்பு செய்யக்கூடிய வசதி
- சாதாரண சேமிப்புக் கணக்கினை விட அதிகமான இலாபம்
- வழங்கப்படும் இலாபங்கள் கணக்கிலேயே முதலீடு செய்யப்படும்
- நேரடியாக பணமாக அல்லது பணப்பரிமாற்றத்தின் ஊடாக இக்கணக்கில் வைப்புச்செய்யலாம்.
- குறைந்தபட்ச ஆரம்ப முதலீடு : ரூபா 100,000/-

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

# திரைக்கு பின்னால்

- சஞ்சாரி

# அமைச்சர் றிஷாத் பதியுதீன் கூடுதலாகத் துள்ளுகிறாராம்

### தமிழர் கூட்டமைப்புக்குள் வெடிப்பு ஏற்படும்

நடப்பாண்டின் கடைசி வாரம் விடுமுறை வாரமாக இருந்தபோதும் அரசியல் ரீதியாக சூடான வாரமாகவே கழிந்தது.

பிரதமர் உட்பட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நீண்ட பாராளுமன்ற அமர்வின் பின் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த போதும் அரசியலரங்கில் முக்கிய நிகழ்வுகள் பல இடம்பெற்ற வண்ணமுள்ளன.

தமிழர்களின் பிரதான கட்சியான தமிழர் கூட்டமைப்புக்குள் வெடிப்பு ஏற்படும் எனச் சந்தேகிக்குமளவிற்கு தமிழ் அரசியல் பேரவையின் உருவாக்கம் அமைந்துள்ளது.

அமைச்சர் றிஷாத் பதியுதீனுக்கும் ஆனந்த சாகர தேரருக்குமிடையே கடந்த திங்களன்று இடம்பெற்ற தொலைக்காட்சி விவாதம் இவ்வாரத்தில் பேசப்படும் முக்கிய விடயமாக இருந்தது.

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் கடந்த கால அரசியல் செயற்பாடுகள் அவரை இந்த இடத்துக்கு நியமித்த கட்சியின் தலைமைத்துவத்துக்கு மாற்றமாகவே அமைந்திருந்தன. பொதுத் தேர்தலின்போது கட்சி அபேட்ச கர்களை வெற்றி பெறச் செய்வதில் அவர் கடைபிடித்த மென்மைப்போக்கு காரணமாக தமிழர் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்கு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரான முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குமிடையே மலர்ந்து வந்த கருத்த முரண்பாடு தமிழ் மக்கள் பேரவை அமைப்பின் பின் பகிரங்கத்துக்கு வந்துள்ளது.

கடந்த தேர்தல்களினால் நிராகரிக்கப்பட்ட பல்வேறு தமிழ் கட்சி களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. முதலமைச்சரின் செயற்பாட்டை தமிழர் கூட்டமைப்புத் தலைவர் ஆர். சம்பந்தனின் நெருங்கிய சகாவாகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பகிரங்கமாக விமர்சித்துள்ளார். தமிழர் கூட்டமைப்பிலிருந்து இந்தப் பேரவைக் கூட்டங்களில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சியின் உப தலைவர் பேராசிரியர் எஸ்.கே. சித்தம்பலத்திடம் இது தொடர்பாக விளக்கம் கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்பேரவையின் செயற்பாட்டை தமிழரசுக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் விமர்சித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து அமைத்துள்ள தமிழ் மக்கள் பேரவை அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக சிபாரிசுகளைச் செய்வதற்கான குழு ஒன்றையும் நியமித்துள்ளது. அரசாங்கம் புத்தாண்டு முதல் ஆரம்பிக்கவுள்ள அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான செற்பாடுகளில் சம்பந்தனும் சுமந்திரனும் மட்டுமே ஈடுபடுவார்கள் என்ற நிலைப்பாடு தமிழ் அரசியல் தரப்பில் வலுப்பெற்றுள்ளதனாலே இவ்வாறான ஓர் அமைப்பு உருவாகக் காரணம் என்றும் தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சனியன்று நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தின்போது அரசியல் தீர்வு மற்றும் அரசமைப்புச் சீர்திருத்தங்களைச் சிபாரிசு செய்வதற்கு 15 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அமைப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் விக்னேஸ்வரன், இக்குழுவின் அறிக்கை விஞ்ஞான ரீதியாகவும் எல்லா விவகாரங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். இதேநேரம், சம்பந்தனும் முதலமைச்சரும் நத்தார் தினத்தன்று நீண்ட நேரம் பேச்சுவார்த்தை ஒன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

### ஹெல உறுமயவின் அமைச்சர் பதவிக்கு ஆப்பு வைத்தது யார்?

மேல் மாகாண சபையின் அமைச்ச ரவையில் அங்கம் வகித்த ஜாதிக ஹெல உறுமயவின் ஒரே அமைச்சரான நிசாந்த வர்ணசிங்கவின் அமைச்சர் பதவி செவ் வாயன்று பறிக்கப்பட்டது. மேல் மாகாண சபையின் சுகாதார அமைச்சின் நிதி ஒது க்கீடு அச்சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளடங்கிய ஆளும் கட்சி உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டது.

முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவுக்கும் அமைச்சர் நிசாந்தவுக்குமிடையே நிலவி வந்த கருத்து முரண்பாடே பட்ஜட் தோற்கடிப்பதற்கு முக்கிய காரணமாகும். டிசம்பர் 31ம் திகதிக்குள் பட்ஜட் நிறைவேற்றப்படாவிடின் மேல் மாகாண சபைக்கு புதிய வருடத்தில் இயங்க முடியாத நிலை ஏற்படும். கடந்த சில தினங்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட அரசின் முக்கியஸ்தர்களுடன் நடத்திய மந்திராலோசனையின் பின்பு மேல் மாகாண ஆளுநரினூடாக நிசாந்தவின் அமைச்சுப் பொறுப்புக்களை முதலமைச்சர் பொறுப்பேற்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன்படி செவ்வாயன்று ஆளுநர் கே. லோகேஸ்வரன் முன்னிலையில் முதலமைச்சர் சுகாதார அமைச்சின் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். இதற்கு முன்பு முடியுமாயின் அமைச்சுப் பதவியிலிருந்து தன்னை அகற்றுமாறு நிசாந்த சவால் விட்டிருந்தார். நிசாந்தவின் பதவி நீக்கம் ஜாதிக ஹெல உறுமயவுக்கு அரசுக்குள் ஒரு பின்னடைவினையே ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதிக்கு மிக நெருங்கியவராக இருக்கும் அமைச்சர் சம்பிக ரணவகவுக்கும் இந்த விடயத்தில் எதுவும் செய்ய முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. தன்னை அமைச்சிலிருந்து அகற்றும் முயற்சியின் பின்னணியில் முதலமைச்சர் இருந்தார் என நிசாந்த வர்ணசிங்க புதனன்று நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். இதேநேரம், மேல் மாகாண சபையில் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு வியாழனன்று கூட்டப்பட்ட மாகாண சபையின் விசேட அமர்வில் நிறைவேற்றப்பட்டது. மேல் மாகாண சபையின் ஹெல உறுமயவுக்கு மூன்று ஆசனங்கள் உள்ளன.



மஹரகம, பமுனுவையில் அமைந்துள்ள இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்தின் புதிய தாவரச்சாறு உற்பத்திச்சாலையை திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. அதன்போது ஜனாதிபதி மருந்து உற்பத்தியை பார்வையிடுவதை படங்களில் காணலாம். (படம் - சுதத்சில்வா)

### புத்தாண்டில் அமைச்சரவையில் மாற்றமா?

புத்தாண்டில் அமைச்சரவையில் மாற்றம் இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது. தற்போது பிரதான அமைச்சுப் பதவி வகிக்கும் போது இரு பிரதான அமைச்சர்களின் பதவிகளில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிதி அமைச்சும் நீதி அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர்களே மாற்றப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது. அமைச்சர்கள் எனக் கூறப்படுகின்றது. இது தவிர, பிரதி அமைச்சர் பதவிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பிக்கள் சிலர் உள்வாங்கப்படவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வரவு செலவுத்திட்டத்தின் பின் பலத்த விமர் சனத்துக்குள்ளாக்கப்பட்டு வருகிறார். இதேநேரம், நிதி அமைச்சருக்கும் அரச தொழில் முயற்சிகள் அமைச்சர் கபீர் ஹாசிமுக்கும் இடையிலான கருத்து முரண்பாடு கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து வருகின்றது. கடந்த வாரம் அமைச்சரவைக்கு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்திருந்த பிரேரணை ஒன்றும் அமைச்சர் கபீரின் பலத்த விமர் சனத்திற்குள்ளானது. நிதி அமைச்சர் வெளிநாடு சென்றுள்ள நிலையில் இந்த அமைச்சரவைப் பத்திரம் தொடர்பான தீர்மானம் எடுப்பது அமைச்சர் நாடு திரும்பிய பின் நடைபெறும் அமைச் சரவைக் கூட்டத்தில் பரிசீலிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதேநேரம், நிதி அமைச்சராக கபீர் ஹாசிம் நியமிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. பொருளாதார நிபுணர்களில் ஒருவரான கபீர் ஹாசிம் எதிர்க்கட்சியிலிருக்கும் போது ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையோடு பங்களிப்புச் செய்தவராவார். இதேநேரம், ஜனவரி முதல் வாரத்தில் அரச யந்திரத்தில் பல மாற்றங்களும் இடம்பெறும் என எதிர்பாக்கப்படுகின்றது.

ஜனவரி முதல் வாரம் முதல் நாட்டிற்கு புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அரச மைப்புத் திட்டம் தொடர்பாக மக்கள் கருத்துக்களைத் திரட்டி நகல் திட்டத் தினைச் சமர்ப்பிப்பதற்காக 24 பேர் கொண்ட குழு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கியஸ்தரான லால் விஜேநாயக்க தலைமையிலான 24 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தென்கிழக்குப் பல்கலை ஸ்தாபக உபவேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர், சட்டத்தரணி எம்.வை.எம். பாயிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் சமூகத்தின் சார்பில் எஸ். செல்வ குமார், எஸ் தவராசா, கலாநிதி. எஸ். விஜேசந்திரன், எஸ்.எச். இளங்கோன் நியமிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 8ம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பாராளுமன்ற அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்படும் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான கருத்துத் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



சகலருக்கும் புகலிடம் என்ற தொனிப்பொருளில் அம்பாந்தோட்டை நகரசபை பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் 780 குடும்பங்களுக்கு தலா 50,000 ரூபா வீட்டுக்கடன் வழங்கும் நிகழ்ச்சி டிசம்பர் 30ம் திகதி இடம்பெற்றது. வீடமைப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த வைபவத்தில் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ குடும்பமொன்றுக்கு வீட்டுக்கடனை வழங்கும்போது எடுக்கப்பட்ட படம்.

### ஆடையில்லாமல் பாதையில் போகும் சுதந்திரமா இன்று தேவைப்படுகின்றது - ஜனாதிபதி

கொழும்பில் பெல்ஜியம் பாடகர் நடத்திய காதல் - காமம் என்ற இசைக் கச்சேரி தொடர்பாக பலத்த விசனங்கள் எழுந்துள்ளன. வார இறுதியில் அம்பாறையில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்ச்சி பற்றி பலத்த விமர்சனம் தெரிவித்துரையாற்றினார். இதனையடுத்தே இந்தப் பிரச்சினை நாட்டின் பேச்சுப் பொருளாக மாறியது. இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த முன்னணிக் கிரிக்கட் வீரர்களான சங்கக்காரவும் மஹேல ஜயவர்தனவும் பெரும் அசௌகரி யங்களை எதிர்நோக்கினர். நடந்த தவறுக்கு பகிரங்க மன்னிப்புக் கோரினர். ஜனாதிபதி ஏற்பாட்டாளர்களுக்கு குற்றம் சுமத்தாத போதும் அலங்கோலமாக நடந்தவர்களை திருக்கை வால் சவுக்கு கொண்டு அடிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். ஜனாதிபதியின் உரைகள் குறித்து, சில தரப்பில் வெளிவந்த விமர்ச னங்கள் குறித்து கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலும் ஜனாதிபதி பதிலளித்து உரையாற்றி, சுதந்திரம் பற்றியும் கருத்துத் தெரிவித்த அவர், ஆடையின்றி பாதையில் போகும் சுதந்திரத்தையா இவர்கள் கேட்கிறார்கள் என்று கேள்வி எழுப்பினார். நான் அந்த கொழும்பு இசை க்கச்சேரி பற்றித் தெரிவித்த கருத்து குறித்து இப்போது இணையத்தளங்களினூடாக வெப் தளங்களினூடாக என்மீது பலமான தாக்குதல்களை மேற்கொள்கின்றார்கள். என்னை அரைக்கப் பார்க்கிறார்கள். என்னை அரைக்கப்பார்க்கும் ஒவ்வொருவருக்கும் நான் சொல்வது, அரைப்பது என்னையல்ல இந்த நாட்டின் கலாசாரத்தையே என்றும் ஜனாதிபதி கூறினார்.

அமைச்சர் றிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்ற தேசிய கைவினை சபையினால் நடத்தப்படும் கைவினை விருது வழங்கும் நிகழ்விலே ஜனாதிபதி இக்கருத்துகளைத் தெரிவித்தார். இதேநேரம், இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்த விழா ஏற்பாட்டு அமைப்பினை கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம். முஸம்மில் கறுப்புப் பட்டியலில் சே ர்ப்பதாக அறிவித்துள்ளார். அத்தோடு, இந்த அமைப்பு வழங்க வேண்டிய களியாட்ட வரியான 29 மில்லியன் ரூபாவை பத்து நாட்களுக்குள் செலுத்தாவிடின் வழக்குத் தாக்கல் செய்வதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### உலகின் முக்கிய மாற்றங்களில் இலங்கை அரசியல் மாற்றமும் ஒன்று என்கிறார் ஜோன் கெரி

இலங்கையில் நடைபெற்ற அரசியல் மாற்றம் இந்த ஆண்டில் உலகில் நடைபெற்ற மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று என அமெரிக்காவின் ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார். 2015ம் ஆண்டு பற்றிய அவரது கருத்து தொடர்பாக பொஸ்டன் குளோப் பத்திரிகைக்களித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஜனநாயகத்தைப் பலப்படுத்தி இலங்கை பெரும் முன்னேற்றத்தை இந்த ஆண்டில் ஏற்படுத்திக் கொண்டுள்ளதே கழிந்த ஆண்டில் நடைபெற்ற கசப்பான நிகழ்வுகளுக்கிடையே இலங்கையில் ஜனநாயகத்துக்கு வெற்றி பெற முடிந்துள்ளது என்றும் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

### பதினொன்றுக்கு பதினொன்று தேவையில்லை

தற்போதைய அரசியலமைப்புச் சட் டத்தில் பதினொரு ஷரத்துக்களை மாற்றுவதாயின் 11 முறை பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென அரசியலமைப்பு நிபுணரான முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்த கருத்தினை மற்றொரு அரசியலமைப்பு நிபுணரான பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன மறுதலித்துள்ளார். ஒரு முறை பொதுஜன அபிப்பிராய வாக்குரிமை நடத்தப்பட்டால் மட்டும் போதுமானது என்றும் அவர் பதிலளித்துள்ளார்.

### மாற்றத்தின் பிரதிபலனை இன்னும் 6 மாதங்களில் காணலாம் என்கிறார் மஹிந்த

மஹிந்த ராஜபக்ஷ நாளாந்தம் குறைந்தது ஒரு கூட்டத்திலாவது உரையாற்றி வருகிறார். சமய வைபவங்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டங்களிலும் பங்குபற்றி வரும் ஜனாதிபதி, நாளாந்தம் நடக்கும் அரசியல் நிகழ்வுகளுக்கும் நாட்டு நிகழ்வுகளுக்கும் பதிலளித்து வருகிறார். ஊருபொக்கையில் நடைபெற்ற பாலர் பாடசாலை பரிசளிப்பு விழா ஒன்றில் பேசிய ஜனாதிபதி, அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சி த்துள்ளார். நாட்டின் மாற்றம் பற்றிக் குறிப்பிட்ட அவர், இப்போது பச்சை மிளகாய் 100 கிராம் நூறு ரூபாய் எனச் சத்தம் போடுகிறார்கள். இன்னும் ஆறு மாதங்கள் போனதும் மேலும் மாற்றங்களைக் கண்டு கொள்ளலாம் எனக் கூறியுள்ள முன்னாள் ஜனாதிபதி, எமது காலத்தில் ஒரு பீப்பாய் பெற்றோல் 105 டொலர். இன்று அது 34 டொலர். நாம் சொல்வது தீர்வையைக் குறைத்து எரிபொருள் விலையைக் குறையுங்கள் என்றே எனவும் குறிப்பிட்டார்.

### மந்தகதியடைந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரம்

எதிர்வரும் மார்ச்மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி த் தேர்தல் அடுத்தாண்டு ஜூலை மாதத்துக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. இதன்படி வியாழக்கிழமையுடன் பதவிக்காலம் முடிவடைந்த 23 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்வரும் ஜூன் 30 வரை பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. தேர்தல் ஒத்திப்போடப்பட்டதன் காரணமாக உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயாரான அநேக கட்சிகளும் அபேட்சகர்களும் தம் நடவடிக்கைகயை இடைநிறுத்திக் கொண்டுள்ளனர். இதனால் சூடு பிடிக்கத் தொடங்கிய உள்ளூராட்சி த் தேர்தல் பிரசாரங்கள் தனியத் தொடங்கியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மஹிந்த அணியினர் மாற்றுக் கட்சி அமைக்கும் முயற்சியும் பின்போடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச மற்றும் தினேஷ் குணவர்தன போன்றவர்கள் புதிய கட்சியை அமைப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இது குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுவரை தனது தெளிவான நிலைப்பாட்டை வெளியிட்டதிலிருந்து தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறப்போவதில்லை என்றே கூறி வருகிறார். அதனால் அமைக்கப்படவுள்ள புதிய கட்சி பற்றி முடிவெடுக்க முடியாத நிலைக்கு மஹிந்த ஆதரவாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

### 13 பிளஸ் எடுக்க ஆயுதம் தாங்க வேண்டுமா?

அரசியலமைப்பு மாற்றமொன்று தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று சில தினங்களுக்கு முன் கொழும்பில் இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயம்பதி விக்ரமரத்ன, எம்.ஏ. சுமந்திரன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

ஒரு கட்டத்தில் அரசியல் அதிகார அலகு பற்றி இங்கு பேசப்பட்டபோது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சுமந்திரனைப் பார்த்து, இப்போது உங்களுக்கு பதின்மூன்று பிளஸ் அவசியமில்லைதானே, பதின்மூன்று போதும்தானே என்றும் தெரிவித்துள்ளார்.

சுமந்திரன் சந்திரிகாவைப் பார்த்து, ஏன் அப்படி கூறுகின்றீர்கள் என்று கேட்டுள்ளார். இப்போது பிரபாகரன் இல்லைதானே என்று சந்திரிகா சிரித்துக் கொண்டே கூறியுள்ளார்.

அப்போது பதிலளித்த சுமந்திரன், எங்களையும் ஆயுதம் தாங்கவா சொல்கின்றீர்கள் என்று கேட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் உத்தேச அரசியல் திட்ட மாற்றங்கள் பற்றி பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன.

### அமைச்சர் றிஷாத்தின்350க்கு மேற்பட்ட கருத்துக்கள்

றிஷாத் பதியுதீனுக்கும் ஆனந்த சாகர தேரருக்குமிடையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற தொலைக்காட்சி விவாதத்தின்போது அமைச்சர் கருத்துக்களை முன்வைத்த முறை குறித்து முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் பாராட்டுக்களைக் குவித்துள்ளனர். சிலர் அமைச்சரை விமர்சித்தும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அமைச்சரின் முகநூலில் 350க்கு மேற்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஹிரு ஊடகவியலாளர்கள் நடுநிலைமை தவறி செயற்பட்டதாகவும் சிலர் குற்றஞ்ச ாட்டியுள்ளனர். குர்ஆனில் சத்தியம் செய்யாதது குறித்து பலரும் அமைச்ச ரைப் பாராட்டியுள்ளனர்.

### அமைச்சர் றிஷாத் அதிகம் துள்ளுகிறாராம்

அமைச்சர் றிஷாத் அதிகம் துள்ளுவதாகவும் அவருக்கு விரைவில் பாடம் புகட்டுவதாகவும் பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் சிறுபான்மை மக்கள் நாட்டை எவ்வாறு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது தொடர்பாக புத்தகம் ஒன்றை பொதுபல சேனா வெளியிட ஆயத்தமாகி வருகிறது. இது தொடர்பாக நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டுள்ள அவ்வமைப்பின் பொதுச்செயலாளர் ஞான சார தேரர் இந்த கருத்தையும் முன்வைத்துள்ளதாக கொழும்பு முன்வணி சிங்கள இணையம் செய்திவெளியிட்டுள்ளது.



ஸ்ரீலங்கா அமரபுர நிக்காயவின் பீடாதிபதி தெவுல்தெனிய ஞானிஸ்ஸர தேரரின் 100ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கொழும்பில் நேற்று (31) நடைபெற்ற விசேட நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்றார். இந்த நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கைகூப்பி வணக்கம் தெரிவிப்பதையும், தேரருக்கு ஜனாதிபதி பரிசு வழங்குவதையும் படத்தில காணலாம்.

# பாணந்துறையில் அனுமதிப்பத்திரம் பெறாத தொழிற்சாலைகள்

## மத்திய சுற்றாடல் அதிகார சபையால் விசாரணை

(பீ.எப்.எம் றிஷாட்)

பாணந்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கெசெல்வத்தைப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பல தொழிற்சாலைகள் மத்திய ற்றாடல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளமால் செயற்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாணந்துறை, கெசல்வத்தையில் அமைந்துள்ள பிரபல தீந்தை தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக் கசிவு காரணமாக 50க்கும் அதிகமான ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதேவேளை, குறித்த தொழிற்சாலைக்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் அனுமதிப் பத்திரத்தம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், குறித்த தொழிற்சாலை தம்மிடம் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

பல வருடங்களாக இயங்கிவரும் குறித்த தொழிற்சாலையானது, தொழிற்சாலை சட்டமூலம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சட்டமூலத்தை மீறி செயற்பட்டு வருவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இத்தகவல் கடந்த சில தினங்களுக்கு முன் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக் கசிவினை அடுத்து மேலதிக விசாரணைக்காக அங்கு விஜயம் செய்த மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள் மற்றும் அரச தொழிற்சாலை விசாரணைப்பிரிவின் அதிகாரிகளின் பரிசோதனைகளின்போது கண்டறிப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குறித்த விசாரணையில், இத் தொழிற்சாலையில் சுமார் 800 பேர் பணிபுரிவதாகவும், அனைவருக்கும் தொழிற்சாலை சட்டத்தின் படி காப்புறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இத்தொழிற்சாலை தொடர்பில் பாணந்துறை பிரதேச செயலாளர், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் பாணந்துறை பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இத்தொழிற்சாலையை சூழவுள்ள 50 குடும்பங்கள் சில காலங்களாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும், தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் வாயு, அசுத்தமான கழிவுகள் காரணமாக அப்பகுதி சுற்றாடல் அழிவுக்கு உள்ளாகி வருவதாகவும் அப்பகுதியில் வசிக்கின்ற மக்கள் குறித்த அதிகாரிகளுக்கும், பாணந்துறை பிரதேச சபைக்கும் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

# நாட்டில் மீண்டும் புலிகள் பயங்கரவாதமும் இஸ்லாமிய பயங்கரவாதமும் தலைதூக்கியுள்ளது

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் பயங்கரவாதமும், இஸ்லாமிய பயங்கரவாதமும் தலைதூகியுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 30 ஆம் திகதி உடஹமுல்ல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாம் ஏற்படுத்திக் கொடுத்த மாற்றம், உருவாக்கிய ஜனநாயகம் அனைத்தும் இன்று சீரழிக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சி மாற்றம் நாட்டை பாதாளத்தின் பக்கம் கொண்டு செல்லும் என்று நாம் தொடர்ச்சியாக தெரிவித்து வந்தமை இன்று உண்மையாகிவிட்டது.

ஒரு புறம் மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் வடக்கு கிழக்கு பகுதிகளை தனி அலகுகளாகவும் புலிகளை மீண்டும் உருவாக்கவும் தமிழர் தரப்பு முயற்சித்து வருகின்றது.

இன்னொருபுறம் மத்திய கிழக்கு நாடுகளின் உதவியும், அவர்களின் அடிப்படைவாதக் கொள்கையையும் நாட்டில் பயங்கரவாத சூழலை உருவாக்கி வருகின்றது.

இந்த அச்சுறுத்தல் பல காலமாகவே இருந்தது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் நாட்டை பிளவுபடுத்தும் நோக்கம் சர்வதேச தரப்பினால் முன்னெடுக்கப்பட்டது.

அதேபோல் அரசியல் ரீதியிலும் பல்வேறு அச்சுறுத்தல்கள் வழங்கப்பட்டது. இந்த விவகாரங்கள் தொடர்பில் நாம் ஆரம்பத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட்டோம்.

நாம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த பின்னர் நாட்டை அபிவிருத்தியின் பக்கம் திருப்பி குறுகிய காலத்தினுள் சிறந்த நாடாக மாற்றினோம். வடக்கையும், தெற்கையும் ஒரே மாதிரி கையாண்டு மக்களையும் ஒன்றிணைத்தோம்.

அதேபோல் நாட்டின் தேசிய பாதுகாப்பில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டோம். வடக்கில் காணப்பட்ட அச்சுறுத்தலான சூழல், அதேபோல் சர்வதேச தரப்பினால் இலக்கு வைக்கப்பட்டமை தொடர்பிலும் அதிக அக்கறை கொண்டுள்ளோம்.

அவ்வாறான நிலையில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் ஒரே நோக்கத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பையும் இன ஒற்றுமையையும் கவனத்தில் கொள்ளாது அதிகார மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த மாற்றத்தையா மக்கள் விரும்பினர் என்றும் தெரிவித்தார்.



# 20 கர்ப்பிணி பெண்களுக்கு எயிட்ஸ்



எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான 20 கர்ப்பிணித் தாய்மார்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

கர்ப்பிணிப் பெண்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட எச்.ஐ.வி இரத்தப் பரிசோதனைகளில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளதாக, சுகாதார அமைச்சின் பாலியல் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டம் தொடர்பான பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்தார்.

2013ம் ஆண்டு முதல் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களையும் எச்.ஐ.வி பரிசோதனைக்கு உட்படுத்தும் வேலைத் திட்டம் சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி இந்த வருடத்தில் நூற்றுக்கு 70 வீதமான கர்ப்பிணிப் பெண்கள் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அடுத்த வருடத்தில் இதனை நூற்றுக்கு நூறு வீதமாக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாகவும், சிசிர லியனகே தெரிவித்தார்.

மேலும் இந்த நோய்த் தொற்றுக்குள்ளான கர்ப்பிணிகளை இனம்கண்டு உரிய பரிசோதனை மேற்கொள்வதன் மூலம், குழந்தைக்கு எச்.ஐ.வி வரமல் பாதுகாக்க முடியும்.

இதேநேளை எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானதாக இனங்காணப்பட்ட 12 பேருக்கு பிரசவம் நடைபெற்று முடிந்துள்ளதோடு, பிரசவிக்கப்பட்ட குழந்தைகள் எவரும் நோய்த் தொற்றால் பாதிக்கப்படவில்லை எனவும் சிசிர லியனகே மேலும் குறிப்பிட்டார்.

# ஆட்பதிவு மற்றும் கடவுச்சீட்டு திணைக்களங்கள் செத்சிரிபாயவில்

(பீ.எப்.எம் றிஷாட்)

புஞ்சி பொரளையில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஜாவத்தையில் அமைந்துள்ள ஆட்பதிவுத் திணைக்களம் ஆகியவற்றை பத்தரமுல்லையிலுள்ள செத்சிரிபாய கட்டடத்துக்கு இடமாற்ற அர' தீர்மானித்துள்ளதாக உள்நுறை, வடமத்திய அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சர் எஸ்.பீ நாவின்ன தெரிவித்துள்ளார்.

குறித்த இரண்டு திணைக்களங்களுக்காகவும் இரு மாடிக்கட்டடங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதில் முதற்கட்டமாக இம்மாதம் முதல் ஆட்பதிவுத் திணைக்களம் அங்கு இயங்கவுள்ளது.அதனைத் தொடர்ந்து குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மாற்றப்படவுள்ளது.

இதுவரை காலமும் புஞ்சி பொரளையில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு அண்மித்ததாக இடம்பெறும் பலதரப்பட்ட இடையூறுகளுக்கும், பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கும் முடிவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பல வருடங்களாக இவ்விரண்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் சந்தித்து வந்த அனைத்து இடையூறுகளுக்கும் சரியான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இத்தீர்மானத்தை அரசு மேற்கொண்டதாக உள்நுறை, வடமத்திய அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சர் எஸ்.பீ நாவின்ன தெரிவித்தார்.

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு வெளிநாடு செல்ல அனுமதி



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதியை கொழும்பு பிரதான நீதவான் நேற்று (31) வழங்கியுள்ளார்.

அதற்கமைய ஜனவரி 4ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ வெளிநாட்டிற்கு செல்ல முடியும் என கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சொத்துக்கள் தொடர்பில் தகவல்களை வழங்காமை உள்ளிட்ட பல சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபருக்கு நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் இவரின் மனைவி சிங்கப்பூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதன் காரணமாக நகர்த்தல் பத்திரம் ஒன்று ஊடாக வெளிநாடு செல்வதற்காக நீதிமன்ற அனுமதியை கோரி இருந்தார். அதற்கமைய கோரிக்கைக்கான அனுமதி நீதவானினால் வழங்கப்பட்டதோடு 25 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சந்தேக நபர் விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன் ஆஜராகுமாறும் தெரிவித்துள்ளது.

# நல்லாட்சி நிகழ்வு ஜனவரியில்

நல்லாட்சி அரசியல் ஒரு வருட நிறைவை கொண்டாடும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ள இந்த தேசிய நிகழ்ச்சித்திட்டமானது, ஜனவரி 8 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஒரே நாடு-மிகப்பெரிய சக்தி எனும் நூலும் வெளியிடப்படவுள்ளது.

# அரச திணைக்களங்களில் தேசிய கொடியேற்ற பணிப்பு



இன்றைய தினத்தில் நாடு பூராகவும் உள்ள அரச திணைககளங்களில் தேசிய கொடி ஏற்றி தேசியகீதம் பாடப்படுவதுடன் படைவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த அரச திணைக்களங்களுக்கு அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும், வட மாகாணம் உட்பட நாடு பூராகவும் உள்ள அரச திணைக்களங்களில் காலை 9 மணிக்கு தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் பாடப்படுவதுடன், படைவீரர்கள் உட்பட நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த சகலரையும் நினைவு கூர்ந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தும் படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அரச உத்தியோகஸ்தர்களின் உறுதிமொழியினை உரத்து வாசிக்குமாறும், சகல அரச திணைக்களங்களுக்கும் அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி அனைத்து அரச உத்தியோகஸ்தர்களும் குறித்த தினமான இன்றைய தினத்தில் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.





# போராட்டங்கள்

## அரசுக்கெதிரான போராகுமா?



துறையூர்
ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்





அமெரிக்காவின் 16வது ஜனாதிபதியான ஆப்ரஹாம் லிங்கன் தனது மகனின் ஆசிரியரிற்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.இதில் பிறரை ஏமாற்றுவதை விடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும், தனது சுயசிந்தனையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ள அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரடர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி அளியுங்கள்.பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலை நாட்டுவதற்காகத் தொடர்ந்து போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை அளியுங்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.ஆப்ரஹாம் லிங்கனின் இவ் அறிவுரையானது இன்றைய அரசிற்கு மிகவும் தேவையான அறிவுரையாகக் கருதுகின்றேன்.

கடந்த டிசெம்பர் மூன்றாம் திகதி அரச மருத்துவ சங்க வைத்தியர்கள் உள்ளிட்ட 18 சங்கங்கள் இணைந்து ஒரு வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.இவர்கள் 12 பிரதான கோரிக்கைளை முன் வைத்தே இவ் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.இதில் இவர்களின் பிரதான கோரிக்கைகளாக அடிப்படைச் சம்பள மீளாய்வு,தீர்வையற்ற வாகன இறக்குமதி,ஓய்வூதியக் கொடுப்பனவு முறை மாற்றம்,சம்பள அதிகரிப்பு ஆகியன உள்ளன.இது பற்றி கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இத் தொழிற் சங்கங்களுடன் கடந்த சில தினங்களுக்கு முன்பு பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு சில விடயங்களில் இணக்கப்பாடும் ஏற்பட்டிருந்தது. இறுதியில் இவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக எதுவும் பேசாது திடீரென இப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.இவர்களின் இப் போராட்டத்தின் மூலம் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள வைத்தியசலைகளில் நோயாளிகள் அவதியுற்றிருந்தனர்.வைத்தியத் துறையானது பணத்தை எதிர்பார்த்து செய்கின்ற ஒரு துறையல்ல.அவ்வாறானவர்கள் வைத்தியத் துறைக்கு எது வித தகுதியும் அற்றவர்கள்.இலங்கையில் உள்ள வைத்தியர்கள் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க சோற்றுக்கு வழி இல்லாதவர்களும் அல்ல.போதியளவு வசதிகளுடனும்,சுகபோகங்களுடனுமே உள்ளதை கண்ணூடாக அவதானிக்க முடிகிறது.

இது போன்ற ஒரு போராட்டம் இவ் வருடம் மே மாதம் 25ம் திகதியும் நடாத்தப்பட்டிருந்தது.இதனை வைத்தியசாலை சிற்றூழியர்கள் மேற்கொண்டிருந்தனர்.இவர்களின் அன்றைய கோரிக்கைகளாக மூவாயிரம் ரூபாய் விசேட கொடுப்பனவு,2006ம் ஆண்டு சுற்று நிருபத்தின் கீழான அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வின் படி வழங்க வேண்டிய எஞ்சிய ஊதியம் மற்றும் பல கோரிக்கைளை முன் வைத்து இதனை முன்னெடுத்திருந்தனர்.இதனை இவ் அரசு சில இறுக்கமான போக்கோடு சுமுக நிலைக்கு கொண்டு வந்திருந்தது.இதன் போது வைத்தியசாலைகளில் பாதுகாப்பு படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.இவ் விடயத்தில் தலைபோட பாதுகாப்பு படை வீரர்களுக்கு எது வித அவசியமும் இல்லை.அவர்கள் இது எங்கள் வேலை அல்ல எனக் கூறவும் இல்லை.உயிரை துச்சமாய் மதித்து நாட்டிற்காக உள்ளத்தால் போராடியவர்களுக்கு இதனை சிந்திக்க நேரமுமல்ல.உயிரைப் பாதுகாக்க வேண்டிய இவ் வைத்தியர்கள் அற்ப பிரச்சனைகளை தூக்கிப் பிடித்துக்கொண்டு மனித உயிர்களை பற்றி சிறிதும் சிந்திக்காது இவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பதை ஒரு போதும் ஏற்க முடியாது.

மேற்குறித்த பிரச்சினைகள் மஹிந்த அரசு உதித்த காலத்தில் தோற்றம் பெற்ற பிரச்சினைகளாகும்.மஹிந்த அரசின் வாக்குறுதிகளை மஹிந்த அரசாலேயே நிறைவேற்றுவது சவாலுக்குரியது என்றால்,அது பற்றிய திட்டங்கள் இனித்தான் தீட்ட வேண்டிய இவ் அரசுக்கு சிறிதும் அவகாசம் வழங்காது போராட்டங்களை முன்னெடுப்பதை ஒரு போதும் ஏற்க முடியாது.இவர்கள் இது பற்றி மஹிந்த அரசு காலத்தில் வாய் மூடி மௌனியாக இருந்துவிட்டு இப்போது புது வீரத்துடன் இவ் அரசுக்கு எதிராக போராடுகின்றனர்.இவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும் இவ் அரசுக்கும் இடையில் எதுவித சம்பந்தமும் இல்லை.பசித்திருந்த பிள்ளை தன் தாயைக் கண்டதும் பாய்ந்து பால் அருந்த முயற்சிப்பது போன்றும் இப் பிரச்சினையை நோக்கலாம். கடந்த அரசாங்கங்களில் தங்களுக்குரிய தீர்வை சரியான விதத்தில் கேட்டுப் பெற முடியாத சூழ் நிலை இருந்தமை உண்மை தான்.மஹிந்த அரசு விட்ட அனைத்துப் பிழைகளையும் இவ் அரசால் உடனடியாக தீர்க்க முடியாது என்பதையும் இலங்கை மக்கள் உணர வேண்டும்.என்னதான் ஒரு தாய் தனது பிள்ளையின் பசியைப் போக்க நினைத்தாலும் தனது மார்பில் பால் இருந்தால் தானே பிள்ளைக்கு பால் கொடுக்க முடியும்.

கடந்த டிசெம்பர் மூன்றாம் திகதி அரச மருத்துவ சங்க வைத்தியர்கள் உள்ளிட்ட 18 சங்கங்கள் இணைந்து நடாத்திய போராட்டத்தில் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகள் சம்பந்தமாக அரசு கவனம் செலுத்த வேண்டுமா என்பதை இந் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நன்கு ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.ஒரு மனிதனின் ஆசையை ஒரு போதும் இன்னுமொரு மனிதனால் நிவர்த்திக்க முடியாது.இன்று ஒன்றைக் கேட்பார்கள்.அதைக் கொடுத்தால் நாளை வேறு ஒன்றைக் கேட்பார்கள்.இது மனித இயல்பு.கேட்பதையெல்லாம் வழங்கினால் எந்த திட்டத்தையும் திறம்பட செயற்படுத்த முடியாது.அடிப்படை சம்பளத்துடன் கொடுப்பனவுகளை இணைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என இவ் அரசு இவர்கள் போராட்டம் நடாத்துவதற்கு முன்பே அறிவித்துவிட்டது.கடந்த டிசெம்பர் 9ம் திகதி பாராளுமன்றத்தில் துறைமுக,கடற்துறை,மீன் பிடி,போக்குவரத்து,நீர்வள அபிவிருத்தி மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது உரையாற்றிய பிரதமர் அரச,தனியார் துறைக்கு ஒரே மாதிரியான ஓய்வூதியத் திட்டத்தை அமைக்க உள்ளதாகவும் அது தற்போதுள்ளவர்களுக்கு பொருந்தாது எனவும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

இவ் ஓய்வூதிய மாற்றம் தற்போதுள்ள அரச ஊழியர்களுக்கும் பொருந்தும் என திரிவுபடுத்தப்பட்டு அரச ஊழியர்களை சென்றடைந்தது.அரச தொழிலிலுள்ள இவ்வாறான சில சலுகைகளுக்காக தனியார்த் துறையை புறக்கணித்து அரச தொழில் பக்கம் வந்தவர்கள் உள்ளனர்.எனவே,தற்போதுள்ள அரச துறையினருக்கு ஓய்வூதிய முறையை மாற்றுவது அநீதி இழைப்பதாகும் என்பதில் இரட்டைக் கருத்தில்லை.அரச தொழில் பக்கம் இலங்கை மக்கள் அதிக நாட்டம் கொள்வதற்கு இவ் ஓய்வூதியத் திட்டம் தான் பிரதான காரணமாகும்.இத் திட்டம் ஒழிக்கப்பட்டால் அரச,தனியார் தொழில்களுக்கிடையில் எதுவித வேறுபாடும் இருக்காது.இலங்கை அரசு தனியார் மயப்படுத்தலை நோக்கி சென்று கொண்டிருக்கின்றதா என்ற வினாவும் இங்கே எழுகிறது.1961ம் ஆண்டு ஓய்வூதியத்திற்கு 83 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.2011ம் ஆண்டு 99 961 மில்லியனும்,2050ம் ஆண்டு இத் தொகை நான்கு மடங்கால் அதிகரிக்கப்படும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.இத் திட்டத்தில் மாற்றம் கொண்டு வராவிட்டால் இப் பாரிய தொகையை எதிர்கால அரசுகளால் சமாளிப்பது சவாலானதொரு விடயமாகும்.எனவே,நாட்டின் நலன் கருதி இத் திட்டத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டியது அவசியமனதாகும்.சில வேளை இது சிலருக்கு கசப்பாக இருந்தாலும் இதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.மேலும்,ஓய்வூதியத்தை முற்றாக ஒழிக்கப்போவதாகவும் இவ் அரசு அறிவிக்கவில்லை.ஓய்வூதியத் திட்டங்கள் எதுவும் இன்றித் தானே விவசாயிகள்,சுய தொழில் செய்பவர்கள் தங்கள் வாழ்வைக் கொண்டு செல்கிறார்கள்.இப்படி இருக்கையில் அரச துறையினரால் மாத்திரம் வாழ்க்கை நடாத்த முடியாது போன்று கோசம் எழுப்புகின்றனர்.மேலும்,இலங்கை நாட்டில் இலட்சக் கணக்கான இளைஞர் யுவதிகள் தொழில் ஒன்றை எதிர்பார்த்து ஏங்கி இருப்பதால் இவ் ஓய்வூதியத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவருவதன் மூலம் அரச தொழிற் துறைகள் முடங்கப் போவதுமில்லை.

ஒவ்வொரு வருட வரவு செலவுத் திட்டத்தின் போதும் அரச ஊழியர்கள் தங்களது சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என கோசம் எழுப்புவது சம்பிரதாய பூர்வ செயற்பாடாகிவிட்டது.இன்று அரச ஊழியர்களுக்கு தங்கள் அன்றாட வாழ்வை சிறந்த முறையில் நடாத்திச் செல்லும் அளவு சம்பளம் வழங்கப்படுகிறது.இளைஞர்,யுவதிகளில் அதிகமானோர் தனியார்த் துறையைப் புறக்கணித்து அரச தொழில் பெற்றுக் கொள்ள ஆர்வம் காட்டுகின்றமை இதற்கு போதுமான சான்றாகும்.எனவே,வரவு செலவுத் திட்டங்களில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை சிந்திப்பதை விட இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டான கைத்தொழிற் புரட்சி நோக்கி சிந்திப்பதுவே பொருத்தமானதாக இருக்கும்.எங்கு சென்றாலும் வேலை இல்லா இளைஞர்,யுவதிகள் சூழ்ந்து நிற்கின்றனர்.ஒரு நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து சிறைச் சாலைகள் நிரம்ப இளைஞர்,யுவதிகள் வேலை இல்லாமல் இருப்பதே பிரதான காரணமாக சுட்டிக் காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.இவ் அரசு இவ் வரவு செலவுத் திட்டத்தில் கைத் தொழில் புரட்சி விடயத்தில் கரிசனை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.எனினும்,இதனை திட்டமிடல் அமைச்சு நடைமுறைச் சாத்தியப்படுத்துமா என்பதற்கு எதிர்காலமே பதிலை வழங்கும்.

இலங்கை நாட்டை எத்தனையோ துறைகளில் முன்னேற்ற வேண்டிய தேவை உள்ளது.

இதற்கிடையில் சிலருக்கு தீர்வையற்ற வாகனம் வேண்டுமாம். இது பற்றி கருத்து தெரிவித்துள்ள பிரதமர் பத்து வருடங்களுக்கு ஒரு முறையே தீர்வையற்ற வாகனம் வழங்கப்படுவதோடு, ஒருவருக்கு இரு தடவைகள் மாத்திரமே வழங்கப்படும் எனக் கூறினார்.பிரதமரின் இக் கருத்திற்கு பதில் அளித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்க செயலாளர் நளின் ஹேரத் பத்து வருடங்களுக்கு ஒரு முறை தான் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்பதை தாங்கள் ஏற்கவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.தீர்வையற்ற வாகன இறக்குமதிகளுக்கு 80 மில்லியன் ரூபாய் செலவாவதாகவும்,இத் தொகையே வருடமொன்றிற்கு மருந்து கொள்வனவு செய்யும் தொகையாகும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். அரச வைத்தியர்களுக்கு சம்பளமும் அதிகரிக்க வேண்டும்.ஆடம்பரமாக இருக்க அரசு இவ்வாறான சலுகைகளையும் வழங்க வேண்டும். இப்படியான சலுகைகளை வழங்க இலங்கை நாட்டின் திறைசேரியில் பணம் நிரம்பி வழியவுமில்லை. எனவே,ஒரு வருட மருந்து கொள்வனவு செய்யும் தொகையை இதற்கு செலவு செய்யும் அளவு இது முக்கியமான தேவையும் அல்ல.சொகுசு வாகனங்களில் பயணித்தால் தான் ஒரு வைத்தியர் வைத்தியருக்குரிய முழுத் தகுதியையும் பெறுவதும் இல்லை.இலங்கை அரசு பல கோடிகளை செலவு செய்தே ஒரு வைத்தியரை உருவாக்குகிறது.மாசற சிந்தித்தால் இவர்கள் தான் இலங்கை அரசுக்கு உதவ வேண்டும்.உதவா விட்டாலும் நாட்டின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு இவ்வாறான சலுகைப் போராட்டங்களை முன்னெடுக்காமலாவது இருக்கலாம்.

கடந்த டிசெம்பர் மூன்றாம் திகதி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்த பிறகும் தங்களது பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு வழங்கப்படாத போது நாடு பூராகவும் மருத்துவ சேவைகள் நிறுத்தப்படும் என வைத்திய சேவைகள் தொழிற் சங்க ஒன்றியக் கூட்டமைப்பின் தலைவர் அஜித்.பீ திலகரத்ன தெரிவித்தார்.எனினும்,கடந்த பதினோராம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரசிங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் பேச்சு நடாத்த சந்தர்ப்பம் வழங்கப்படாது என மிகவும் இறுக்கமாக தெரிவித்திருந்தார். எனினும்,சு.காவின் ஆலோசனையின் பேரில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தை வழங்க பிரதமர் ஒப்புக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டப் பிரச்சினை சென்று கொண்டிருந்த போது சுகாதாரம்,தபால், பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட 150 அரச,தனியார் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக அறிவித்தன.1983ம் ஆண்டு நடைபெற்ற போராட்டமே இலங்கை வரலாற்றின் மிகப் பெரிய போராட்டமாக பதிவாகியுள்ளது.இதில் அரச தொழிற் சங்கங்கள் மாத்திரமே பங்கு கொண்டிருந்தன. ஆனால்,இதில் அரச மற்றும் தனியார் அத்தனை நிறுவனங்களும் பங்குபற்றத் தயாராக இருந்தன.இப் போராட்டத்தை அவர்கள் திட்டமிட்டபடி முன்னெடுத்திருந்தால் இலங்கை நாடே இயக்கமின்றி முடக்கப்பட்டிருக்கும்.இதுவே இலங்கை வரலாற்றில் உடைக்க முடியாததொரு தொழிற் சங்கப் போராட்டமாக பதிவாகி இருக்கும்.இது நல்லாட்சி என வர்ணிக்கப்படும் இவ் ஆட்சிற்கு வரலாற்றில் ஒரு கரும் புள்ளியை ஏற்படுத்தி இருக்கும்.இது பற்றி கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் பேச்சு வார்த்தை ஏதும் நடாத்தாமல் இவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு செல்லுவதாக குற்றம் சுமத்தினார்.பிரதமரின் இக் குற்றச் சாட்டிற்கு இத் தொழிற் சங்கங்கள் எதுவித பதிலையும் அளிக்காமை இக் கருத்தின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள போதுமான சான்றாகும்.

பேச்சுவார்த்தைகள் நடாத்தி அதில் சுமுகமான தீர்வுகள் எட்டப்படாத போதே வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பது வழமை.பேச்சு வார்த்தைகள் எதுவும் நடாத்தாது முன்னெடுக்கப்படும் போராட்டங்களை அரசுக்கான ஒரு கண்டிப்பாக மாத்திரமே நோக்கலாம்.போராட்டம் நடாத்துவதற்கு நாள் குறித்துவிட்டு பேச்சு வார்த்தைக்கு வருவதை ஒரு விசித்திர நிகழ்வாகவே பார்க்க வேண்டும்.விசித்திர திட்டத்தின் பின் விபரீத திட்டங்களும் உள்ளதா என்ற சந்தேகத்தையும் இது கிளறி விடுகிறது.இதற்கு ஏற்றாப் போல் இவர்கள் இறுதி நேரத்தில் இப் போராட்டத்தை கை விடுவார்கள் என்பதை நான் அறிவேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.இவர்கள் கை விடுவார்கள் என்பது தனக்கு தெரியும் என்ற வார்த்தை இப் போராட்டக்காரர்களுக்கு அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ இருந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.இவர்கள் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்த நாள் கா.பொ.த.சா. தரப் பரீட்சை நடைபெற்ற தினமாகும். இவர்கள் திட்டமிடப்பட்டபடி போராட்டத்தை தொடர்ந்திருந்தால் அன்று அப் பரீட்சையை அரசு பிற்போட்டிருக்க வேண்டும். இதனால் மாணவர்கள் உள ரீதியான பாதிப்புக்கு உள்ளாகி இருப்பார்கள். இதை வைத்துப் பார்க்கும் போது இவர்களின் போராட்டத்தில் பொது நலத்தை விட சுய நலம் மிகைத்துக் காணப்படுவதை அறிந்து கொள்ளலாம்.

இவ் 150 தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை செவ்வனே செய்து கொண்டிருந்த போது தனியார் போக்குவரத்து சங்கமே முதலில் தலையை உள்ளுக்கு இழுத்தது.தனியார் போக்குவரத்து சங்கத்தின் பிரதான கோரிக்கை வாகன புகை பரிசோதனைக் கட்டணம் அதிகரித்தமையாகும். இரு,மூன்று சக்கர வண்டிகள் தவிர்ந்து மற்றைய வண்டிகளின் புகைப் பரிசோதனைக்கான ஐயாயிரம் ரூபாயை அறவிட இவ் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.மைத்திரி தலைமையிலான புதிய ஆட்சியில் எரி பொருட்களின் விலை வெகுவாக குறைத்திருந்தன.இதனால் போக்குவரத்து துறை கடந்த ஆட்சிக் காலங்களை விட இவ் ஆட்சியில் பல மடங்கு இலாபங்களை பெற்றுக்கொண்டுள்ளது.இவ் ஆட்சியின் மூலம் அதிக இலாபங்களை பெற்றுக்கொண்ட ஒரு துறையாகவும் போக்குவரத்துத் துறையினை குறிப்பிடலாம்.இப் புகைப் பரிசோதனைக் கட்டண அதிகரிப்பானது இவ் ஆட்சியின் எரிபொருள் குறைப்பினால் ஏற்பட்ட ஒரு நாள் இலாபம் அளவுதான் இருக்கும்.

கடந்த அரசின் எரிபொருள் விலையை இவ் அரசும் பேணி இருந்தால் இவ் ஐயாயிரம் கட்டணத்தை இல்லாமல் செய்து இலவசமாகவே இச் சேவையை தொடர்வதற்கான போதுமான வருமானம் இவ் அரசுக்கு கிடைத்திருக்கும். இவ் வருமானத்தைக் கொண்டு மேலும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி நற்பெயரும் பெற்றிருக்கலாம்.நேர்மையான விதத்தில் சில விடயங்களை எதிர்கொள்ள முடியாது என்பதற்கு இவைகளும் ஒரு சான்றாகும்.இறுதியில் புகைப் பரிசோதனைக் கட்டணத்தைக் குறைக்க அரசு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும்,போக்குவரத்து சங்கமே முதலில் தலையை உள்ளுக்கு இழுத்து இப் போராட்டத்தின் ஒழுங்கமைப்பை சீர் குலைத்து இவ் அரசு முகம் கொடுக்க இருந்த மிகப் பெரிய சவாலை இல்லாதொழிக்க உதவி புரிந்துள்ளது.இதனைத் தொடர்ந்து புகையிரத சங்கமும் போராட்டம் செய்யும் எண்ணத்தை கைவிட்டது. இப்படியாக போராட்டமே கை விடப்பட்டது.மிகவும் சிரிய விதத்தில் திட்டமிடப்பட்டிருந்த இப் போராட்டத்தை இவ் அரசு மிகத் திறமையான விதத்தில் எதிர்கொண்டுள்ளமையானது இவ் ஆட்சியின் மீது நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

நிலைமை இவ்வாறு சென்று கொண்டிருக்கையில் கோவணத்துடன் சிலர் கொழும்பில் களமிறங்கினர்.தற்போது எந்த விவசாயியும் கோமணத்துடன் விவசாயம் செய்வதில்லை.தற்போதைய விவசாயிகளால் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக உண்மை விவசாயி கோவணம் அணிவதை வெட்கித்திருப்பான். ஆனால்,வெட்கம் இன்றி மிக ஆபாசமான விதத்தில் இவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தமையானது இவர்கள் விவசாயிகளா? அல்லது அம்மணத்தை வெளிப்படுத்த விலை கொடுத்து வாங்கப்பட்டவர்களா? என்ற வினாவைத் தோற்றுவிக்கிறது.இவர்களின் பிரதான கோரிக்கைகளாக நெல் விலையை உறுதிப்படுத்தல்,உரமானிய சலுகை மறுப்பு ஆகியன இருந்தன.

(11 ஆம் பக்கம் பார்க்க)

### பொது மைதானம் அமைக்கும் போர்வையில்

# மாவனல்லையில் முஸ்லிம்களின் காணிகளை அபகரிக்க சதித்திட்டம்

(நுஸ்கி முக்தார்)

மாவனல்லை, கொழும்பு கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள பலகோடி ரூபா பெறுமதியான முஸ்லிம்களின் காணிகளை அபகரிப்பதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டு வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொது மைதானம் அமைக்கும் நோக்குடன் குறித்த இடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாகாண சபை உறுப்பினர் ஒருவர் முழுமூச்சாக செயற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறித்த மாகாண சபை உறுப்பினர் மாவனல்லை பிரதேச சபைத் தலைவராக இருக்கும்போது குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்தார். எனினும், அது சாத்தியப்படவில்லை. 5 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட குறித்த இடமானது தற்போது வயல்வெளியாகவே உள்ளது.

இதில் பெரும்பான்மை சமூகத்தினருக்குச் சொந்தமான இடங்கள் இருந்தபோதிலும் பொது மைதானத்திட்டம், கொழும்பு கண்டி பிரதான வீதியை தழுவியதாக அதுவும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் உள்ள பகுதியில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்த திட்டத்தில், மஹவத்தை என்ற கிராமத்தைத் தழுவியதாக மைதானத்தளம் அமைக்க பிரதேச சபை பிரதித்தலைவராக இருந்த முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் ஆலோசனை வழங்கியிருந்தார். எனினும், அப்பகுதிக்குள் பல சிங்கள மக்களது காணிகள் உள்ளடங்குவதனால் அத்திட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில், தற்போது மாகாண சபை உறுப்பினராக உள்ள குறித்த மாவனல்லை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாகவும் ஜனவரி மாத இறுதியில் மைதான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, மாவனல்லை நகரில் ஏற்கனவே பொது மைதானம் ஒன்று உள்ளதுடன், மேலும் இரண்டு பிரமாண்டமான மைதானங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

இம்மைதானங்களில் பல குறைப்பாடுகள் நிழவும் நிலையில் அவற்றுக்கு தீர்வு வழங்காது புதிய மைதானம் அமைக்கப்படுவதன் உள்நோக்கம் என்ன எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குறித்த மைதானம் மஹவத்தை கிராமத்தைத் தழுவி அமைக்கப்பட்டால் அதன்மூலம் முஸ்லிம்களே அதிகமாகப் பயன்பெறுவார்கள். அதனைத் தடுப்பதற்காகவே கொழும்பு கண்டி பிரதான வீதிக்கு அருகில் மைதானத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் மாவனல்லை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசிய கட்சி பொதுச் செயலாளரும், அரச தொழில்முயற்சிகள் மற்றும் அபிவிருத்தி அமைச்சருமான கபீர் ஹாஷிம், உள்ளிட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

## விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு அமைச்சர் ஹக்கீம் அனுதாபம்



உம்ரா பயணத்திற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக சம்மாந்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வரக்காபொலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற கோர வாகன விபத்தில் உறவினர்கள் ஆறு பேர் காலமான செய்தியை அறிந்து தாம் அதிர்ச்சியும், கவலையும் அடைந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்த துக்ககரமான சம்பவம் குறித்து அமைச்சர் ஹக்கீம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

புனித மக்காவுக்கு செல்லும் நல்ல நோக்கத்துடன் அதற்கு உரிய ஏற்பாடுகளை கவனிப்பதற்காக கொழும்புக்குச்

சென்றுக் கொண்டிருந்த வேளையில், குழந்தைகள் உட்பட சம்மாந்துறையைச் சேர்ந்த ஒணமர் இவ்வுலக வாழ்க்கையை துறக்க நேர்ந்த சம்பவத்தினால் சம்மாந்துறையில் மட்டுமல்லாது, பொதுவாக நாட்டு மக்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இத்துயரத்தில் தனிப்பட்ட முறையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் நானும் பங்குகொள்ளுகின்றேன். அத்துடன், இவ்வுலக வாழ்வு நிரந்தரமற்றது என்ற காரணத்தினால், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இந்த சோக முடிவினை தாங்கிக்கொள்கின்ற மனவலிமையை எல்லாம் வல்ல அல்லாஹ் வழங்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் ஏனையோர் சுகமடையவும், மரணமானவர்கள் மேலான சுவன வாழ்வை அனுபவிக்கவும் அல்லாஹ்வை இறைஞ்சுகின்றேன்.

## யாழ். மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம்

(எம்.எல்.லாபிர்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன யாழ் மாவட்ட சம்மேளனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாக தலைவர் ஐ.எஸ்.நிராஸ், செயலாளர் என்.எம்.றிஸ்வி (ஆசிரியர்), பொருளாலர் ஏ.ஸீ.எம்.சகனாஸ், பிரதித் தலைவர் எம்.எஸ்.ஜாபிர், பிரதி செயலாளர் எம்.றிஸ்லான் இவர்களுடன் எம.ஐ.எம். லிபான், ஏ.ஹம்ஸா, எஸ்.எம்.ஏ.ரஹீம், ஐ. ஸஹூல் ஹமீத், எஸ்.எச்.எம். நஸீர், எம்.ஐ.எம்.சியாத் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் எம்.எஸ்.ரஹீம் (முன்னாள் வை.எம்.எம்.ஏ தலைவர்) ஓய்வுபெற்ற ஆசிரியர் ஏ.எச்.மஹ்ரூப் ஆலோசகர்களாகவும், யாழ் மாவட்ட அமைப்பாளர் எம்.எல்.லாபிர் யாழ் மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனத்தை வழிநடத்துவார்.



# அமைச்சர் றிஷாத் பதியுதீன் குர்ஆனில் சத்தியம் செய்யாமை பாராட்டுக்குறியது

### உலமாக்கட்சி தலைவர் முபாரக் மௌலவி

தேரருடனான தொலைக்காட்சி விவாதத்தின் போது அமைச்சர் ரிசாத் பதியுதீன் குர்ஆனில் சத்தியம் செய்யாமை பாராட்டுக்குரிய விடயம் என முஸ்லிம் உலமா கட்சித்தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார். அவர் இது பற்றி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது,

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும் ஆனந்த சாகர தேரருக்குமிடையில் நடந்த விவாதத்தில் குர்ஆன் மீது சத்தியம் செய்யும்படி சென்னது சம்பந்தமாக பலரும் எம்மைக் கேட்கிறார்கள்.

தேரர் முன் வைத்த குற்றச்சாட்டுக்களை அவர் நிருபிக்க வேண்டும் என்பதே விவாதத்தின் அடிப்படையாகும். சுமார் மூன்று மணி நேரம் விவாதம் நடந்தும் தேரரால் தமது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை முன் வைக்க முடியவில்லை. இறுதியில் இத்துடன் இந்த விவாதம் முற்றுப்பெறுகின்றது என அறிவிப்பாளர் கூறி மின்சார குமிழ்கள் அணைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குர்ஆனில் சத்தியம் செய்ய முடியுமா என தேரர் திடீர் என வினவியது அனாவசியமான ஒன்றாகும். காரணம் முஸ்லிம்கள் ஒரு போதும் குர்ஆனில் சத்தியம் செய்ய மாட்டார்கள். இறைவன் ஒருவன் மீது மட்டுமே சத்தியம் செய்ய வேண்டும் என்பதே இஸ்லாத்தின் போதனையாகும்.

அதே வேளை இவ்வாறு சத்தியம் செய்து நிருபிக்க வேண்டும் என்றிருந்தால் சுமார் மூன்று மணி நேரம் நேயர்களின் நேரத்தை வீணடித்திருக்க தேவையில்லை. அதற்கு ஐந்து நிமிடங்கள் மட்டுமே போதுமானதாகும். அமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மை என தேரர் தமது தம்ம பதத்தின் மீது சத்தியம் செய்ய அதனை அமைச்சர் மறுத்து இறைவன் மீது சத்தியம் செய்வதுடன் விடயம் ஐந்து நிமிடத்துள் முற்றுப் பெற்றிருக்கும். ஆக இந்த விவாதம் என்பது ஆதாரங்கள் முன் வைக்கப்பட வேண்டும் என்பதுதானே தவிர சத்தியம் செய்தல் தலைப்பு அல்ல. அப்படித்தான் அல்குர்ஆன் மீது சத்தியம் செய்வது என்றிருந்தாலும் கூட அல்குர்ஆனை முழுமையாக ஏற்றுக்கொள்பவர்தான் அந்த சத்தியத்தையும் ஏற்பார்.

அதே போல் பௌத்த தம்ம பதத்தின் மீது தேரர் சத்தியம் செய்ய வேண்டும் என அமைச்சராலும் கூற முடியாது. காரணம் அல்லாதவற்றில் சத்தியம் செய்யும்படி ஒரு முஸ்லிம் மற்றவரை கூற முடியாது. அந்த வகையில் அல்குர்ஆன் மீது சத்தியம் செய்து அதனை ஒரு விளையாட்டாக கருதுவதற்கு இடமளிக்க முடியாது என்ற வகையில் அதிலிருந்து அமைச்சர்

ரிசாத் பதியுதீன் தவிர்ந்து கொண்டமையை முஸ்லிம் சமயத்தலைவர்களின் கட்சி என்ற வகையில் உலமா கட்சி பாராட்டுகிறது. இது பற்றிய இஸ்லாமிய சட்டத்தை அவர் நன்கு தெரிந்து வைத்துள்ளார் என்பது மகிழ்ச்சியை தருகிறது.

## திப்பிடியில் பாலர் பாடசாலை திறப்புவிழா

(அரனாயக்க நிருபர் பாரா தாஹிர்)

புதிதாக நிர்மானிக்கப்பட்ட அரனாயக்க திப்பிடிய அல்மனாருல் உலூம் பாலர் பாடசாலைக் கட்டிடம் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி அல்மனார் ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் எம்.யூ. பர்ஹான் முஹம்மத் தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

வில்பொலை அல்மனார் ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்ற இப்பாலர் பாடசாலை, பல குறைகளோடு இயங்கிவந்தது. இந்நிலையில் அல்மனார் மஸ்ஜித் முன்னாள் பரிபாலன சபைத் தலைவர் பவாஸ் ஹுஸைனின் முயற்சியாலும் திப்பிடியைச் சேர்ந்த பொருளியலாளர் நியாஸ் அப்பாஸி மற்றும் குவைத் நாட்டு பொருளியலாளர் ஸஃத் மாஜித் அத்தென்ஹானி ஆகியோரின் உதவியோடு இப்பாலர் பாடசாலை நவீன வசதிகளோடு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு திறந்துவைக்கப்படவுள்ளது.



பாலமுனை அல் ஈமானிய்யா அறபுக் கல்லூரியின் ஐந்து வருட பூர்த்தியும் கௌரவிப்பு விழவும் ''ஈமானிய விருட்சம்' மலர் வெளியீடும் கடந்த (30) ஆம்திகதி பாலமுனையில் நடைபெற்றது.

பாலமுனை 2004 ஓ.எல். நண்பர்கள் குழு அறபுக் கல்லூரிக்கு ஒலி பெருக்கி உபகரணத் தொகுதியை அன்பளிப்புச் செய்வதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம் காணலாம்.

(பி. முஹாஜிரீன்)

# தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக சு.க. உறுப்பினர்கள் அறிவிக்கவில்லை

### சு.க. செயலாளர் துமிந்த திஸாநாயக்க

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சு.க. உறுப்பினர்கள் மற்றும் ஐ.ம.சு.முவின் அங்கத்துவ கட்சிகள் என்பன தனித்துப் போட்டியிடுவது தொடர்பாகவோ, தேர்தலில் கூட்டு சேர்வது தொடர்பாகவோ எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பினையும் கட்சிக்கு அறிவிக்கவில்லை என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், விவசாய அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துக் தெரிவித்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்றவகையில் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சி ஆலோசகர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆகியோரது வழிகாட்டலில் நாங்கள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைகள் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளோம்.

இந்நிலையில், பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தேர்தலின்போது புதிய கூட்டணி அமைத்து தேர்தலில் களமிறங்கவுள்ளதாகவும், அதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கம் வகிக்கும் சில கட்சிகளும் கூட்டணி அமைக்கவுள்ளதாகவும் உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் எதுவும் சம்மந்தப்பட்ட தரப்பினரால் கட்சிக்கு அறிவிக்கப்படவில்லை.

தேர்தல் தொடர்பில் முதற்கட்ட பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். இதுவரை பேச்சு நடத்திய கட்சிகள் எம்மோடு கூட்டணி அமைத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். ஐ.ம.சு.மு. அங்கம் வகிக்காத பல கட்சிகளும் எம்மோடு கூட்டு சேர தீர்மானித்துள்ளனர்.

ஆகஸ்ட் 16 ஆம்திகதி ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியான எமக்கு தனித்து ஆட்சியமைக்கக் கூடிய சூழல் இருந்தது. அதேபோன்று, ஐ.தே.கவுக்கும் ஆட்சியமைப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தது. எனினும், மக்களின் எதிர்ப்பார்ப்புக்கள், ஜனாதிபதித் தேர்தலில் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே நாங்கள் இரண்டு வருட ஒப்பந்தத்துக்கு அமைய தேசிய அரசினை அமைத்துக் கொண்டோம்.

அரசின் நல்ல விடயங்களுக்குப் பாராட்டு தெரிவிப்பதுடன், தவறுகளை சுட்டிக்காட்டி நேர்மையான விதத்தில் விமர்சனம் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றனர். என்றார்.

## மார்க்க சொற்பொழிவு

(பேருவளை முக்தார்)

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குவிஜயம் செய்துள்ள இஸ்லாமிய மார்க்க அறிஞர் மௌலவி ஹாபிழ் ஹாஜாய முகைதீன்(பாகவி) மார்க்கச்சொற்பொழிவு நிகழ்ச்சி எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு பேருவளை சீனன் கோட்டை எகொடவத்தை தாருல் உலூம் ஸாவியா மஸ்ஜித் பள்ளிவாசலில் இடம்பெறும்.

அன்றைய தினம் அஸர் தொழுகையைத் தொடர்ந்து சுபஹான மௌலூத் மஜ்லிஸும் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து ஹழறா (திக்ர்) துஆப் பிரார்த்தனை ஆகியன இடம்பெறவுள்ளதாக பள்ளிவாசல் தர்மகர்த்தா எம்.ஜே.எம் முஹம்மத் ராஸிக் தெரிவித்தார்.

## பாலியல் இலஞ்சம் கோரிய பொலிஸ் சார்ஜன்ட் கைது



(வத்துகாமம் நிருபர்)

எப்பாவலை பொலிஸ் நிலைய சார்ஜன்ட் ஒருவர் பாலியல் இலஞ்சம் கோரிய விடயம் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 30 ஆம் திகதி சட்டத்தை முறையாக நடைமுறைப் படுத்தப்படாமல் இருப்பதற்கு தனக்கு பாலியல இலஞ்சம் தரவேண்டும் என பெண் ஒருவரிடம் கோரிக்கை விடுத்தது தொடர்பாக பொலிஸ் சார்ஜண்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இது தொடாபாக இலஞ்ச மோசடி ஒழிப்புப்பிரிவினர் கொழும்பு மேல் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இது விடயமாகத் தொடார்புடைய எப்பாவல பொலிஸ் நிலைத்தில் கடந்த 19ஆம் திகதியன்று கடமையில் இருந்து பொலிஸ் சார்ஜண்ட் மேற்படி பாலியல் இலஞ்சக் கோரிக்கையை விடுத்து அதனை பெற்றுக் கொள்ளச் சென்ற சமயம் இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

## யாழ். ஒஸ்மானிய பழைய மாணவர் சங்க கூட்டம்

(யாழ் விசேட நிருபர் எம்.எல்.லாபிர்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் பழைய மாணவசங்கபுதியஉத்தியோகத்தர்கள்தெரிவு எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தாய் சங்கம் உள்ளூர் மட்டத்திலும் கிளைச் சங்கம் வெளியூர் மட்டத்திலும் அமைக்கப்பட்டு கிளைச்சங்க உறுப்பினர்கள் தாய் சங்கத்துடன் உள்வாங்கப்படுவார்கள் என அதிபர் எம். அஷ்ரப் தெரிவித்தார்.

Understand the,
Holy Quraan
in English
Receive an English Translation of an Ayath from Holy Quraan daily at 6.00AM.
type REG<space>QURAAN
and send to 77000
on your dialog mobile
Start your day with an Ayath from Holy Quraan
1/- per day

O/L செய்தவர்களுக்கும் ஆங்கிலம் படிக்க விரும்புகின்ற அனைவருக்கும்....
An easy way to speak
ENGLISH
98 Batch
கண்டியில் NCI
127, Kotugodella Street. (Com. Bank, YMCA எதிரில்)
JANUARY 4 திங்கள் 9.30 திங்/ புதன் 9.30-1.30
மாத்தளையில் நவோதயம்
No. 172 A, King's Street.
JANUARY 5 செவ். 9.30 செவ்./ வெள்ளி 9.30 - 12.30
குருநாகலையில் Computer Centre IACS
Mihindu Mw., Colombo Road. (Situ Medura Hotel எதிரில்)
JANUARY 9 சனி 9.30 சனி/ ஞாயிறு 9.30 - 1.30
கம்பளையில் VBS
Kandy Road, Gampola.
(Zahira College Railway Gate அருகில்)
JANUARY 3 ஞாயிறு 9.30 ஞாயிறு 9.30-1.30
அக்குறணையில் College of English
Akurana 07. (ISS Hospital பின்னால்)
NIGHT CLASS
BOYS JANUARY 4 திங்/ புதன் 7.00-9.00 PM
GIRLS JANUARY 5 செவ்./ வெள். 3.00-5.00
FAZLY NAWAZ
Tel: 077-3439425 / 077-3535666

சமூகம் சமய அரசியல் NAVAMANI WEEKLY
நவமணி
தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
03RD JANUARY 2016 - SUNDAY

# புதிய அரசியலமைப்பிற்கு மக்கள் கருத்தறியும் முயற்சி பாராட்டுக்குரியது

உதயமாகும் புது வருடத்தில் அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களை அறிமுகப்படுத்துவதற்கு முக்கியத்துவமளித்துச் செயற்படுவதற்கு தீர்மானித்து பல நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிப்படி நிர்வாக அதிகாரம் மிகு ஜனாதிபதி முறையை மாற்றி பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதியிலிருந்து பாராளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாறி அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றி ஆராயவுள்ளது. ஆறு மாத காலத்துக்குள் செயற்பாடுகளை நிறைவுக்குக் கொண்டு வருவதற்கும் அரசு இலக்கிட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளை எவ்வித ஒளிவு மறைவுகளுமின்றி பகிரங்கமாக மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் புதிய அரசியலமைப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டியமாற்றங்களைப்பற்றிமக்கள்கருத்துக்களைக் கேட்டறிய 247 பேர்களைக் கொண்ட ஒரு குழுவினரைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். இக்குழுவில் நாட்டின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் அரசியலமைப்புத் துறை பேராசிரியர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவில் நாடு அங்கீகரிக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் பலர் நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இடதுசாரி அரசியல்வாதியான சிரேஷ்ட சட்டத்தரணி லால் விஜேநாயக்க தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் பல்வேறு அரசியல் கருத்துடையவர்கள் உள்வாங்கப்பட்டிருப்பது திருப்தியை அளிக்கின்றது.

பொதுமக்களின் கருத்துக்களைத் திரட்டி இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கான அறிக்கையொன்றை அரசமைப்பு நிர்ணயம் தொடர்பான அமைச்சரவை உபகுழுவுக்கு கையளிக்கவுள்ளது.

இந்த நாட்டில் மூன்று முறை அரசியலமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இந்தச் சந்தர்ப்பங்களில் மக்கள் கருத்துக்களை விட அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கே முக்கியத்துவமளிக்கப்பட்டன. இந்தப் பின்னணியில் இம்முறை மக்கள் கருத்துக்களைப் பெறுவதற்கு முக்கியத்துவமளித்திருப்பது வரவேற்புக்குரியது.

இந்தக் குழு நாட்டின் சகல தரப்பினர்களதும் கருத்துக்களைப் பெறவுள்ளது. அரசியலமைப்புச் சட்டம் என்பது ஒரு கட்சியின் கருத்தாக இருக்கக்கூடாது.

1970, 1978 அரசியல் திட்டங்கள் அவசர காலத்தில் பதவியிலிருந்த அரசியல் கட்சிகளது அபிலாஷை மற்றும் எண்ணங்களை பிரதிபலித்து தயாரிக்கப்பட்டது. அவை வெற்றியளிக்காமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். தற்போதுள்ள அரசியலமைப்புத் திட்டம் இப்போது 19 திருத்தங்களுடனே அமுல்படுத்தப்படுகின்றது.

புதிய அரசியல் திட்டத்தினூடாக நாட்டில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படல் கட்டாயமாகச் செய்யப்படவேண்டும். இத் தீர்வு நாட்டின் எந்தவொரு சமூகத்தையும் பாதிப்பதாக அமையக்கூடாது.

எனவே இது தொடர்பாகவும் மக்களின் கருத்துக்களை கண்டறிவது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 24 பேர் கொண்ட குழுவுக்குள்ள பொறுப்பாகும்.

தமிழ்த் தரப்பில் ஏற்கனவே அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் முஸ்லிம் தரப்பில் இதுவரை அவ்வாறான முன்னெடுப்பு ஒன்றினை காணவில்லை.

சிறுபான்மை மக்களுக்குப் பொறுப்பான ஓர் அரசியலமைப்புத் திட்டத்தை வகுப்பது காலத்தின் தேவையாகவுள்ளது. இதனைச் சரியாக நிறைவேற்றிக் கொள்வது தமிழ்த் தரப்பில் ஏற்கனவே அரசியலமைப்பு ... முஸ்லிம் தரப்பில் ஒருமித்த கருத்துக்களை முன்வைப்பதற்கு இப்போதிருந்தே தயாராகவேண்டும்.

முஸ்லிம்அரசியல்கட்சிகள்,சிவில்அமைப்புக்கள்இது குறித்து அக்கறைகாட்டிதம்சமூகஅரசியல்அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலும், நாட்டின் பொதுப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகள் காணக்கூடிய பிரேரணைகளை இக்குழுவூடாக அரசுக்கு முன்வைக்கவேண்டும்.

---

**கஹட்டோவிட்ட முஹிடீன்**

# வில்பத்து விவாதம்

# ஓர் ஓரக்கண் பார்வை






வில்பத்து வன அழிப்பு தொடர்பில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஒரு வகையான பீதியை இனவாத ஊடகங்கள் விதைத்து வருவதை அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஒரு விடயம் குறித்த சிந்தனையை மக்கள் உள்ளங்களில் தொடர்ந்தும் சூடேற்றி வைத்துக் கொள்வதற்கு இலத்திரனியல் ஊடகங்கள் மிகவும் பொருத்தமானது என்பதை விளங்கப்படுத்தி தெரிய வைக்கும் காலம் அல்ல இது.

வில்பத்து காடழிப்பு விவகாரம் தொடர்பில் அதிகம் பேசப்படும் ஒருவராக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் காணப்படுகின்றார். இவர் மீது இனவாதிகள் பெரும் காழ்ப்புணர்வோடு செயற்பட்டு வந்தமைக்கு வரலாறு சான்று சொல்லும். பொது பல சேனா என்றும் ராவணா பலய என்றும் தற்பொழுது சங்க சம்மேளன என்ற பெயரிலும் இது வெளிப்பட்டுள்ளது.

ஊடகங்களில் சூடுபிடித்து தணிந்து மீண்டும் இனவாதிகளினால் தூசு தட்டப்பட்டு வரும் வில்பத்து காடழிப்பு விவகாரம் நேற்றுமுன்தினம் இரவு தனியார் தொலைக்காட்சி அலைவரிசையில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியில் மீண்டும் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டது.

தனது செய்தி அறிக்கைகளில் தொடர்ந்தும் விடுபடாமல் கறிக்கு உப்புச் சேர்த்துக் கொள்வதுபோல வில்பத்து விடயத்தில் அதிகம் சிரத்தை எடுத்துக் கொள்ளும் ஒரு தொலைக்காட்சி அலைவரிசையே நேற்றிரவு நீண்ட நேரத்தை இதற்காக ஒதுக்கியது.

விகாரமகா தேவிப் பூங்காவில் வில்பத்து முஸ்லிம்களின் குடியேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு பங்கம் ஏற்படுத்தும் விதத்திலும் தேசிய சங்க சம்மேளம் ஏற்பாடு செய்த ஊர்வலமொன்றில் விடுக்கப்பட்ட சவாலுக்கான பதிலாகவே இவ் விவாதம் இடம்பெற்றது.



இதில் கலந்துகொண்ட சங்க சம்மேளனத்தில் பொதுச் செயலாளர் சாகர தேரர், ஏற்கனவே வில்பத்து விவகாரத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு இனவாதம் கக்கிய ஒருவர் என்பதை தெரியாதவர்கள் மிகக் குறைவு.

அமைச்சர் ரிஷாட் இந்த தேரரின் சவாலை எதிர்கொண்டபோது பலரும் சமூக வலைத்தளங்களில் அமைச்சரின் தீர்மானத்துக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். ஏனெனில் குறித்த அலைவரிசை வில்பத்து விவகாரத்தில் ஒரு தீர்மானத்தை வைத்துக் கொண்டு செயற்படும் ஒரு நிறுவனம்.

இது இவ்வாறிருக்கையில் உண்மை தன்பக்கம் இருந்தாலும், தனியாக அமைச்சரினால் நாடு முழுவதிலுமுள்ள மக்கள் நேரடியாக தொடர்புபடும் ஒரு நிகழ்ச்சியின் மூலம் அவர்களை முகம்கொடுக்க முடியாமல் போகும் என்ற பயமே, இவ்வாறு எதிரான கருத்துக்கள் எழுவதற்கு காரணமாக இருந்திருக்கும் என்பது தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்களின் போக்கில் விளங்க முடியுமாக இருந்தது.

நிகழ்ச்சியின் போது அமைச்சர் முன்வைத்த நியாயங்கள் சட்டத்தைத் தாண்டி மனித நேயமுள்ள உள்ளங்களை கனிய வைத்திருக்கும் என்பதை பார்த்தவர்களுக்கு கூறத் தேவையில்லை. ஏற்கனவே வில்பத்து விவகாரத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதும் அத்துடன், அதுவிடயமாக பல வருடங்கள் பிரச்சினைக்கு தீர்வு தேடும் ஒருவர் என்ற வகையிலும்இ இந்நிகழ்வில் அமைச்சரின் கருத்து பலமாக காணப்பட்டது என்பது பலரதும் அபிப்பிராயமாக இருந்தது.

சங்க சம்மேளத்தின் தேரர் முன்வைத்த கருத்துக்களின் சாராம்சம், இறுதியில் அவர் கூறிய இனவாத நச்சுத் துளியிலிருந்து அனைவருக்கும் புரிந்து போனது. உண்மையில் வில்பத்துவில் காடுகள் அழிக்கப்படுவது அல்ல அவர்களது பிரச்சினை என்பதை அவர் தன்னை அறியாமலேயே கூறவேண்டி ஏற்பட்டது.



"வில்பத்துவில் முஸ்லிம் கொலனி உருவாக விடமாட்டோம். இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். குடியேற்றத்தின் போது ஓர் இனம் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படக் கூடாது. புலிகளின் 30 வருட கால யுத்தத்துக்கு காரணமாக அமைந்தது தனி இனம் அங்கு காணப்பட்டமையே" ஆகும் என தேரர் கூறினார்.

முஸ்லிம்களுக்கு ஒரு தொடர் நிலத் தொடர்புள்ள பிரதேசம் வருவதே அவர்களது பிரச்சினை என்பதை தேரர் இறுதியில் தெளிவாக முன்வைத்தார்.

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். இருப்பதாக புலனாய்வுத் துறை தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப் பயங்கரவாதம் கொலனிகளில் தான் முதலில் இடம்பிடிக்கும் எனவும் தேரர் எங்கிருந்தோ சேகரித்த தகவல்களை மறைத்து வைத்துக் கூறினார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட காடழிப்பு நடவடிக்கைகளுக்கான ஆதாரங்களை அமைச்சர் இதன் போது பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளின் சேகரிப்பாக முன்வைத்தார். இவ்வாறு இலங்கையில் காடுகள் அழிக்கப்படுகின்றது. ஊடகங்களில் பல விதத்திலும் பலரும் குரல் எழுப்பியுள்ளனர்.

ஏன்? இந்த விடயங்கள் இந்த இனவாத கடும்போக்காளர்களின் கண்களுக்கு தென்படுவதில்லையென அமைச்சர் கேள்வி எழுப்பினார். இழந்த உரிமையைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமாக பெற்றுக்கொடுக்க எடுக்கும் முயற்சிக்கு இத்தனை தடைகள் ஏன்? எனவும் அமைச்சர் தொடுத்த வினா மனித நேயமுள்ள மனதை இலக வைத்திருக்கும்.

அரசாங்கத்தினால் வில்பத்து காட்டுப் பிரதேசமாக இணைத்துக் கொள்ள வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களிலேயே தேரர் பிடியாக இருந்தார். அமைச்சர் பேசிய மனித நேய நியாயங்களும், அங்கு குடியேற்றப்பட்டவர்கள் வாழ்ந்ததற்கான எழுத்து மூல சான்றுகளும், அடையாளச் சின்னங்களும் தேரரின் சட்டத்துக்கு பதிலளிக்கக் கூடிய மாற்று வர்த்தமானியாக அமையாதமை ஒரு குறைபாடாக தென்பட்டது.

இந்த நிகழ்ச்சி தொடர்பில் இது நடைபெற முன்னர் மக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்த கருத்துக்கள் நிகழ்ச்சியின் போது நடைபெற்றதை அவதானிக்க முடிந்ததை கருத்துத் தெரிவித்த அனைவரும் கவலையுடன் உணர்ந்திருப்பார்கள்.

அதாவது, ஒரு பக்கச்சார்பு நிலையை அவதானிக்க முடிந்தது. தேரர் பேசுகின்ற போது அவரைக் குறுக்கிட்டு வினா எழுப்ப நடுவர்களாக இருந்த மூவரும் அவ்வளவு அவகாசம் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அமைச்சரிடம் துருவித்துருவி வினாக்களை நடுவர்கள் தொடுத்ததை அதனைப் பார்த்த பலரும் அவதானித்திருப்பார்கள்.

ஒரு தனி நபரை வைத்துக் கொண்டு நான்கு பேர் ஒரு விடயம் தொடர்பில் விவாதித்து கலந்துரையாடுவதனால், உண்மையும் கூட பொய்ப்பிக்கப்படும் என்ற அச்சத்தை பார்ப்பவர்களின் உள்ளங்களில் இல்லாமலாக்காது. நிகழ்ச்சியில் தனக்குரிய அவகாசத்தை அமைச்சர் பல முறை கேட்டே பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

அமைச்சரின் தனிப்பட்ட வாழ்க்கை விபரங்கள் தேரரினால் நிகழ்ச்சிக்கு இழுத்துக் கொண்டபோது நிகழ்ச்சி நெறிப்பாட்டாளர் அதனை குறுக்கிட்டார். இருப்பினும், அவரின் குறுக்கீடு தேரரின் வாதத்துக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகவே காணப்பட்டது. ''ஏன் இந்த தனிப்பட்ட விடயத்தை இழுக்கின்றீர்கள். இது எந்த வகையில் நிகழ்ச்சிக்கு தொடர்புபடுகின்றது'' என தேரர் கூற வந்த விடயத்தை நிகழ்ச்சியுடன் தொடர்புபடுத்தி போட்டுக் கொடுக்கும் வேலையை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கச்சிதமாக முன்னெடுத்தார்.

நிகழ்ச்சியின் இறுதி நேரத்தில் தேரர் குர்ஆன் பிரதியொன்றை வெளிக்காட்டினார். அதனை ஏன் கொண்டு வந்தார் என்பது நிகழ்ச்சியை இறுதிவரை பார்த்தவர்களுக்கு புரிந்திருக்கும். அந்த குர்ஆனின் மீது கைவைத்து சத்தியம் செய்யுமாறு தேரர் அமைச்சரை வேண்டிக் கொண்டார். அமைச்சரின் தனிப்பட்ட வாழ்க்கையுடன் தொடர்புபட்ட அம்சமொன்றுக்காகவே தேரர் குர்ஆனை அமைச்சரிடம் சத்தியம் செய்யுமாறு நீட்டினார் என்பது விளங்க வந்தது.

இனியும்இ இந்த வில்பத்து வனப் பிரச்சினை தேசிய பிரச்சினையாக மாறவிடாமல், அரசாங்கமும், அதிகாரிகளும் கவனம் எடுக்க வேண்டும் என நிகழ்ச்சி நடாத்துபவரின் வேண்டுகோளுடன், அமைச்சருக்கும் தேரருக்கும் இடையில் வாக்கு வாதம் முற்றிய நிலையில் வலுக்கட்டாயமாக நிகழ்ச்சி முடித்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் நிகழ்ச்சி நடாத்துனர் மறைமுகமாக விவாதத்தின் பெறுபேற்றை சூசகமாக அறிவித்து விட்டார். அதாவது, இந்த விவாதத்தின் இறுதியில் தெளிவான உண்மை என்னவென்றால், வில்பத்து குடியேற்றம் என்பது பிரச்சினைக்குரியது. இதனை தீர்த்து வையுங்கள். இல்லாது போனால் இனப் பிரச்சினை ஒன்று உருவாகும் என்பதாக தெரிவித்தே இந்த நிகழ்ச்சி முடித்து வைக்கப்பட்டது என்பது மறைந்திருந்த இனவாத உணர்வின் வெளிப்பாடாகும்.

"நிகழ்ச்சியின் போது அமைச்சர் முன்வைத்த நியாயங்கள் சட்டத்தைத் தாண்டி மனித நேயமுள்ள உள்ளங்களை கனிய வைத்திருக்கும் என்பதை பார்த்தவர்களுக்கு கூறத் தேவையில்லை. ஏற்கனவே, வில்பத்து விவகாரத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதும், அத்துடன், அதுவிடயமாக பல வருடங்கள் பிரச்சினைக்கு தீர்வு தேடும் ஒருவர் என்ற வகையிலும், இந்நிகழ்வில் அமைச்சரின் கருத்து பலமாக காணப்பட்டது என்பது பலரதும் அபிப்பிராயமாக இருந்தது. சங்க சம்மேளத்தின் தேரர் முன்வைத்த கருத்துக்களின் சாராம்சம், இறுதியில் அவர் கூறிய இனவாத நச்சுத் துளியிலிருந்து அனைவருக்கும் புரிந்து போனது. உண்மையில் வில்பத்துவில் காடுகள் அழிக்கப்படுவது அல்ல அவர்களது பிரச்சினை என்பதை அவர் தன்னை அறியாமலேயே கூறவேண்டி ஏற்பட்டது"







# அறுவரை பலியெடுத்த அகோரம்

## சோகத்தில் மூழ்கிய சம்மாந்துறை

■ கியாஸ் ஏ.புஹாரி
■ அமீர் ஹம்ஸா

வரக்காபொல, தும்மலதெனியவில் இடம்பெற்ற வான் - பஸ் விபத்தால் மரணத்துக்கும் காயத்துக்கும் இலக்கானோர் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கிறது. இதுவரை ஆறு பேரை பலியெடுத்து 23 பேரை காயத்துக்குள்ளாக்கிய இந்த கோர விபத்து கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறையை மாத்திரமன்றி முழு இலங்கையையும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது. 30 ஆம் திகதி அதிகாலை 4.55 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் இரு சிறுமிகள், ஒரு வயோதிபப் பெண் உட்பட அறுவர் மரணமடைந்திருக்கிறார்கள்.

சம்மாந்துறையிலிருந்து உம்றா பயணத்துக்கு கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த வானொன்றும் பொல்கஸ் ஓவிட்டவிலிருந்து சோமாவதி புனித தலத்தை தரிசிப்பதற்காக சென்று கொண்டிருந்த பஸ் வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதனாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது.

சம்மாந்துறையிலிருந்து மூன்று வான்களில் கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்தவர்களில் மொத்தம் 39 பேர் இருந்திருக்கிறார்கள். குறித்த தினம் இரவு 9.30 மணிக்கு வெளிக்கிளம்பிய இந்த மூன்று வான்களும் உன்னஸ்கிரிய என்ற இடத்தில் இரவுச் சாப்பாட்டுக்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில் சாரதிகளை தவிர ஏனையோர் அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்திருக்கிறார்கள். உன்னஸ்கிரியவில் இரவு உணவை முடித்துக் கொண்டு கொழும்பு நோக்கி வரும் வழியிலே இந்த அதிர்ச்சி அனர்த்தம் இடம்பெற்றிருக்கிறது.

விபத்துக்குள்ளான வாகனத்தில் ஐந்து குழந்தைகள், சாரதி உட்பட மொத்தம் 19 பேர் இருந்திருக்கிறார்கள். இவர்களில் அறுவர் இதுவரை மரணமாகியிருக்கிறார்கள். வாகனமொன்றை முந்திச் செல்ல முட்பட்ட வேளையிலே இந்த விபத்து ஏற்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்திருக்கிறார்கள். இவ்விபத்தின் போது காயமடைந்த ஏனையோர் கேகாலை, வரக்காபொல, வத்துப்பிட்டிவல வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சம்மாந்துறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த மூன்று வாகனங்களும் தொடராகவே வந்திருக்கின்றன. முதலாவது வாகனத்தில் இவர்களை உம்றாவுக்கு அழைத்து செல்வதற்கு பொறுப்பாக இருந்த மௌலவி ஆதம்பாவா லாபிர் பயணித்திருக்கிறார். 39 பேரோடு சென்று கொண்டிருந்த இரண்டாவது வாகனமே வரக்காபொல, தும்மலதெனிய பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

சம்மாந்துறையிலுள்ள ஹஜ் உம்றா ட்ரவல்ஸ் நிறுவனமொன்றினூடாக இவர்கள் உம்றா கடமைகளை நிறைவேற்ற எண்ணியிருக்கிறார்கள். சம்மாந்துறையைச் சேர்ந்த பாத்திமா சாரா (21/2 வயது) சின்னத்தம்பி பாத்திமா பருஸா (25), மொஹமட் இப்றாஹீம் ஹபீபதுன்னிஸா (69), மொஹமட் தம்பி றிபாத் அஹமட் (29) பாத்திமா ஜெஸீலா (02) ஆகியோரே இந்த விபத்தின்போது மரணமானார்கள்.

வரக்காப்பொல வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி பி.ஏ.டி.சி. பாலசூரிய விபத்து நடந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

'நேரெதிரே வானொன்று மிக வேகமாக வருவதைக் கண்டேன். அந்த வாகனம் எம்மை நோக்கி வருவதையும் உணர்ந்தேன். எனவே என்னால் முடிந்தவரை எனது பஸ் வண்டியை ஓரமாக நகர்த்தினேன். அதற்கப்பால் என்னால் ஓரமாக்க முடியவில்லை. இதனால் எனது பஸ் வண்டி அங்கிருந்த வாகன தரிப்பு நிலையத்தில் மோதுண்டது. அந்தளவு ஓரமாக்கிய நிலையில் வேகமாக வந்த வான் எனது பஸ்ஸின் இடது பக்கமாக மோதியதென வரக்காபொல, தும்மலதெனிய பிரதேசத்தில் 30ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையின்போது சாட்சியமளித்த பஸ் சாரதி சுஜித் நிரோசன் ஒலபட்டுவ கூறியுள்ளார்.

வரக்காபொல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயகாந்த, போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் உபாலி ஜயதிஸ்ஸ, உபபொலிஸ் பரிசோதகர் ஜயவர்தன, பொலிஸ் அதிகாரியான பந்துல, கான்ஸ்டபிள் ரணசிங்க ஆகியோரடங்கிய பொலிஸ் குழுவினரே இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்கள்.

இதன்போது தொடர்ந்து சாட்சியளித்த பஸ் சாரதி கூறியதாவது,

நான் திருமணமானவன். மூன்று பிள்ளைகளுக்குத் தந்தை. நான் சாரதியாக பன்னிரெண்டு வருடங்களாக பணியாற்றி வருகின்றேன். முதன் முதலாக லொறியொன்றில் சாரதியாக பணிபுரிந்தேன். அதன் பின் தனியார் பஸ் வண்டியொன்றில் பணியாற்றினேன். அதன் பின்பு இந்த பஸ் வண்டியின் சாரதியாக செயற்பட்டு வருகின்றேன். இது பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பஸ் வண்டியாகும். இந்த பஸ் வண்டியின் உரிமையாளரது உறவினர்களே பொலன்னறுவையிலுள்ள சோமாவதி புனித தலத்தை தரிசிப்பதற்கென 30ஆம் திகதி அதிகாலை 3.00 மணிக்கு பிலியந்தலை பொல்கஸ்ஓவிடயிலிருந்து வெளியேறினோம். இதில் 35 பேர் இருந்தார்கள். நாம் வரக்காபொலையை நெருங்கும் போது 4.45 மணியிருக்கும். அந்த வேளையிலே வேகமாக வந்த வாகனமொன்று எனது பஸ்ஸில் மோதுண்டது. அதுவரை மாத்திரமே எனது நினைவில் இருக்கிறது. எனக்கு ஏதோ நடந்துவிட்டது போன்றிருந்தது. அப்போதுதான் அங்கு ஐந்து பேர் இறந்து கிடந்ததை அறிந்தேன் என விபத்திற்குள்ளான பஸ் சாரதி விபத்து தொடர்பாக இடம்பெற்ற விசாரணையின்போது குறிப்பிட்டிருந்தார்.

குழுவுக்கு தலைமைதாங்கி அழைத்து வந்த மௌலவி ஆதம்பாவா லாபிர் மரண விசாரணையின்போது சாட்சியளிக்கையில், நான் சம்மாந்துறையிலுள்ள பள்ளியொன்றில் கடமையாற்றுகிறேன். நான் சம்மாந்துறையைச் சார்ந்தவன். நான் குறித்த பள்ளிவாசலில் இமாமாக கடமைபுரியும் அதேவேளை கடந்த இரு வருடகாலமாக இந்தப் பிரதேசத்திலிருந்து ஹஜ் மற்றும் உம்றாக் கடமைகளுக்குச் செல்ல விரும்புவோரை வழிகாட்டியாக அழைத்துச் சென்றுவருவதோடு அவர்களுக்கு அவசியமான கடவுச் சீட்டுக்களையும் பெற்றுக் கொடுப்பதில் முனைப்புடன் செய்யப்பட்டு வருபவன். அந்த வகையிலே உம்றா கடமையை நிறைவேற்ற விரும்பிய இவர்களை மூன்று வாகனங்களில் கொழும்புக்கு அழைத்து வர முட்பட்டேன். நான் முதலாவது பயணித்த வாகனத்தில் இருந்தேன். நான் அடிக்கடி எங்களுக்கு பின்னால் வந்த வாகனத்திலுள்ளவர்களோடு தொடர்பு கொண்டவனாகவே இருந்தேன். அவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பங்களின்போதும் பின்னால் வந்த இரு வாகனங்களும் எங்கிருக்கின்றன என்பதை அறிந்து கொண்டவாறு பயணத்தை தொடர்ந்தேன். நான் வந்த வாகனம் வரக்காப்பொல நகரைத் தாண்டி தும்மலதெனிய பிரதேசத்தை சென்றடைந்தது. அங்கிருந்து பின்னால் வந்த வாகனங்களோடு தொடர்பு கொள்ள முற்பட்டேன். அப்போதுதான் இரண்டாவதாக வந்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளதை அறிந்தேன். நாம் உடனடியாக எனது வாகனத்தை திருப்பிக் கொண்டு விபத்து இடம்பெற்ற இடத்தை நோக்கி விரைந்தோம். அங்கு வாகன நெரிசல் காணப்பட்டது. எம்மால் உடனடியாக அந்த இடத்துக்கு செல்ல முடியவில்லை. நான் எமது வாகனத்திலிருந்து இறங்கி நடையாக முன்னோக்கி நகர்ந்தேன். அங்கு விபத்தில் சிக்குண்டு இறந்த சிலர் பாதையெங்கும் விழுந்து கிடக்கக் காணப்பட்டனர். அவர்கள் தம்மோடு வந்தவர்களென்பதை அடையாளம் கண்டுகொண்டேன். அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் சடலங்களையும், காயமுற்றோரையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதில் முனைப்புக் காட்டினர். நானும் வரக்காபொல வைத்தியசாலைக்குச் சென்றேன். தம்மோடு வந்தவர்களில் சிலர் இறந்து கிடப்பதை அங்கு நான் கண்டேன். வான் சுக்கு நூறாகியிருந்தது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விபத்து தொடர்பாக வரக்காப்பொல பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் அதிகாரியொருவர் கருத்துக் கூறுகையில்,

எமது அதிகாரிகள் சிலர் இவ்வீதியில் இடம்பெறும் விபத்துக்கள் தொடர்பாக கண்காணிக்கவென கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். 30ஆம் திகதியன்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்ற இடத்திலிருந்து 50-100 மீற்றர் தொலைவில் பந்துல, ரணசிங்க ஆகிய இரு பொலிஸ் அதிகாரிகள் பணியிலீடுபட்டிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில்தான் இந்த விபத்து நேர்ந்தது. கொழும்பு - கண்டி வீதியின் நடுவே விபத்துக்குள்ளான வாகனம் இருக்கக் காணப்பட்டது. இடைக்கிடையே விபத்துக்குள்ளானவர்களது உடல்கள் சிதறிக் காணப்பட்டன. உடனடியாக இவ்விரு அதிகாரிகளும் வரக்காப்பொல பொலிஸாரை தெளிவூட்டினார்கள். உடன் செயற்பட்ட வரக்காபொல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட போக்குவரத்து பிரிவு பொலிஸார், பிரதேச வாசிகள் ஒன்றிணைந்து இறந்த காயத்துக்குள்ளானோரை ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்வதில் ஆர்வம் காட்டினர்.

இறந்து கிடந்தவர்களது மரணம் தொடர்பாக மரண விசாரணை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி பி.ஏ.டி.ஏ.பாலசூரிய, வயிறு மற்றும் உடலின் உள்ளுறுப்புக்கள் கடுமையான முறையில் சேதமுற்றுள்ளதால் ஏற்பட்ட மரணமென தீர்மானித்திருந்தார்.

இதனடிப்படையில் வரக்காபொல ஆஸ்பத்திரியின் மரண விசாரணை அதிகாரி விமலசிரி ராஜபக்ஷ வாகன விபத்தொன்றினால் ஏற்பட்ட மரணங்களென தீர்ப்பளித்தார்.

இந்த மரணம் தொடர்பாக வரக்காப்பொல ஆஸ்பத்திரியின் மரண விசாரணை அதிகாரி விமல சிறி ராஜபக்ஷ கூறிய கருத்து ஒட்டுமொத்த வாகன சாரதிகளுக்கான உபதேசமாக இருந்தது.

இதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னரும் கொழும்பு - கண்டி வீதியின் நெலுந்தெனியவில் நான்கு உயிர்கள் பலியெடுக்கப்பட்டிருந்தது. அந்த அனர்த்தம் இடம்பெற்று ஒரு சில நாட்கள் கழிவதற்குள் ஆறு உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருப்பதோடு 30 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் கடுமையான காயங்களுக்கு இலக்காகியுள்ளார்கள். இவ்விரு விபத்துக்களும் சாரதிகளின் கவனயீனத்தாலே இடம்பெற்றிருக்கின்றன.

எனினும் தூரப் பயணங்களை மேற்கொள்ளும் போது தமது உடல் நிலையை நன்கு சோதித்தறிந்து கொள்ள வேண்டும். அதே போன்று இவ்வாறான தொலைப் பயணங்களின் போது களைப்பு, நித்திரை தொடர்பாகவும் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும். இந்த விபத்துக்களின் தன்மையை நோக்கும் போது இந்த வாகனம் அதி வேகத்தில் வந்திருக்கிறது. வேகத்தை கட்டுப்படுத்த முடியாமலே இந்த விபத்து நேர்ந்துள்ளது. அது மட்டுமல்லாது இந்த வானில் 19 பேர் பயணித்திருக்கிறார்கள். இது பெருங் குற்றமாகும். வான் வண்டியொன்றில் பயணிக்கக் கூடிய அளவொன்று இருக்கிறது.



அதேபோன்று தான் செலுத்தும் வாகனத்தில் பெறுமதிமிகுந்த உயிர்கள் இருக்கின்றதென்பதை மறந்துவிடக்கூடாது. கவனயீனம் காரணமாக பிலியந்தலையிலிருந்து பொலன்னறுவையிலுள்ள சோமாவதி புனித தலத்தை தரிசிப்பதற்குச் சென்ற சிலர் விபத்துக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் பௌத்த மதத்தை சேர்ந்த சிங்களவர்கள். அதேபோன்று ஏனையவர்கள் இஸ்லாம் மதத்தவர்கள். இவர்கள் மக்கா செல்வதற்கான கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்புக்கு வந்தவர்கள். இவ்விரு தரப்பாரும் புனித மத யாத்திரையொன்றை நிறைவேற்றும் நோக்கோடு இருந்தவர்கள். ஆனால் சாரதியின் கவனயீனம் காரணமாக இந்த புனித யாத்திரை இடைநடுவே நின்று போயிருக்கிறது. இதை ஏனைய சாரதிகள் பாடமாகக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்த விபத்து காரணமாக கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த சிறுமியொருவர் 30ஆம் திகதி காலமானார். இவரது ஜனாசா அவரது பிறந்த இடமான சம்மாந்துறைக்கு கொண்டு வரப்பட்டு, சம்மாந்துறை கைர் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

எஞ்சிய ஐவரின் ஜனாசாக்களில் மூவரது ஜனாசாக்கள் சம்மாந்துறையிலுள்ள இதே மையவாடியிலும், சாரதியின் ஜனாசா தக்கியா பள்ளிவாசல் மையவாடியிலும், எஞ்சியவரின் ஜனாசா சம்புமடு அம்பர் ஜும்ஆப் பள்ளி மையவாடியிலும் நல்லடக்கம் செய்யப்பட்டன.



பயணிகளை அழைத்து சென்ற மௌலவி: ஏ.பி.லாபீர் (அஸ்லம் ஹாபிஸ்)



பாத்திமா சாறா (2.5)



பாத்திமா ஜெஸ்லா (2)



எம்.பீ.றிபாத் அஹமட் (29)
நெசவாலை வீதி



யூ.எல். நுஸ்ரத் ஜஹான் (27)
சம்மாந்துறை - 08



எஸ். பாத்திமா பருஸா (25)
உடங்கா - 01, விளினையடி



எம்.ஐ.ஹபீபதுன் நிஸா (69)
செந்நெல் கிராமம்

# கல் மனசு

சிறுகதை

ஜெனீரா ஹைருல் அமான்
(கிண்ணியா)



அந்த அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்களில் நஸ்றியா ஒரு "உம்மணா" மூஞ்சி. அவளது முகத்தில் மருந்துக்குக் கூடப் புன்னகை துளிர்க்காது. யாரோடும் கலகலப்பாக பேச மாட்டாள். அவளுக்குக் கர்வமா...? திமிரா? புரிந்து கொள்ள முடியவில்லை.

அன்று அலுவலகம் வந்த நஸ்றியா, சாரியைப் புரட்டி உடுத்தி வந்தாள். திபாவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"ஹஹஹா....! திமிர் பிடித்த நஸ்றியாவைப் பாரிங்க...?" சாரியைப் புரட்டி உடுத்திருக்கிறாள். தலைகால் புரியாத கர்வம். சாரிய எப்படிக் கட்டணும்னு கூடத் தெரியாது. அதுக்குள்ள பெருமை வேறு.."

"நீ நினைப்பது போலில்லடி. நஸ்றியாவுக்கு பின்னால் பெரிய சோகமே மறைந்திருக்கு. அதப் புரியாம நீ தவறா எடை போடாதே"

நஸ்றியா தன் வீட்டின் ஒரே ஒரு பெண் பிள்ளை. மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்து வந்தனர் பெற்றோர். அவளைப் பலர் பெண் கேட்டும் கொடுக்கல. சொந்தம் பிரியக்கூடாது. சொத்துக்கள் பிரியக்கூடாது எனும் நோக்குடன் தன் மாமாவின் மகன் ஜலீலுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தாங்க. அதோடு அவள் சுதந்திரம் பறிபோனது.

"சொத்துக்கள உங்க மகள் பேருக்கு எழுதுங்க. இல்லாட்டி ஒங்க மகள உங்களோடயே வச்சிக்கிங்க" வி' னெ' வி' டே கிளம்பி' னான்.

"நம்ம புள்ள தானே! ஒன்னே ஒன்னுன்னு கண்ணே கண்ணு என்று வளர்த்தோம். எங்கிருந்தாலும் நல்லாயிருக்கட்டும்" என்று எண்ணியது மகளின் பேருக்கே வீட்டை எழுதிக் கொடுத்துவிட்டு வேறு இடத்துக்கு வாடகைக்கு விட்டுத்தாட்டுப் போய்ட்டாங்க அவள் பெற்றோர்.

இப்ப மாமா, மாமியோட நஸ்றியா வாழுறா. எல்லாருக்கும் சேர்த்துச் சமைச்சிட்டு அலுவலகம் வருவாள். புள்ளைகள ஸ்கூலுக்கு அனுப்பனும். கைக்குழந்தையை மாமி வச்சிக்கிட்டு தொண தொணத்துக் கிட்டு இருப்பாவாம். கேட்டுக் கேட்டு இதயம் சுக்கு நூறாய் உடைஞ்சு போய்ச்சாம். அவள் சிரிச்சுப் பல வருடங்களாச்சாம்.

எல்லாத்தையும் பொறுமையாகக் கேட்டு அழுதுவிட்டே அலுவலகம் வருவாளாம். புருஷன் என்ன ஏது என்று ஒரு வார்த்தை கேட்க மாட்டாராம். நஸ்றியாவுக்குத்தான் ஏகவாரம். எல்லாம் தலைவிதி. குடும்பத்துக்குள்ள முடிச்சிக்கிட்டு எவ்வளவு அவஸ்தைப்படுகிறேன் பார்த்தாயா...? இப்படி ஒரு நிலை யாருக்கும் வரக் கூடாது என அடிக்கடி கூறுவாள்.

சுடங்கு நடைபெற்றது. அந்த நஸ்றியாவின் மகனுக்கு "சுன்னத்" தடல்புடலாக விருந்துபசாரங்கள் நடந்தன. நஸ்றியாவின் தாய், தந்தையரை அழைக்காது அவளுக்குப் பெரிதும் மன வேதனையாக இருந்தது. அழுது கண்ணீர் வடித்தாள். அவளது நிலைமை புரிந்தோ என்னவோ... அழையா விருந்தாளியாகப் பெற்றோர் வந்தனர்.

அவ்வளவுதான்...! "உங்களெயல்லாம் யார் வரச் சொன்னது...? வீட்டு வாசற்படி மிதிக்க வெட்கமில்லையா?" சட்டைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான் ஜலீல். இருவரின் அபேயும் கைகைப்பு ஏற்பட்டது. சுன்னத் சுடங்கிற்கு வந்தவர்கள் வேடிக்கை பார்த்தனர்.

"உனக்கா வரல்லடா. ஏன் புள்ளைவ மனம் வேதனைப்படக்கூடாதெண்டு தான் வந்தோம். நீ எல்லாம் ஒரு மனிசனா? சொத்து வெறி பிடிச்ச நாய்.." கத்திவிட்டுச் சென்றவருக்கு நஸ்றியாவை யோசித்து யோசித்து நெஞ்சுவலி ஏற்பட்டு அது ஹார்ட் அட்டாக்காக மாறியது. வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டார். ஊரே திரண்டு சென்றது. நஸ்றியா வைத்தியசாலை செல்வதற்கு அனுமதிக்கவில்லை. "உன்னோட சொந்த மாமா உன் இரத்தம் துடிக்கவில்லையா? நீயெல்லாம் ஒரு மனுசனா...? நீ போகல்லானாலும் பரவாயில்லை. நஸ்றியாவையாவது போய்ப் பார்க்கவிடு. நீ கேட்டதையெல்லாம் தந்தார். உனக்கு என்ன குறை வச்சாரு...?"

குடும்பத்திலுள்ள மூத்தவர்கள் ஏசினார்கள். வேண்டா வெறுப்புடன் நஸ்றியாவை அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றான் ஜலீல். ஆபத்தான நிலையில் கிடக்கும் மாமாவைப் பார்ப்பதற்கு மருமகனின் கல்மனசு கரையவில்லை. நஸ்றியாவை உள்ளே அனுப்பிவிட்டு வைத்தியசாலை வாசலுக்கு வெளியே நின்றான் ஜலீல்.

***********

# இலக்கியச் சோலை

தயாரிப்பு: கலைவாதி கலீல்

## சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம்....

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்... என்று, என்றோ பாடினான் புரட்சிக் கவி பாரதி. அந்த (இந்தியக்) கனவு.. நீண்ட நாட் கனவு.. நிறைவேறப் போகிறது என்ற மகிழ்ச்சி எமக்கு.

ராமர் பாலம் முயற்சி கைவிடப்பட்டு இப்போது ராமேஸ்வரப் பாலம் அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகிறது....இப்பாலம் தலைமன்னார் பியர் வரை உள்ளும் வெளியுமாக( அதாவது கடலுக்குள்ளும் கடலுக்கு மேலும்) அமைக்கப்படும் என்று கூறப்படுகின்றது. அதற்காக எத்தனையோ ஆயிரம் கோடி டொலர்கள் ஒதுக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது. நல்ல முயற்சிதான், வரவேற்கிறோம்!

50 இலட்சம் பௌத்த மக்களின் ஆதரவு இருப்பதாகக் கூறிகொண்டு வெறும் ஐயாயிரம் வாக்குகளை மட்டுமே பெற்ற பௌத்தர்களின் ஆபத்பாந்தவர்களாக நடிப்பவர்களும் அவர்களின் அடிவருடிகளும் இத்திட்டத்தைச் தொடச்சியாக எதிர்த்து வந்தாலும் கூட அதனையெல்லாம் துச்சமாய் தூக்கியெறிந்துவிட்டு பாலம் அமைக்கப்படலாம் என்ற நம்பிக்கை வெள்ளி உதயமாகி இருக்கிறது.

ஆனால், ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வந்த தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிக்கலாம். தற்போது கொழும்பிலிருந்து தலைமன்னார்த்துறை வரை புகையிரதம் ஓடிக் கொண்டிருக்கிறது. எனவே கப்பல் சேவை என்பது தற்போது இலகுவான விடயமே! அதேவேளை-தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையின் இனிய நினைவுகள் நெஞ்சத் திரையில் நிலைபேறு கொள்கின்றன.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையே உள்ள கடல் வழித்தூரம் வெறும் 19 மைல் தான்( அதாவது 27 கிலோ மீற்றர்) ராமானுஜம்,கோஷன் மெட்ராஸ் போன்ற கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்தில் பெறப்படும் மெட்ராஸுக்கான புகையிரதப் பயணச்சீட்டிலேயே கப்பலிலும் ஏறிச் செல்லலாம். கொழும்பு-தலைமன்னார் புகையிரதத்தை இன்டோ சிலோன் எக்ஸ்பிரஸ்(Indo-Ceylon Express) என்று அழைப்பர். இச்சேவையை உருவாக்கியவர்கள் பிரட்டிஷ்காரர்களே...

கப்பலில் ஏறினால் பிரயாணம் சுபமாகவும், சுமூகமாகவும் இருக்கும். ''ஆராதனா'' திரைப்படம் புகழ் பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில் அத்திரைப்படத்தின் பாடல்கள் அனைத்தையும் கப்பலினுள்ளே ஒலிப்பரப்புவார்கள். கப்பல் ராமேஸ்வரத்தைச் சென்றடைந்து விடும்.

மன்னார் மாவட்டப் பாடசாலைப் பிள்ளைகளின் கல்விச் சுற்றுலாவில், தலைமன்னார் பியர் மற்றும் கப்பலைப் பார்வையிடுதல் ஆகியவை முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக அமைந்திருக்கும். கப்பலின் உள்ளே சென்று, அந்த நாட்களில் இலங்கையில் கிடைக்காத மல்கோவா மாம்பழம், மைசூர் பாகு, ஜிலேபி போன்ற தீண்பண்டங்களை வாங்கி உண்டு சுவைப்பார்கள். இந்தியப்பயணிகள், கப்பலுக்கு வெளியே வந்து தங்களது நாட்டுப் பொருட்களை இலங்கையருக்கு விற்பார்கள். உதாரணமாக 100 க்கு 100 ம் நம்பர் பளையகாட் சாரம் ஒன்றின் சந்தை விலை 5 அல்லது 6 ரூபாய்தான். அவ்வாறே இலங்கையின் லக்ஸ், தேங்காய் எண்ணெய், தேயிலை போன்றவற்றை இந்தியப் பயணிகளுக்கு அதிக விலைக்கு விற்பார்கள்.

உலகப் புகழ் பெற்ற அறிஞர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகளெல்லாரும் இக்கப்பல் பயணத்தின் மூலமே இலங்கைக்கு வருவார்கள். காரணம் செலவு குறைவு.

அந்தவகையில், இலங்கையில் முதன் முறையாக நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமியத்தமிழராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்த பிரமுகர்கள் கப்பல் மார்க்கமாகவே சிலோனுக்குள் நுழைந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பிறை ஆசிரியர் அப்துல் வஹாப் சாஹிப், முஸ்லிம் முரசு ஹஸன், பிரபல சன்மார்க்கப் பாடகர் காயல் ஷேக் முஹம்மது, (இன்னும் சிலர்) போன்றோரைக் குறிப்பிடலாம்.

பாலம் கட்டி முடிக்கும் வரை கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பித்தால் என்ன?

\- கலை -

# இராசவள்ளிக்கிழங்கும் கோழிக்கறியும்

ஏ.ஸீ.எம்.ஜிப்ரி
(காலி)

இது இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த உண்மைச் சம்பவம், அதன் சுவையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் இன்றைவிட அன்று எவ்வளவு சுவையான காலம் என்று இளைஞர் யுவதிகள்... புரிந்து கொள்வர்.

1974 ஆம் ஆண்டு தெற்கில் மாத்தறை மாவட்டத்தில் பிரபல்யம் வாய்ந்த ஒரு முஸ்லிம் தமிழ்மொழிப் பாடசாலை இங்கு வாசிகசாலை, ஆராதனை மண்டபம் கல்லூரி வளாகத்திலே பள்ளிவாயல், விஞ்ஞான ஆய்வுகூடம் மாணவர்விடுதி, அதிபர் விடுதி ஆசிரியர்களுக்கான விடுதிகள் அனைத்தும் கொண்ட அங்க சம்பூரணமான இக்கல்லூரிக்கு 1974 ஆம் ஆண்டு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதிபரும் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பிரதி அதிபரும் வெளியூர் அத்துடன் மேல்மாகாணம், கிழக்கு மாகாணம் ,யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து நியமிக்கப்பட்ட அனைவரும் விடுதியில் தங்கி இருந்தது மட்டுமன்றி மாலை வேளையில் கல்லூரி விளையாட்டுத் திடலில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றாக பலவிளையாட்டுக்களில் ஈடுபடக்கூடிய பெரிய விளையாட்டுத்திடல் கல்லூரியில் காலை முதல் இரவு மஃரிபு தொழுகைக்கு அதான் ஒலிக்கும் வரை ஒரே கலகலப்பு கற்றலிலும் மாணவர்கள் சுறுசுறுப்பும் கல்வித் தரமும் அன்று தெற்கில் மாத்தறை மாவட்டத்தில் உள்ள இப்பாடசாலையில் உயர்ந்து காணப்பட்டது.

இத்தனைக்கும் மத்தியில் ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்த அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர் விடுதியில் இருந்து சாப்பாடு. மாதம் முடியும் போது உணவுக்கான தொகை பொறுப்பை விடுதி மேற்பார்வையாளரின் கையில் ஒப்படைத்து விடுவது வழக்கம்.

மாதாந்தச் சம்பள நாளில் அதிபரோடு வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்து வந்து தனித்தனியாக ஒவ்வொருவரின் பெயர் இட்ட என்விலொப்பில் போட்டு சம்பளத்தைக் கையளிப்பதை அன்று அதிபர் எனது பொறுப்பில் விட்டிருந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் யாழ்ப்பாணம் சென்று வந்தபோது இரண்டு பெரிய இராசவள்ளிக்கிழங்குகளுடன் வந்தார்.

ஒரு நாள் ஒன்றைக் கறிசமைத்தோம், மற்றதை இனிப்புச்சுவைக்கு புடிங் போல் சமைத்துச் சாப்பிட்டு விட்டோம்... சுவையோ அலாதி!


நாலு ஐந்து நாட்களுக்குப்பிறகு அந்த ஆசிரியர் விடுதியில் இருந்த எட்டு ஆசிரியர்களின் (அதிபர் அடங்கலாக) ஒரு தொகைப் பணத்தை அவரவர் சம்பளத்தில் கழித்து தனக்குத்தரும்படி கூறினார். இது என்ன என்று வினவ இராசவள்ளிக்கணக்கென்றார்.

இது என்னடா... புதிய கதை இருந்தாலும் அதிபரிடம் நெருங்கி இந்தப்பகிடியைச் சொன்னபோது கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் சிரித்துக்கொண்டு அதை சம்பளத்தில் கழித்து ஒப்படைத்து விடுங்கள் என்றார். நானும் அப்படியே செய்தேன். விடுதியில் ஒன்றாக இருந்தவர்கள் இது என்ன கழிவு என்று வினவ "இராசவள்ளிக்கணக்கு" என்று தலை தப்பிக்கொண்டேன். அதிபர் ஒரு நாள் திடீரென்று "இன்று கோழிக்கறி சமைப்போமா" என்றார். கோழிக்கறி யாரும் வேண்டாம் என்று சொல்வதா? "ஆம்" என்று தலை அசைக்க அவரே கடைக்குப் போய் கோழி வாங்கி வந்தார். சமைத்துச் சாப்பிட்டோம். சில தினங்கள் கழித்து மீண்டும் ஒரு நாள் இரவைக்கு இடியப்பமும் கோழிக்கறியும் இருந்தால் நல்லாயிருக்குமே என்றார் அதிபர். எதைச் சொன்னாலும் நாங்கள் மறுப்பதில்லை பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உயர்மட்டத்தில் காணப்பட்டன. அவர் காலத்தில். அடுத்த சம்பளம். அதிபரே கோழிக்கறி சாப்பிட்ட அனைவரினதும் பெயர்களைக்குறிப்பிட்டு ஒரு துண்டை என்னிடம் தந்தார். இதைக்கழித்து அவரிடம் தரும்படி அதிபரின் உத்தரவு. அப்படியே செய்தேன். இதனை ஒருவரும் அலட்டிக்கொள்ளவில்லை. இராசவள்ளி கொண்டு வந்த ஆசிரியர் மட்டும் அதிபரிடம் போய் இது என்ன கழிவு ''சேர்'' என்றார்.... "சென்ற மாதம் இராசவள்ளிக் கணக்கு இந்த மாதம் கோழிக்கறிக்கணக்கு" என்றார் அதிபர்..

★★★★★★★★




# சித்திரம் பேசுதடி



ஆயிரம் வார்த்தைகள் சொல்லுவதை ஒரு சித்திரமோ புகைப்படமோ சொல்லிவிடும் என்பார்கள். இங்கு ஒரு புகைப்படம் பிரசுரமாகிறது ''மூன்றாம் கண்'' என்ற புகைப்படங்களுக்கான புகழ்பெற்ற சஞ்சிகையில் (ஆகஸ்ட் 2010) வெளியான முகப் போவியம் (புகைப்படம்) இது! இச்சிட்டைத் தன் கெமராவுக்குள் சிறைப்பிடித்த கெமரா மேதை
**''வெனுர த சில்வா''**

- வாசகர்களிடம் ஒரு வேண்டுகோள்- (கவிதையோ- குட்டிக்கதையோ எழுதி அனுப்பவும். இந்த படத்தைப் பாருங்கள்...
- கவிதை- இரண்டு வரியில் திருக்குறள் போல... மூன்று வரி- சிந்து போல... நான்கு வரி- வெண்பா போல... ஆறு வரி வரை அமைத்துக் கொள்ளலாம்.
- குட்டிக்கதை- ஏ4 தாளில் (கையெழுத்தில்) அரை - (முக்கால் அல்லது முழுப்பக்கத்தில் அமையலாம்.)
- தகுதி கண்டு பிரசுரமாகும் / தவணை- இருவாரம்.

# இணக்கம்

எட்டாத் தொலைவில் சமாதானம் காணீர்
எட்டுந் தொலைவில் குழப்பங்கள் பாரீர்
எட்டுத் திக்கு மிக்கோலங்கள் கேளீர்
விட்டுக் கொடாமை காரண மென்பீர்!

சிங்கமும் புலியும் இணைந்ததுண்டோ
சிங்களரும், தமிழரும் இதே கதையாம்
இங்கு போல் முஸ்லிமும் யூதரும் கூட
அங்குமே பகையாம் காலமெல்லாம்

கறுப்பரும் வெள்ளையரும் இணங்கினரோ?
விருப்புடன் வாரி அணைத்த னரோ!
வெறுப்பு டனே சதாவும் நோக்கிடுவர்
இருநிறமும் என்றும் இணைந்த தில்லை!

வடக்கும் தெற்கும் இணைந்திடுமோ?
கிழக்கும் மேற்கும் பொருந்திடுமோ!
மானிட வாழ்வு மட்டுமில்லை எங்கும்
மிருகங்கள் வாழ்வு மிக்கதையே கூறும்

இரவோடு பகலொன்றாய் வருவதில்லை
இருள் நீங்கியே ஒளி வருவதுபோல்;
கருமை வருவதும் இயற்கை நியதியே
இரு சமூகங்க ளிணைதலு மதுபோலவே

நகமும் சதையும் போலென்பா ரதுபோல்
பிட்டும் தேங்காய்ப் பூவும் போலென்பார்
கூட்டுக் குடும்பத்துக் கிதுவாகலாம் ஆனால்
நாட்டுச் சமூகங்க ளிணங்குத லெங்கனம்?

சமாதானம் பேசுவோரும் சுயநலப் பாங்காய்
சமகாலத்தில் காய் நகர்த்தி நடித்திடுவர்
சங்கமிக்கக் காத்திருக்கும் இனங்களில் சிலரும்
சமயோசிதமாய் கதைகள் கூறிக் குழப்பிடுவர்

பெருந்தன்மை பொதுப் பார்வை வந்தாலன்றி
பெருமைசார் சமாதானம் மலராது கூறுங்களிப்
பேருண்மை இப்புவியி லெங்குண்டு காட்டுங்கள்
பொறுமையுடன் இணக்கம் கண்டிடுவோ
மிப்புவியில்!

எம்.ஐ.எம்.அப்துல்லத்தீப்

Like
LIKE US ON facebook
Navamani Newspaper
www.facebook.com/navamaniofficial
& READ it's free e PAPER on facebook





விலங்குகள் தமக்குள்ளே பேச்சு மூலம் உணர்வுகளை அல்லது கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள இயலாது எனினும், சில ஒலிகள் மற்றும் சமிக்ஞைகள் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள இயலும். சினம், மகிழ்ச்சி போன்றவற்றை மனித இனம் முகக் குறிப்பால் வெளிப்படுத்திக் கொள்கின்றது. தலை அசைவு, கைச் சைகைகள் போன்றவற்றாலும் கருத்துகளை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடும். பல விலங்குகள் குரலொலி, சைகைகள் வாயிலாக மனிதரைப் போன்றே உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றன. உதாரணமாக ஒரு தாய்க் கோழி உரத்த ஒலி எழுப்பினால் அல்லது தனது உடலை வளைத்தால் அதன் குஞ்சுகள் அனைத்தும் வரவிருக்கின்ற அபாயத்தைப் புரிந்து கொண்டு எச்சரிக்கை உணர்வைப் பெறுகின்றன. குரங்குகள் நீண்ட ஒலி எழுப்பியும் ஓலமிட்டும் தமது அபாய நிலைமையைக் காட்டுக்குள் வெளிப்படுத்துகின்றன.

பிற விலங்குகள் பல்வேறு வகையான ஒலிகளை எழுப்பிக் கருத்துகளைத் தமக்குள்ளே பரிமாறிக் கொள்கின்றன. எல்லா உயிரினங்களும் அபாயத்தை வெளிப்படுத்தும் எச்சரிக்கை ஒலிகளைக் கொண்டுள்ளன. மேலும் தங்கள் உணர்வுகளையும் கருத்துகளையும் தமக்குள்ளே பரிமாறிக்கொள்ள பலவகைப்பட்ட கிரீச்சொலிகள், நகையொலிகள், அலறல் ஒலிகள், வலி மற்றும் நோவை வெளிப்படுத்தும் ஒலிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றன.



## குரங்கு



குரங்கு மனிதனைப் போன்றது
குரங்கின் வால் மிகநீளமானது
குரங்குக்கு பழமென்றால் விருப்பம்
குரங்கின் கண்கள் மிகவும் பெரியது
குரங்குகள் மரங்களில் தாவும்
குரங்குகள் சாகசம் காட்டும்
குரங்குகளில் பல இனங்கள் உண்டு

எம். எஸ். செய்யத் ஹஸ்னி மௌலானா
ஆண்டு - 07 தமிழ்
கொழும்பு சாஹிராக் கல்லூரி



குருளைச் சாரணர் பயிற்சிப் பட்டறையும் குருளைச் சாரணர் தினமும் அண்மையில் கொழும்பு அல் ஹிக்மா கல்லூரியில் அதிபர் ஜனாப் கே. எம்.எம்.நாஸிர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்வொன்றை வழங்கிய சிறுவர்களை படத்தில் காணலாம். (படம் - என். நஜ்முல் ஹுசைன்)



## குடை பற்றி



மழை பெய்தாலும் குடை, வெயில் சுட்டெரித்தாலும் குடை என்று ஒவ்வொரு பருவநிலை மாற்றத்தின்போதும் மனிதர்களுக்கு அத்தியாவசியமான ஒன்றாக குடை இருக்கின்றது. இவ்வாறு மக்களுக்கு பெரும் தொண்டாற்றி வரும் இந்த குடையானது இன்று நேற்றல்ல 4000 ஆண்டுகளுக்கு முன்னரே பிறந்து விட்டது.

இவ்வாறு மனிதனுக்கு பல வகையிலும் பயன்படும் இந்த குடையானது பல வர்ணங்களிலும் பல வடிவமைப்பிலும் தற்போது வாங்கக்கூடியதாக உள்ளது. அது மாத்திரமன்றி, சிறுவர், பெரியோர், ஆண்கள், பெண்கள் என தனித்தனியான அளவுகளில் தற்போது விற்பனைக்கு உள்ளது.

1830ஆம் ஆண்டு குடைக்கென்றே ஒரு கடை லண்டன் நகரில் ஜேம்ஸ் ச்மித் அன் சன்ஸ் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. அந்தக் கடை இன்றும் லண்டனில் இயங்கி வருவதாக தகவல் உள்ளது.




## குறை

ஒருவன் ரோஜாவை பார்த்து சொன்னான் 'நீ தான் எல்லா மலர்களையும் விட அழகு... ஆனால் உன்னிடம் இருக்கும் முள் இல்லாவிட்டால் இன்னும் அழகு !!!'

கடலை பார்த்துச் சொன்னான் 'கடலே நீ எவ்வளவு அழகு ஆனால் உன் தண்ணீர் எல்லாம் உப்பு. அலை மட்டும் குடிக்குமாறு இருந்தால் நீ இன்னும் அழகு !!!'

குயிலைப் பார்த்து சொன்னான் 'குயிலே உன் குரல் எவ்வளவு அழகு ஆனால் கருப்பாக இருக்கின்றாய். நீ வண்ணமாக இருந்தால் இன்னும் அழகு!!!!

இவை மூன்றும் மனிதனிடம் சொன்னது.........

'மனிதா நீங்கள் எவ்வளவு அழகு.. உங்கள் திறமைக்கு அளவே இல்லை.. ஆனாலும் மற்றவர்களிடம் நிறையை விட்டு குறையை மட்டுமே பார்க்கும் இந்த மனம் இல்லாவிட்டால் நீங்கள் இன்னும் அழகு !!!!'

குறையை விட்டு நிறையை பார்த்தால் இந்த உலகமே அழகு.......

ஒவ்வொருவரிடமும் உள்ள திறமைகளை பார்க்காமல் அவர்களின் குறைகளை மட்டும் கண்டு அவர்களை சமுதாயத்தில் இருந்து புறம் தள்ளல் சரியா ? சற்று சிந்திப்போம்.

எம்.எஸ்.எம். சாஹிர், சாய்ந்தமருது



பாணந்துறை, பள்ளிமுல்லை வை.எம்.எம்.ஏ. கிளையினால் நடத்தப்படும் பாலர் பாடசாலையில் இந்த வருடம் வெளியாகும் மாணவ மாணவிகளுடன் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். அஸ்வர் ஆசிரியைகளான பர்ஹா, பஸ்மிலா, சுமையா ஆகியோர் எடுத்துக் கொண்ட படம். (படம் - எம்.எஸ்.எம். சப்ரீன்)



பாணந்துறை, தொட்டவத்தை, இப்ராஹிம் வீதியில் இயங்கும் கிட்ஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு - கலைவிழாவில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்வின் இறுதியில் பிரதம பொறுப்பாசிரியை ருஷ்தா மற்றும் சக ஆசிரியை ரிஸானாவுடன் எடுத்துக் கொண்ட படம். (படம் - எம்.எஸ்.எம். சப்ரீன்)




வருக வருக புத்தாண்டே
வளங்கள் நிறைந்த புத்தாண்டாய்
தருக தருக புத்தாண்டே
தனமும் குணமும் தந்திடவா!

ஒருமைப் பாட்டில் உயர்ந்திடவா
ஒன்றே நிலமென உணர்ந்திடவா
பெருமை மிக்க இலங்கையாய்
பேரும் புகழும் பெற்றிடவா!

சத்தியம், சாந்தம் நிலைத்திடவா
சமத்துவம் எங்கும் நிலவிடவா
இத்தரை மாந்தர் என்றென்றும்
இன்புற்று மகிழ்ந்திட வா வா!

உண்மை, அன்பு ஒழுக்கமென
உயரிய பண்புகள் அனைத்திலுமே
எண்ணம் உயர்ந்திட வாவா
எல்லா நலனும் தா தா!

கல்லொழுவை பாரிஸ்,
மள்வானை.




நாட்டில் மலர்ந்தது சமாதானம்
வீட்டிலும் வேண்டும் சமாதானம்
நாங்கள் யாவரும் ஒன்றிணைந்து
நலமாய் என்றும் வாழ்ந்திடுவோம்

இன, மத, ஜாதி, பேதம்
இனியும் வேண்டாம் எங்களுக்கு
இந்நாட்டில் யாவரும் சமம் என்றே
இனி நாம் ஒன்றாய் வாழ்ந்திடுவோம்

ஏழையாய் வாழ்ந்தாலும்
ஏக்கங்கள் நீங்கி
எல்லோரும் இன்புற்று
எம்நாட்டில் வாழ்ந்திடுவோம்

எஸ். சிவராஜா
டெம்பல் வீதி, கல்கிஸ்ஸை




பாலமுனை ஹில்ப் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற வருடாந்த பாலர் பாடசாலை விடுகை விழா, மற்றும் கௌரவிப்பு நிகழ்வு என்பன பாலமுனை மின்ஹாஜ் மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் ஹில்ப் சமூக சேவை அமைப்பின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.ஜே.எம்.றிஸ்வான் தலைமையில் நடைபெற்றது. இதன் போது இடம்பெற்ற சிறுவர்களின் வினோத உடை நிகழ்வையும் காணலாம்.

(தகவல் பாலமுனை விசேட நிருபர்)

## சுவையான தகவல்கள்

1. திருப்பதியில் 200 ஆண்டுகளுக்கு முன்னர் ''புளியோதரை'' தான் பிரசாதமாக வழங்கப்பட்டு வந்தது. அதன் பின்னர்தான் லட்டு பிரசாதமானது.
2. ஆப்கானிஸ்தானில் ரயில் கிடையாது.
3. இந்தியாவில் ''பைபிள்'' முதலில் மொழிபெயர்க்கப்பட்டது தமிழில் தான்.
4. ஆண் சிங்கம் சாப்பிட்ட பின்னரே பெண் சிங்கம் சாப்பிடும்.
5. வாத்து அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.
6. கத்தரிக்காயின் தாயகம் இந்தியாவாகும்.
7. பிரேசில் நாட்டு தேன் கசக்கும்.
8. முன்னாள் இந்திய ஜனாதிபதியாகிய அப்துல் கலாம் சிறந்த வீணை கலைஞரும் ஆவார்.
9. உலகில் கடற்கரை இல்லாத நாடுகள் 26 ஆகும்.
10. அமெரிக்காவை விட சகாரா பாலைவனம் பெரியது.




ஒரு முறை தெனாலிராமன் வாழ்கின்ற நாட்டு மன்னருக்கு அண்டை நாட்டு அரசன் ஒருவர் ஓலை அனுப்பியிருந்தார்.

மதிப்புக்குரிய ராஜாவுக்கு,

உங்கள் நாட்டின் மேல் நான் போர் தொடுக்க உத்தேசித்துள்ளேன். மூன்றாவது பௌர்ணமி அன்று உங்கள் நாட்டிற்கு எதிராக போர் முரசு கொட்டப்படும். எனது நாட்டுப்படையைப் பற்றி நீங்கள் அறியாததா? நீங்கள் போருக்கு சம்மதமா? கத்தியின்றி இரத்தமின்றி போர் முடிய வேண்டும் என்றால், நீங்களும் உங்கள் நாடும் என்னிடம் தோல்வியை ஏற்றுக் கொண்டு நாட்டினை என்னிடம் கொடுக்க வேண்டும்.

அப்படி நீங்கள் செய்தால் உங்களுக்கு உயிர் பிச்சை கொடுத்து நாட்டில் எங்கேயாவது ஒரு ஓரத்தில் நீங்கள் வாழ்ந்து கொள்ளலாம்.

இப்படிக்கு
ராஜ ராஜ சிம்மன்.

★★★

மன்னர் உடனே அரச சபையினை நோக்கி அவர்களது கருத்துக்களை கூறச் சொன்னார்.

சேனாதிபதி முதல் மந்திரிகள் வரை ராஜ ராஜ சிம்மனின் படையை வெல்ல முடியாது என்பதை ஆணித்தரமாக கூறினார்கள். மன்னனுக்கும் தெரியும் அந்தப் படையை வெல்லமுடியாது. மேலும் போர் ஏற்பட்டால் எண்ணற்ற மக்கள் உயிரை இழப்பார்கள், பெரும் சேதம் ஏற்படும் என்றார்.

இதற்கு என்ன தான் வழி என்று கேட்டார் மன்னர்.

உடனே அனைவரும் ஆளுக்கு ஒன்றாக பேசினார்கள். அனைவரின் கருத்தும் போரிடாமல் எதிரிக்கு தலை வணங்கலாம் என்பதே.

இவ்வளவு நேரமும் அமைதியாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த தெனாலிராமன் பேசத் தொடங்கினார். ''மன்னா! எதிரி மன்னன் ராஜ ராஜ சிம்மனிடம் நீங்கள் மண்டியிட்டு விட்டால், நாளைய வரலாறு நம் நாட்டையே கேலி செய்யும். இத்தனை நாள் நீங்கள் பெற்றிருந்த புகழ் எல்லாம் மங்கி போய்விடும். மக்களுக்கும் பெரிய அவமானமாகி விடும்.. அதற்கு பதில் போரிட்டு மடிந்தாலும் மாபெரும் படையுடன் போரிட்டு செத்து மடிந்தார்கள் என்று வரலாறு இருக்கும்'

அரசரை தவிர அனைவரும் தெனாலிக்கு பித்து பிடித்து விட்டது என்று கூறி, அவருடன் வாக்குவாதப் பட்டார்கள். முடிவில் மன்னர் சொன்னார்

''தெனாலிராமன் சொல்வதில் உண்மை இருக்கின்றது. அடிமையாக வாழ்வதை விட போர் செய்து மடியவே விரும்புகின்றேன் என்றார்.

அத்தோடு அரச சபை கலைந்து விட்டது. அதன் பின்னர் மன்னரும் தெனாலியும் நீண்ட நேரம் தனிமையில் உரையாடினார்கள். இதற்கு மாற்று வழி உண்டா என்று ஆய்வு செய்தார்கள். ஐந்து நாள்களுக்குப் பின் மீண்டும் அரச சபை கூடியது.

அரசரைப் பார்த்து ''மன்னா உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருந்தால், இந்த விசயத்தை என்னிடம் விடுங்கள். நான் பார்த்துக் கொள்கின்றேன். எனது உயிரை கொடுத்தாவது இந்த நாட்டினை காப்பாற்றுகின்றேன்''. என்றார் தெனாலி.

அதற்கு மன்னர் சம்மதம் தெரிவித்தார். தெனாலி கூறுவதைப் போன்று ஒரு ஓலை எழுதி மோதிர முத்திரை பதித்து கொடுத்தார் தெனாலியிடம்.

அந்த ஓலையை எடுத்துக் கொண்டு தெனாலி எதிரி நாட்டு மன்னர் ராஜ ராஜ சிம்மன் முன்னால் போய் நின்றார். அரசர் கொடுத்த ஓலையை உரக்கப் படித்தார் .

(மிகுதி அடுத்தவாரம்)




நௌஷாட் றிப்கி மௌலானா
ஆண்டு-04 ஏ. தமிழ்
கொழும்பு சாஹிராக் கல்லூரி



தொடர் - 113

சிரேஷ்ட மனநல ஆலோசகர்
துணைத்தலைவர், இலங்கை
உளவள ஆலோசக நிபுணர்கள்
சங்கம், இலங்கை மன்றம்
பிரதித் தலைவர் போதைப்பழக்
கத்துக்குட்பட்டோருக்கான தேசிய
மனவள ஆலோசனை சபை
அஸ்ஹர் அன்ஸார்
M.S Psych (Ind), A.D.Psycho.C (SL),
D.Psy.C (SL), D.Y.T (Ind), FRSPH (UK)



# தொழிலை தோழனாக்கி பயன்மிக்க பணியாளராக ஆகுவோம்




இந்த வருடத்தில் முதல் நாள் பிறந்து விட்டது. முதல் வாரம் ஆரம்பமாகிவிட்டது. விடுமுறையை கழித்த பல அரசாங்க ஊழியர்களும் தனியார் துறை ஊழியர்களும் புது வருடத்தில் முதலாம் நாள் வேலைக்குச்செல்ல தம்மைத் தயார்படுத்திக்கொள்ளும் நேரமும் நெருங்கியிருக்கலாம். வருடத்தின் முதல் வாரத்திலேயே பெரும்பாலான நிறுவனங்களின் வேலைகள் ஆரம்பித்து விடுகின்றன. அங்கு பணியாற்றும் பணியாட்கள், ஊழியர்கள் கடந்த வருடத்தைவிட பிறந்திருக்கும் இந்த வருடத்தில்,

★ பயன்மிக்க பணியாளராக, ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த ஊழியராக சேவை செய்யவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியவர்களாக தத்தம் பணியை ஆரம்பிக்க ஆசை வைத்திருப்பார்கள்.

★ தாம் பணிபுரியும் நிறுவனத்தின் விருத்திக்கும் அந்த நிறுவனத்தின் மூலம் சேவை பெற்றுக்கொள்ளும் தேவையாளர்களுக்கு சரியானதை இன்னும் சரியாக கொடுக்கவேண்டும் என்பதற்காக பல ஆக்கத்திறன் நிறைந்த சிந்தனைகளை திட்டங்களை உருவாக்கிக்கொண்டவர்களாக முதல் நாளில் வேலைக்குப்போக தயாரானவர்களாகவும் இருக்கலாம்.

★ சென்ற வருடத்தைவிட இந்த வருடம் நான் செய்யும் தொழிலை அழகும் அர்த்தமும் புதிய சிந்தனைகளும் கொண்டு மன அமைதியைத் தரக் கூடியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற உறுதியோடும் நம்பிக்கையோடும் தொழிலை ஆரம்பிக்க எதிர்பார்ப்பு உள்ளவர்களாகவும் இருக்கலாம்.

நாம் செய்யும் தொழில் எங்களுக்கு

★ உண்ண உணவையும் உடுக்க ஆடையையும் தருகிறது.

★ உதவி செய்து ஒத்துழைக்க வாய்ப்புத் தருகிறது.

★ சமூக அங்கீகாரத்தைப் பெற்றுத் தருகிறது.

★ மற்றவர்களோடு உறவு பேண ஊக்குவிக்கிறது.

★ புதிய சிந்தனைகளை உருவாக்கச் செய்கிறது.

★ அறிவை வளர்க்கவும் ஆய்வு செய்யவும் வழிகாட்டுகிறது.

★ மேலும் உயரச்செல்ல பாதை வெட்டித் தருகிறது.

அதனால் தான் தொழில் மீது பற்றும் ஆசையும் எங்களுக்கு ஏற்படக் காரணமாக இருக்கிறது.

செய்யும் தொழில் தொடர்பான புதிய அறிவைப் பெற்று, நுட்பங்களைப் கற்று முன்னேறிச்செல்ல வேண்டும் என்ற ஆசையும் பிறக்கிறது.

பல வழிகளில் துணையாகவும் தோழனாகவும் இருக்கும் எமது தொழிலை எமது உள்ளத்திற்கு நெருக்கமானதாகவும் உணர்வில் கலந்ததாகவும் ஆக்கிக்கொள்ள வேண்டிய பொறுப்பு எமக்குக் கட்டாயமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எமக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை, பணியை முழுமையாகவும் மனத்திருப்தியோடும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். மக்களுக்கு எதைக்கொடுக்க ஒப்படைக்கப்பட்டோமோ அதை முறையாகச் செய்யவும் கொடுக்கவும் தேவையான தகுதி எமக்குக் கிடைக்கக் காரணமாகிவிடும்.

தொழில்மீது பற்றாக இருங்கள்
தொழிலை தோழனாகக் கருதுங்கள்
தொழிலை நேர்த்தியாகச் செய்யுங்கள்
செய்யும் தொழிலை அமானிதமாகச் கருதுங்கள் என்றெல்லாம் சொல்லப்படுவதற்குக் காரணம் நாம் செய்யும் தொழில் எங்களோடு மட்டும் தொடர்பானதல்ல. அது மற்றவர்களோடும் தொடர்பானது. மற்றவர்களின் மனங்களோடும் தொடர்பானது. மற்றவர்களின் மாற்றங்களோடும் எழுச்சியோடும் தொடர்பானது. குறிப்பாகச் சொன்னால் எமது குடும்பத்தினதும் நாம் வாழும் சமூகத்தின் ஆரோக்கியத்தோடும் நாம் நம்பியிருக்கும் ஆன்மீகத்தோடும் தொடர்பானது.

நாம் பணிபுரிவது அரச நிறுவனமாகவோ தனியார் நிறுவனமாகவோ இருக்கட்டும். எல்லா இடத்திலும் மனித மூலத்தொடர்புகள் இருப்பதால் இந்த உண்மை எல்லா இடத்திற்கும் எல்லா நிறுவனத்திற்கும் பொருந்தும்.

நாம் தொழில் மீது பாசமும் பற்றும் வைத்து தொழில் செய்யும் இடத்தையும் அங்குள்ள தலைவரையும் ஏனைய பணியாளர்களையும் மதித்து, தொழில் பயனாளிகளுக்கு எதைக் கொடுக்க வேண்டுமோ அதைக்கொடுத்து மனநிறைவான சேவையாளராக பணியாற்றக் கூடியவர்களாக இருந்தாலும் நாம் தொழில் செய்யும் இடத்தில் எதிர்மறையான மனோபாவங்களைக் கொண்ட, தொழில் மீது பற்றற்ற தொழிலாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறானவர்கள் பல விதத்தில் பலருக்கும் தொந்தரவாகவும் பல பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். தொழில் பற்றோடும் சமூக உணர்வோடும் பணியாற்றக்கூடிய நல்ல பணியாளர்களுக்குக் கூட இவர்களது செயற்பாடுகள் தொல்லையாகவும் தொந்தரவாகவும் இருக்கும்.




எதற்குத்தான் இந்தத் தொழிலுக்கு வந்தார்களோ தெரியாது சம்பளம் எடுக்க மட்டும்தான் வேலைக்கு வருகிறார்கள் இவர்களால் எல்லோருக்குமே தொந்தரவுதான். இது போன்றவர்களால்தான் நிறுவனங்கள் நாசமாகின்றன.

இவ்வாறான பல எதிர்மறையான கருத்துக்கள் வெளிவருவதற்கு அவர்களின் செயற்பாடுகளே காரணமாகும். எதிர்மறையான மனோபாவங்களைக்கொண்ட இந்தக் கசப்பான ஆளுமைகளால் ஒரு நிறுவனத்தின் இலக்கும் எதிர்பார்ப்பும் காயப்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக கண்களுக்குத் தெரியும் விதத்தில் வாரத்திற்கு வாரம் மாதத்திற்கு மாதம் வருடத்திற்கு வருடம் அந்த நிறுவனம் பின்னடைந்து செல்வதைக் கண்டுகொள்ளலாம்.

அப்படியானால், யார் இந்த கசப்பான ஆளுமைகள்? யார் இந்த எதிர்மறையான மனோபாவங்களைக் கொண்ட மனிதர்கள்? ஆம்! அவர்களும் தொழிலாளர்கள் தான்.

ஆனால் அவர்கள்

★ தமது சகபாடிகள் விடும் தவறுகளை மிகைப்படுத்தி விமர்சித்து முரண்படக்கூடியவர்களாக இருப்பார்கள்.

★ ஏனைய பணியாளர்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை உருவாக்கி கோல் சொல்லி பொய்வதந்திகளைப் பரப்பக்கூடியவர்களாக இருப்பார்கள்.

★ ஏனைய பணியாளர்கள் இல்லாத பொழுது அவர்களைப்பற்றி தவறாகவும் தரக்குறைவாகவும் கதைப்பார்கள்.

★ தமது மேற்பார்வையாளரின் தகுதியை தரம் குறைத்து அவர் விடுக்கும் பொறுப்புகளை செய்ய விடாமல் கவனயீனமாக இருப்பார்கள்.

இவர்கள் தமது மேற்பார்வையாளர்களுக்கு, முகாமையாளருக்கு, அதிபருக்கு, அல்லது பணிப்பாளருக்கு மிகவும் அச்சுறுத்தலாகவும் அவதியாகவும் இருப்பார்கள். அவர்களின் செயற்பாடுகளால் பயனாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறான எதிர்மறை மனப்பாங்குகளைக் கொண்ட பணியாளர்களை நாங்கள் பணிபுரியும் நிறுவனத்திலும் கண்டிருப்போம். அவர்களின் நடத்தைகள் இயல்புகள் பற்றி நாம் அறிந்துகொள்வது எமக்கும் எமது நிறுவனத்திற்கும் உதவியாக இருக்கும் என்பதால் அவர்கள் பற்றிய மேலும் சில விடயங்களைத் தெரிந்து கொள்வோம்.

எதிர்மறை மனப்பாங்குகளைக் கொண்ட பணியாளர்கள்

★ தாம் செய்யும் வேலையில் அக்கறையும் ஆசையும் காட்ட மாட்டார்கள்

★ வேலைக்கு நேரம் தவறி வருதல், முறையின்றி வருதல், வராதிருத்தல், பொருந்தாத காரணங்களைச் சொல்லி சமாளிக்க முற்படுவதை இவர்களில் காணலாம்.

★ மற்றப் பணியாளர்களோடு கூழுகமாகச் செயற்படவும் சேர்ந்து செயலாற்றவும் தெரியாமல் இருப்பார்கள்.

★ மேலதிகமாக வேலை செய்யவும் நேரத்தை அதிகரித்து செயலாற்றவும் விரும்பமாட்டார்கள்.

★ தாமாக முனைந்து முன்வந்து வேலைகளை செய்ய அக்கறை காட்ட மாட்டார்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று மற்றவர் சொல்லும்வரை காத்திருப்பார்கள்.

★ இலகுவான சில விடயங்களைக் கூட சரியாக விளங்கிக்கொள்ளமாட்டார்கள்.

★ பிரச்சினை தீர்க்கும் திறனும் தீர்மானம் நிறைவேற்றும் ஆற்றலும் இவர்களிடம் குறைவாகவே இருக்கும்.

★ கதை வளர்த்தல், குத்திக்காட்டுதல், வதந்திகள் பரப்புதல் போன்ற மற்றவர்களுடன் தொடர்பான விடயங்களில் ஆர்வமாக இருப்பார்கள்.

★ நிறுவனம் தனக்கு வழங்கியிருக்கும் நேரத்தை சொந்த தேவைக்கும் பயன்படுத்துவார்கள்.

★ செய்த விடயங்களுக்கும், விட்ட தவறுகளுக்கும் அவர்கள் பொறுப்பேற்காமல் மற்றவர்கள் மீது குற்றத்தைச் சாட்டிவிடுவார்கள்.

★ மற்ற ஊழியர்களினதும் நிறுவனத்தினதும் உடமைகளை அனுமதி இல்லாமலும் விருப்பம் கேட்காமலும் பெறவும் பாவிக்கவும் செய்வார்கள்.

★ நவீன கருத்துக்கள், கற்றல் முறைகள், நுட்பங்களுக்கு தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பமாட்டார்கள்.

★ பாரம்பரிய, பழைய முறைகளுக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு இருப்பார்கள். புதிய மாற்றங்களுக்கு தம்மைப் பழக்கப் படுத்திக்கொள்ள விரும்பமாட்டார்கள்.

★ தமக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை பொறுப்பேற்காமல் இருக்க பொருந்தாத காரணங்களைக் கூறுவார்கள்.

★ தமது மேலதிகாரிகள், அறிவனுபவம் கொண்ட மூத்த பணியாளர்கள் மற்றும் நண்பர்களுடன் உரையாடி தொழில் வான்மையை விருத்தி செய்துகொள்ளமாட்டார்கள்.

★ ஒப்படைக்கப்பட்ட விடயங்களை நேரத்திற்குச் செய்யத் தவறும் போது பல காரணங்களையும், விளக்கங்களையும் முன்வைக்க ஒரு போதும் தவறமாட்டார்கள்.

★ பணிபுரியும் நிறுவனத்தின் மீது பற்றுறுதி காட்டவோ நன்றியுணர்வை வெளிப்படுத்தவோ மாட்டார்கள்.

★ தாம் பணிபுரியும் நிறுவனத்தின் நோக்கத்தை அது அடைய முயற்சிக்கும் அடைவைப்பற்றி யோசிக்கவோ அதற்காக முயற்சிக்கவோ மாட்டார்கள்.

★ தான் பணிபுரியும் நிறுவனம் எதை மக்களுக்கு கொடுக்க முயற்சிக்கிறது. மக்கள் எதை எப்படி நிறுவனத்திடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள் என்று எண்ணவோ மக்கள் அதுபற்றிக் கேட்டால் சரியான பதிலைக் கொடுக்கவோ இயலாதவர்களாக இருப்பார்கள்.

★ சம்பளம் கிடைக்கும் நாள் வரும் வரை இருப்பார்களே தவிர அவர்களால் எதிர்பார்க்கப்படும் சேவையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருக்க மாட்டார்கள்.

★ வேலை அல்லாத நாட்களில் நடைபெறும் செயற்பாடுகள், கருத்தரங்குகள், சமூக சேவைகள் போன்றவற்றில் பங்கேற்க மாட்டார்கள்.

★ குழுவாகச் செயற்படவும் குழு ஒருமைப்பாட்டைப் பேணவும் மாட்டார்கள்.

★ பயனுள்ள கருத்துக்களை வெளிப்படுத்துவதைவிட சாதாரண விடயங்கள் பற்றியே கதைக்க விரும்புவார்கள்

★ மற்றவர்களைப்பற்றி விமர்சிப்பதற்காக ஏதாவது ஒரு காரணத்தை எடுத்துக் கொள்வார்கள்.

★ உடை, நடை, உரையாடல், சுத்தம், ஒழுங்கு போன்ற தமது தனிப்பட்ட வாழ்வின் சுயவிடயங்களை முறையாகப் பேணவும் அவை தாம் பணிபுரியும் நிறுவனத்திற்கும் பணியாட்களுக்கும் தம்மோடு தொடர்பான மற்றவர்களுக்கும் எப்படியான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்றும் எண்ண மாட்டார்கள்.

இவையும் இவை போன்ற இன்னும் பலவிதமான முரணான நடத்தைப்பாங்குகள் ஒரு எதிர்மறையான மனநிலையுடைய பணியாளர்களிடம் காணப்படலாம்.

தொழில் மீது பற்றும் பாசமும் கொண்டு தொழிலை தோழனாக்கி தனக்கும் தன் குடும்பத்திற்கும் தான் வாழும் சமூகத்திற்கும் பயனுறுதிமிக்க பணியாளராக எம்மை மாற்றி அமைக்கும் பயணத்தில் இருக்கும் எம்மிடம் மேலே குறிப்பிட்டவாரான எதிர்மறை பணியாள் பண்புகள் உட்புகுவதை அல்லது உருவாகுவதை நாம் அறவே விரும்பமாட்டோம். அப்படி ஏதோ ஓரிரண்டு இருந்தால் கூட அவற்றை அவசரமாக எடுத்து எறிந்துவிடவே விரும்புவோம்.

தொழிலுக்கு வான்மை சேர்த்து தொழில் செய்யும் இடத்தின் வாக்கை நிறைவேற்றி, பயனாளிகளுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, அவர்கள் மனங்களில் பாசத்தை விதைத்து, மண்ணுக்கு மணம் சேர்த்து, மனித எண்ணங்களை வளப்படுத்தி பாயனுறுதிவாய்ந்த பணியாளராக எம்மை மாற்றியமைக்கவே நாம் ஆசைப் படுகிறோம். அதை எமது தொழிலின் இலக்காகவும், எமது உணர்வில் உறைந்த ஊற்றாகவும் ஆக்கிக்கொண்டு பணிபுரியும் நல்ல பணியாளராக இந்த வருடத்தை ஆரம்பிப்போம்.

இந்த வருடத்திலும் இனி சந்திக்கப் போகும் வருடங்களிலும் நாம் செய்யும் தொழிலில் பயனும் செழிப்பும் சேரட்டும்!

இறைவனின் அருளும் பாதுகாப்பும் கிட்டட்டும்! என்றும் பிரார்த்தித்துக்கொள்வோம்.

★★★

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் கௌரவிப்பு







அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு கடந்த வெள்ளிக்கிழமை நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது ஊடகவியலாளர்களான ஏ.எல்.ஜுனைதீன், பி.எம். எம்.ஏ.காதர், ஐ.எல்.எம்.றிஸான், யூ.எம்.இஸ்ஹாக், நழீம் எம். பதுறுதீன், எம்.ஐ.எம்.வலீத், ஏ.எல்.எம்.முஜாஹித், ஏ.புவாத், எம்.பி.அஹமட் ஹாறூன், ரீ.கே.றஹ்மத்துள்ளா, எம்.ஐ.அன்வர், ஏ.ஜே.எம்.ஹனிபா, ஜெஸ்மி எம். மூஸா, ஏ.எல்.றமீஸ், எம்.சி.அன்சார், எம்.ஐ.எம்.றியாஸ், எம்.ஏ.றமீஸ், எம்.எல்.சரிபுத்தீன், ஆர்.தில்லைநாதன், எஸ்.நடனசபேசன், எஸ்.எம்.அறூஸ், ஏ.கே.ஜஹ்பர், எஸ்.எல்.அஸீஸ், ஜலீல் ஜீ ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

(மெகாபொலிஸ்) நகரத்திட்டத்துக்கு

# சகலரும் முழுமையாக பங்களியுங்கள் ஜனாதிபதி அனைவருக்கும் அழைப்பு

மேல்மாகாணம் உட்பட இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட உள்ள மாநகர (மெகாபொலிஸ்) அபிவிருத்தித் திட்டம் தொடர்பான தகவல்கள் கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த புதுவருடத்தில் அரசாங்கத்தினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்ற இந்த மாநகர அபிவிருத்தித் திட்டத்தின் வெற்றிக்கு அனைவரும் தங்களது பங்களிப்புக்களை கட்டாயம் வழங்க வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த மாநகர அபிவிருத்தித் திட்டம் 2016ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்ததோடு ஒவ்வொரு அமைச்சும், திணைக்களங்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் இந்த திட்டத்தினை ஒரு முதன்மையான திட்டமாக கருதி தங்களுடைய முழுமையான பங்களிப்புக்களை பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முறைசாரா நிலைமிலுள்ள நகர அபிவிருத்தியினை முறையான நகர அபிவிருத்தியாக மாற்றுவதனூடாக மக்களின் மகிழ்ச்சியினை அதிகரிப்பதே இந்தத் திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். அத்தோடு இந்தத் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக நகரங்களை அழகுபடுத்தி அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும்.

இந்த மாநகர அபிவிருத்தித் திட்டத்தினூடாக செயற்படுத்தப்படும் நகர அபிவிருத்தியின்போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயங்கள் சில இனங்காணப்பட்டுள்ளன. அத்தவகையில் போக்குவரத்து நெரிசல், கழிவுப்பொருட்கள் அகற்றுதல், குடிசை வீடுகளில் வசிப்போருக்கு வீட்டு வசதிகள் அத்துடன் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவனவையே இனம்காணப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டம் மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு 2030ம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட இருக்கின்றது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோள் எல்லா நகரங்களும் ஒரே மாதிரியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதாக அமைய வேண்டும் எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி அதனூடாக வசிவாய்ப்புக்களைத் தேடி கொழும்புக்கு புலம்பெயரும் மக்களுடைய எண்ணிக்கையினை குறைக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.



இந்த மாநகர அபிவிருத்திக் அபிவிருத்திக் திட்டத்தின் ஊடாக எதிர்வரும் 10 ஆண்டுகளுக்குள் 30 பில்லியன் அமெரிக்கடொலர் பெறுமதியுள்ள முதலீடுகள் இலங்கைக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும் என மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, சஜித் பிரேமஜயந்த, அர்ஜுன ரணதுங்க மற்றும் மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய ஆகியோரும் இந்த சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

# விபத்தில் பலியான குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்

அமைச்சர் றிஷாத் பதியுதீன்



வரக்காப்பொல வாகன விபத்தில் பலியான சம்மாந்துறையைச் சேர்ந்த முஸ்லிம்களின் குடும்பத்தவர்களுக்கு அமைச்சர் றிசாத் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

புனித உம்ரா கடமைக்குச் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்காகக் கொழும்புக்கு வந்த போது, அதிகாலையில் இந்த விபத்தில் சிக்குண்டு உயிரிழந்தமை, இலங்கை வாழ் மக்களை அதிர்ச்சிக்கும் கவலைக்கும் ஆளாக்கியுள்ளது. இந்த விபத்தில் அகப்பட்டு காயமடைந்தவர்களுக்கும் தனது கவலையை வெளியிட்டுள்ள அமைச்சர், இவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென தாம் பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்நப் பகுதியில் அதிகாலை வேளையில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. இதனைக் கவனத்திற்கொண்டு வாகனச் சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனத்தை செலுத்த வேண்டுமென்பதை கருத்திற்கொள்ளுமாறும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இறைவனின் சந்நிதானத்தை தரிசிப்பதற்காக நியத்து வைத்து புறப்பட்ட இருந்த இவர்களுக்கு, அல்லாஹ் ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை நஸீபாக்குவானாக எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவுக்கு ஸ்ரீலங்கா தவ்ஜீத் ஜமா அத் பிரதிநிதிகளால் குர்ஆன் சிங்கள மொழிபெயர்ப்பு பிரதி வழங்கப்படுவதைப்படத்தில் காணலாம்.

# சாந்தியின் வாசல்கதவுகளை திறந்திடும் புத்தாண்டாக மலரட்டும்

அமைச்சர் கபீர் ஹாசிம்

இலங்கைத் திருநாட்டின் அனைத்தின மக்களுக்கும் இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். யுத்தம் முடிவுக்கு வந்தும் நல்லாட்சிக்காக ஏங்கிக்கொண்டிருந்த மக்களுக்கு இந்த புத்தாண்டு நல்லாட்சியின் மடிகளிலே மலர்ந்திருக்கின்றது. நாம் கடந்து வந்த பாதைகள் சந்தித்த இடர்கள் அனைத்தையும் நல்லாட்சியின் சாமரங்களால் வருடி சுகம் கொடுத்து சாந்தியின் வாசல் கதவுகளைத் திறந்துவிடும் புத்தாண்டாக மலர்வது நம்மனைவருக்கும் நிறைவளிப்பதாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அரச தொழில் முயற்சி அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

புதிய சிந்தனை நவீன அரசியலமைப்புச் சட்டம் மாண்புறுதேசம் இதுவே ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தாண்டுப் பிரகடனம். பகை மறத்தலும் வகை கூறலுமே நல்லாட்சிக்கு அழகு. அதற்கிணங்க மாற்றுக் கட்சியினரையும் மாற்றத்திற்காக அழைத்து இந்த தேசத்தில் ஒரு தேசிய அரசை அமைத்தமை வரலாற்றுத் திருப்பம் என்றே கூறலாம்.

இந்தப் புனிதப்பயணத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கீர்த்திமிக்க மக்களை இணைந்துகொள்ளுமாறு இத்தருணத்தில் அனைவரையும் அழைக்கின்றோம்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதும் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பினை உறுதிசெய்வதும் இனநல்லுறவை வலுப்படுத்தலும் இந்த தசாப்தத்தில் நம் முன்னே நிலைநிறுத்தப்பட்டுள்ள சவால்களாகும். அத்தகைய இலக்குகளை அடைவதே இந்த நூற்றாண்டில் எமது அடுத்த இளைய சந்ததிக்கு நாம் செய்கின்ற நற்பணியாகும்.

இவற்றைக்கருத்திற்கொண்டு புத்தாண்டு இனிதே மலர எல்லாம்வல்ல இறைவனின் அன்பும் அருளும் நிறைவாய் பொழிய வல்லோனைப் பிரார்த்திப்போமாக.



# மாவனல்லையில் இலவச ஊடகச் செயலமர்வு

21ம் நூற்றாண்டில் உலகை உள்ளங்கையில் வைத்து ஆட்டிப்படைக்கும் ஊடகங்கள் சர்வதேசத்திலும், உள்ளூரிலும் பாரிய சாதனைகளுக்கும், மாற்றங்களுக்கும் வித்திட்டுள்ளன. இன்று பல சமூகங்களும் தங்களின் கலை கலாசார விருத்திக்கும் சமூக வழிகாட்டல்களுக்கும் தங்களின் சமூகத்தை அறிமுகப்படுத்துவதற்கும் ஊடகங்களைப் பயன்படுத்தி வருகின்றன. ஆனால் முஸ்லிம்கள் இத்துறையில் பின்தங்கியே காணப்படுகின்றனர்.

ஊடகத்துறை முஸ்லிம்களுக்கு தூரமானதோ அன்னியப்பட்ட துறையோ அல்ல, முஸ்லிம்களின் சிலரால் கால தாமதமாக புரிந்துகொள்ளப்பட்ட ஒரு துறையாகும். இன்று இணையதள தொடர்பாடல் பற்றி பேச வேண்டிய நாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஊடகங்களைப் பற்றி பேசுவது முஸ்லிம்களின் தேடலின் சிறு தாமதமே என்றாலும் தவிர்க்க முடியாத காலத்தின் பலவந்தமாகும். எனவே இந்த இடைவெளியை நிரப்புவதற்கு,

மாவனல்லை ஜே.எம்.மீடியா ஊடக நிறுவனம் ஏற்பாடு செய்திருக்கும் இலவச ஒரு நாள் ஊடகச் செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (03.01.2016) மாவனல்லை முபாரிஸ் மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இடம்பெறும். இந்த இலவசக் கருத்தரங்கு புகழ் பெற்ற அறிவிப்பாளர், அதிபர் ஏ.ஆர்.எம். ஜிப்ரி மற்றும் இன்னும் பல ஊடகவியலாளர்களைக்கொண்டு நடாத்தப்படவுள்ளது.

ஊடகர்கள், மாணவர்கள், ஊடக அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றவர்கள், ஊடக ஆர்வலர்கள்,சமூக வலைத்தளங்கள் மற்றும் செய்தி இணையங்களை செயற்படுத்துகின்றவர்கள் அனைவரும் இச்செயலமர்வில் பங்குபற்றி பயன்பெறலாம்.

மேலதிக தகவல்கள் மற்றும் பதிவுகளுக்கு 077 99 429 34 தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

வட மாகாணசபையில்

# முஸ்லிம் உறுப்பினர்கள் பங்கேற்காது கல்வி நியதிச்சட்டம் நிறைவேறியது

(பாறுக் சிஹான், யாழ் நிருபர்)

வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட கல்வி நியதிச்சட்டம் தொடர்பான வடமாகாண கல்வி அமைச்சின் கல்வி நியதிச்சட்டம் தொடர்பான மாகாணசபையின் விசேட அமர்வில் எந்த ஒரு முஸ்லிம் உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை. எனினும் எவ்வித எதிர்ப்புக்கள் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது.

அதேவேளை, குறித்த நியதிச்சட்டம் மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஆங்கில மொழியில் வழங்கப்பட்டமை தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

கல்வி நியதிச்சட்டத்தை அங்கீகரிப்பதற்கான விசேட அமர்வு நேற்று மாகாணசபை பேரவை செயலகத்தில் நடைபெற்றிருந்தது. இதன்போது கல்வியமைச்சின் நியதிச்சட்டத்தை கல்வியமைச்சர் த.குருகுல ராஜா சபையில் முன்மொழிந்திருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நியதிச் சட்டம் தமிழ் மொழியில் இல்லாமல் ஆங்கில மொழியில் வழங்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு மற்றைய அமைச்சுக்கள் செய்திருந்தால் கூட ஒத்துக் கொள்ளலாம். ஆனால் கல்வியமைச்சு செய்திருப்பதை ஒத்துக் கொள்ள முடியாது. கல்வியமைச்சு இவ்வாறு செய்திருக்கக்கூடாது.

இவ்வாறு செய்வதாயின் வடமாகாணசபையின் மேன்மைபெறும் மொழியாக ஆங்கிலத்தையா வைத்திருக்கின்றீர்கள் என கேள்வி எழுப்பினார்.இந்நிலையில் பதில் வழங்கிய அவைத் தலைவர் இந்த நியதிச்சட்டம் முன்னதாகவே அங்கீகரிக்கப்பட்ட நிலையில் ஆளுநரிடம் அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் திருத்தங்களுடன் சபை பரிசீலனைக்காக வந்திருக்கின்றது. எனவே இதன் தமிழ் மொழிபெயர்ப்பு உள்ளது. ஆனால் அதனை இங்கே எடுத்து வந்திருக்கவில்லை.எனவே எதிர்க்க வேண்டியதில்லை. என்றார். இதனையடுத்து நியதிச்சட்டம் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு சில திருத்தங்களுடன் சபையில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.



இலங்கையில் சிறந்த கைத்தொழில் முதலீட்டு உற்பத்தியாளர்களுக்கான மத்திய மாகாண பரிசளிப்பு வைபவம் கண்டி சுவிஸ் ஹோட்டலில் இடம் பெற்றது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கண்டியிலுள்ள உதவி இந்தியத் தூதுவர் செல்வி ராதா வெங்கட்ராமன் 2015 ஆம் ஆண்டுக்கான விருதை கண்டி டெலிபிக்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் நிமல் பீரிசுக்கு வழங்கும் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் - வத்துகாமம் நிருபர்)

போராட்டங்கள்......

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷ 350ரூபாய் உர மானிய சலுகையை முன் வைத்திருந்தார். இது பற்றி ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியிலேயே கருத்துத் தெரிவித்த தற்போதைய பிரதமர் பொய் வாக்குறுதிகளை நான் வழங்க மாட்டேன் என குறிப்பிட்டு இத்திட்டத்தை தன்னால் நடைமுறைப்படுத்த முடியாது என்பதை வெளிப்படுத்தி இருந்தார்.எனினும்,மஹிந்த ராஜ பக்ஸ ஆட்சி செய்த காலப்பகுதி முழுவதும் இத் திட்டத்தை நடைமுறைச் சாத்தியப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மஹிந்த அரசின் உரமானிய அளவு வருடத்திற்கு வருடம் குறைக்கப்பட்டாலும் விவசாயிகளுக்கு போதுமான அளவு உர மானியம் வழங்கப்பட்டிருந்தது.தற்போதைய அரசு உரமானியத்திற்கு வவுச்சர் முறையை அறிமுகம் செய்ய உள்ளது.வவுச்சர்கள் மூலம் சிறு தொகையை வழங்கிவிட்டு தாங்களும் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கிவிட்டதான ஒரு ஏமாற்று வேலையை செய்யப் போகிறதா என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.அப்படி இல்லை என்றால் ஒரு விவசாயிக்கு அவர் விவசாயம் செய்யத் தேவையான உரமானியத்தை பெற்றுக் கொள்ளுமளவு வவுச்சர்கள் மூலம் பணம் வழங்கப்படல் வேண்டும்.அன்றே இது தன்னால் முடியாது எனக் கூறிய தற்போதைய பிரதமரணிலிடம் இதனைக் கேட்பது சரியானதா? என்றும் வினா எழுப்பலாம்.மஹிந்த அரசில் வழங்கப்பட்ட உரமானியப் பாவனையால் சிறு நீரக நோய் ஏற்படுவதாக இவ் அரசு குற்றம் சாட்டியுள்ளது.இது பற்றி மஹிந்த அரசு காலத்தில் யாரும் வாய் திறந்ததாக அறிய முடியவில்லை.மஹிந்த அரசு காலத்தில் ராஜித சேனாரத்தன சுகாதார அமைச்சராக இருந்தவர். ஏன் இவரால் அன்று இப் பிரச்சனையை வெளிபடுத்த முடியவில்லை.சிறு நீரக நோயாளர்கள் விடயத்தில் மிகவும் அக்கறை காட்டும் ஜனாதிபதி மைத்திரி அக் காலத்தில் ஏன் மௌனியாக இருந்தார் என்பன இவ் விடயத்தில் சிந்திக்கத் தூண்டுபவையாகும்.

விவாசாயம் செய்ய தேவையானவற்றின் விலையை இவ் அரசு அதிகரித்தால்,விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான விலையையும் இவ் அரசு அதிகரிக்க வேண்டும்..அரச ஊழியர்களுக்கு சம்பளமும் அதிகரிக்க வேண்டும் சலுகையும் அதிகரிக்க வேண்டும்..ஆனால்,விவசாயிகளின் கோரிக்கை அவ்வாறானதல்ல. இவ்வாறு விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான விலை அதிகரிக்கப்பட்டாலும் அவ் அதிகரிப்பின் பயனை ஒரு போதும் விவசாயிகள் அனுபவிப்பதுமில்லை.இன்று அரசு விவசாயப் பொருட்களுக்கு ஒரு நிர்ணய விலையை வைத்திருக்கும்.ஆனால்,விவசாயிகள் அக் குறித்த விலைக்கு ஒரு போதும் விற்பதில்லை. இவ் விடயத்தில் வேளாண்மை விவசாயிகள் அதிகம் பாதிப்புறுகின்றனர். ஆனால், அரிசி நிர்ணயம் செய்யப்பட்ட விலையிலேயே விற்கப்படும்.இதனால் வசதி படைத்தோரும்,இடைத் தரகர்களுமே பயனடைகின்றனர்.

விவசாய உற்பத்திப் பொருட்களை அரசின் நிர்ணய விலையில் விவசாயிகள் விற்பனை செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இந் நடவடிக்கை மூலம் நாட்டின் முதுகெலும்பாக கருதப்படும் விவசாயிகளின் வாழ்வாதாரம் துரித அபிவிருத்தி காணும் என்பதில் ஐயமில்லை.இவ்வாறு நடவடிக்கை எடுத்தால் உரமானியத்திற்கு ஓரளவு நிவாரணம் வழங்கினாலும் விவசாயிகள் பாரிய இலாபங்களை சுவைத்துக் கொள்வார்கள்.

எது எவ்வாறு இருப்பினும் எதிர்வரும் ஆண்டிற்கு ஐ.தே.கவினால் வரையப்பட்ட வரவு செலவுத் திட்டம் பல திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது..அதாவது ஐ.தே.கவின் வரவு செலவுத் திட்டம் தோல்வியைத் தழுவியுள்ளது என்பது தான் உண்மை.ஐ.தே.கவின் வரவு செலவுத் திட்ட செம்மைப்படுத்தலுக்கு இறுதி நேரத்தில் சு.க வின் சிந்தனைகளையும் உள்ளடக்க வேண்டிய ஒரு நிலைக்கு ஐ.தே.க தள்ளப்பட்டிருந்தது. தனித்து மக்களை சமாளிக்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் அமைக்க முடியாத ஒரு கட்சி எப்படி இந் நாட்டினை வழி நடாத்திச் செல்லப் போகிறது.இவ் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள விசேடம் எதிர்க் கட்சித் தலைவர் இவ் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்தமையாகும்.இப்படியான ஒரு ஆதரவு பெற்ற வரவு செலவுத் திட்டம் பல திருத்தங்களுக்கு உள்ளானமை எமது நாட்டின் எதிர்கால முன்னெடுப்புக்களை கேள்விக்குட்படுத்துகிறது. நாட்டின் பிழையான போக்குகளை சுட்டிக் காட்ட வேண்டிய கடப்பாடுடைய எதிர்க் கட்சி,எதிர்க் கட்சிக்குரிய சீரிய பண்பை இவ் விடயத்தில் வெளிப்படுத்த தவறியுள்ளது. அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிரான அனைத்துக் கோசங்களையும் சரியானது எனக் குறிப்பிட முடியாது.எனினும்,ஒரு திட்டத்தை முன் வைக்கின்ற போது எழச் சாத்தியமான விமர்சனங்களை,போராட்டங்களை யூகித்து அதனை எதிர்கொள்ளவும் குறித்த அரசு தயாராக இருக்க வேண்டும். அவ்வாறானதொரு தயார்படுத்தலை இவ் அரசு மேற்கொண்டிருக்கவில்லை. இவ்வாறானவை இவ் அரசின் முதலாளித்துவப் பண்பை வெளிப்படுத்துகிறது.

போராட்டக்காறர்கள் முன் வைத்த பல கோரிக்கைகளுக்கு அடி பணிந்தே இவ் அரசு பல சவால்களை முகம் கொடுத்துள்ளது.இது வெளிப்பார்வையில் வெற்றியாக தென் பட்டாலும் மறைமுகமாக பல எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.

அதாவது திட்டமிட்டதை விட அரசிற்கு அதிக பணம் தேவைப்படும்.அல்லது இதனை சமாளிக்க வரவு செலவுத் திட்டத்திலுள்ள சில விடயங்களை நடைமுறைப்படுத்தாது தவிர்க்க வேண்டும்.

ஒரு வருட வரவு செலவுத் திட்டத்தில் உள்ள விடயத்தை நடைமுறைப்படுத்தாமல் தவிர்ப்பது அக் குறித்த அரசுக்கு பாரிய இழுக்கை ஏற்படுத்துவது மாத்திரமின்றி வரவு செலவுத் திட்டம் என்ற ஒன்றை வரைந்ததிலும் அர்த்தமற்றதாகிவிடும்.இதனை சிந்தித்து அனைத்தையும் நடைமுறைப்படுத்தினால் துண்டு விழும் தொகை அதிகரிக்கும். இது நாட்டின் சீரிய பயணத்திற்கு பாரிய சவாலை ஏற்படுத்தும். போராட்டக்காரர்களின் போராட்டங்களுக்கு அடிபணியாது இருக்க பயணிக்க வேண்டுமானால் சிங்கப்பூரின் சிற்பி லீ குவான் யூ முன்னெடுத்தது போன்று மிகக் கடுமையான நடவடிக்கைகளைத் தான் முன்னெடுக்க வேண்டும். அக் கடுமையான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுப்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று. போராட்டத்திற்கு அடிபணிந்தாலும் பிரச்சினைதான்,அடிபணியாவிட்டாலும் பிரச்சினைதான்.தற்போதைய அரசு இவ் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒரு இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனை இவ் அரசு திறம்பட சமாளிக்கத் தவறினால் இது எதிர்காலத்தில் இவ் அரசுக்கெதிரான போராக உருவெடுக்கும்.

# வன்னி அபிவிருத்திக் குழு இணைத்தலைவராக மஸ்தான்



வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழு இணைத்தலைவராக வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி மூன்று மாவட்டங்களினதும் 15 பிரதேச செயலகங்களினதும் பிரதேச அபிவிருத்திக்குழு இணைத்தலைவராகவும் நியமனம் பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் நியமனத்தின் பிரதிகள் ஜனாதிபதியினால் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர்களான வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிஷாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட-மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோருக்கும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குர்ஆன் மத்ரஸாக்களை யாராலும் மூட முடியாது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர்



(எம்.எஸ்.எம். ஸாஹிர்)

குர்ஆன் மத்ரஸாக்கள் சமயத்தின் அடிப்படையில் வாழ்வதற்கான பயிற்சிகளையே அளித்து வருகின்றது. சிங்களப் பிள்ளைகள் தஹம் பாடசாலைகளுக்குச் சென்று படிப்பது போன்றே முஸ்லிம்கள் தம் ஊர்களிலுள்ள மத்ரஸாக்களுக்குப் போய் ஆரம்ப மார்க்கக் கல்வியை பெறுகிறார்கள். இப்படிப்பட்ட மத்ரஸாக்களை எவராலும் மூடிவிடமுடியாது என முன்னாள் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

குர்ஆன் மத்ரஸாக்களை பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டுமென பொதுபலசேனா இயக்கம் விடுத்திருந்த கோரிக்கை தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது, தற்போது பொதுபலசேனாவின் நிலமை ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிக்கின்ற கதை போல் போய்க்கொண்டிருக்கின்றது. ஏனென்றால் அன்று குர்ஆனைத் தடை செய்ய சொன்னவர்கள், இன்று மத்ரஸாவையும், பள்ளிவாசல்களையும் மூடிவிடுமாறு சொல்கின்றார்கள். இதற்கு ஓரளவு இருக்கவேண்டும். குர்ஆனையோ மத்ரஸாக்களையோ தடை செய்ய எந்த மனிதராலும், சக்தியாலும் முடியாது. அது அல்லாஹ்வினால் உறுதி செய்யப்பட்ட அவனுடைய மார்க்கம். ஒவ்வொரு பள்ளிக்கு அருகாமையிலும் அந்தந்த ஊரப் பிள்ளைகளுக்கு குர்ஆனை ஓதிக்கொடுப்பது வழக்கம். இதனை தடுக்க எந்த சக்தியாலும் முடியாது. மத்ரஸா என்பது இஸ்லாம் எப்போது உதித்ததோ அப்போதிருந்து வந்திருக்கின்றது. எங்களுடைய பழங்காலத்தில் எமது பெற்றோர் பள்ளிக்கூடங்கள் என்று சொல்வார்கள். ஒவ்வொரு பள்ளிக்கு அருகாமையிலும் அந்தந்த ஊரப் பிள்ளைகளுக்கு குர்ஆன் ஓதிக் கொடுப்பது மத்ரஸாவிலே. அதில் எந்தப் பாதகமும் இல்லை.

இலங்கையில் குறிப்பாக சிங்கள பிரதேசங்களில் அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற பிரதேசங்களில் சிங்களப் பிள்ளைகள் தஹம்பாசலுக்கு அருகாமையாக அவர்களுடைய உடை அணிந்து போகின்றார்கள். அதே போன்று ஹிஜாப் அல்லது பர்தா அணிந்து தலையை மூடிய வண்ணம் முஸ்லிம் பிள்ளைகள் பள்ளிவாசல்களுக்குச் சென்று ஓதல் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்கின்றனர். இந்த நிலையில் பொதுபலசேனாவின் கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் நச்சை ஊற்றுமுகமாகத்தான் இருக்கின்றது.

கடந்த பொதுத் தேர்தலின் போது, முஸ்லிம்களுக்கெதிராக ஏனைய மதங்களுக்கிடையிலான வன்செயல்களை கட்டவிழ்த்துவிடுவதற்கு நாங்கள் இடம்கொடுக்கமாட்டோம் என இன்றைய ஆட்சியாளர்கள் மேடைகளில் ஏறி பேசினார்கள். அவர்கள் முஸ்லிம்களுக்குக் கொடுத்த வாக்குறுதி இன்று என்னவாகிவிட்டது. முஸ்லிம்கள் அவர்களிடமிருந்து பொய் வாக்குறுதியை தவிர வேறெதுவுமில்லை என்று ஏ.எச்.எம்.அஸ்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பௌத்த பிக்குளை மக்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா அமரபுர நிக்காயவின் பீடாதிபதி தெவுல்தெனிய ஞானிஸ்ஸர தேரரின் 100ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கொழும்பில் நேற்றுநடைபெற்றவிசேடநிகழ்வில் பங்கேற்றபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

## ஜெனீவா முன்மொழிவுகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசினால் புதிய செயலகம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

மேற்படி இச்செயலகத்தின் செயற்பாடுகள் எவ்வாறு அமையவுள்ளது? என வினவியபோதே, அமைச்சரான மனோ கணேசன், ஜனவரி முதல் வாரத்திலிருந்து இதன் பணிகள் ஆரம்பமாகும் என்று குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது,

ஜெனீவா பிரேரணைகள் தொடர்பில் இலங்கை அரசினால் அமைக்கப்பட்ட விசேட செயலகமானது ஜனவரி முதல் வாரத்திலிருந்து தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் அமைக்கப்படவுள்ள இச்செயலகத்தில் வெளிவிவகார அமைச்சு, தேசிய நல்லிணக்க அமைச்சு உள்ளிட்ட பிரதான அமைச்சுக்களும் உள்வாங்கப்பட்டுள்ளன.

அனைத்து தரப்பினரிடையும் புரிந்துணர்வை ஏற்படுத்தி உள்ளக பொறிமுறை மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே பிரதான நோக்கமாவும் இங்கு கருதப்படுகின்றது.

அதேநேரம், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான உபகுழு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான உபகுழு, குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான உபகுழு என்பனவும் இச்செயலகத்தில் நிருவப்படவுள்ளன.

அரசின் இச்செயற்பாடு மூலமாக நிச்சயமாக மிக விரைவிலேயே பாதிக்கப்பட்ட தரப்பிற்கு பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எமக்குள்ளது என்றார்.

## அடக்குமுறைக்குள்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவங்கள் குறித்து நடத்தப்பட்ட விசாரணை எந்தளவுக்கு பாரபட்சமற்றதாக, வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பதும் கேள்விக்குறிதான். கடந்த சில வருட காலத்தில் 25 இற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்கள்.

அந்தவகையில் இலங்கையின் தலைசிறந்த ஊடகவியலாளர்களில் ஒருவரும், சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியருமான லசந்த விக்ரமதுங்க காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது கல்கிஸையில் (கொழும்பு) மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி ஏந்திய கொலைக்கும்பலினால் படுகொலை செய்யப்பட்டு ஆண்டுகள் பல கடந்துவிட்டன.

இலங்கையில் ஆயுத மோதல்கள் உக்கிரம் பெற்றிருந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி முற்பகலில் அந்த கோரமான செய்தி சக ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஊடகப் பரப்பில் தங்களை அர்ப்பணித்துப் பணியாற்றும் பலருக்கு முன்னோடியாக விளங்கிய சிரேஷ்ட ஊடகவியலாளன் ஒருவர் கொல்லப்பட்ட செய்தி மீண்டும் மீண்டும் ஊடக அடக்குமுறையுள்ள தேசமொன்றில் இயங்குகிறீர்கள் என்ற தோரணையில் ஊடக போராளிகளின் காதிலும் உரக்கச் சொல்லப்பட்டது. அதுமட்டுமல்லாது 'லங்கா ஈ நியூஸ்' செய்தி தளத்தின் ஆசிரியர் பிரதீப் எக்னெலிகொட காணாமற்போனார். இதுவரை இவர் என்ன ஆனார் என்பது குறித்த தகவல்கள் வெளியாகாது மர்மமாகவே உள்ளது.

இலங்கையின் ஊடக சுதந்திரம் ஆயுதம் தாங்கியவர்களினாலும், அதிகாரத்திலுள்ளவர்களினாலும் அடக்கம் செய்யப்பட்ட பின்னும் துணிந்து போராடிய ஊடகப் போராளிகள் அவ்வப்போது துப்பாக்கியின் கோரப்பசிக்கு இரையாக்கப்பட்டனர். அல்லது வெள்ளைவான் கும்பல்களினால் இருக்கின்ற இடம்தெரியாமல் அகற்றப்பட்டனர்.

தர்மரத்தினம் சிவராம், மயில்வாகனம் நிமலராஜன், ஐயா துறை நடேசன், கே.எஸ்.ராஜா, சந்திரபோஸ் சுதாகரன், சி.சிவமகராஜா, சுப்ரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், ரிச்சர்ட் டி சொய்சா, ரேலங்கி செல்வராஜா மற்றும் இசைபிரியா உள்ளிட்ட பல ஊடகப் போராளிகளின் இழப்புக்களை கடந்தே நாம் வந்திருக்கிறோம். அந்த இழப்பின் வலியும், அது எம்முள் கீறிவிட்ட வடுவும் இன்னமும் அப்படியே தான் இருக்கிறது. அந்த வடுக்களோடு லசந்தவின் இழப்பும் எமக்குள் பதிந்து போனது.

கொலைகாரர்களுக்கான காரணங்கள் பல நேரங்களில் யாருக்குமே தெரிவதில்லை. ஏனெனில், இங்கு பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள், காணாமற் போகச் செய்யப்பட்டுவிட்டார்கள். ஆனால், அவர்கள் தொடர்பிலான நீதி விசாரணைகள் பெரிதாக நீதியை வழங்கிய வரலாறுகள் கிடையாது.

எனவே, இக்கறைப் படிந்த வரலாற்றின் வலிகளுக்கு விடைகொடுக்கும் வகையில் மலர்ந்திருக்கும் புதிய ஆண்டாவது அமையுமா என பொறுத்திருந்து பார்ப்போம்.

பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்றே தகவல் அறியும் உரிமையும் பொதுமக்களின் உரிமையாகும். ஊடக சுதந்திரத்தையும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதுடன், தகவல் அறியும் உரிமைச் சட்டமாக்கப்படவேண்டும்

ஊடகவியலாளர்கள் மீது திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதல்களை தடுக்க உலகின் நாலாபாகங்களில் நடக்கும் அட்டூழியங்களை அலசி ஆராய்ந்து அதற்கு உரிய நோக்கில் தகுந்த தீர்வை வழங்கும் ஐ.நா. சபை இதற்காக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது.

இன்றைய செய்தி நாளை சரித்திரமாக அனைவரும் ஒன்றுபடுவோமாக.

# சிகரெட் வர்த்தகத்தை கைவிட்ட அக்குறனை பிரதேச வர்த்தகர்கள்

(வத்துகாமம் நிருபர்)

அக்குறணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஒரு பிரதேச வர்த்தகர்கள் இதன் பிறகு சிகரட் வர்த்தகத்தில் ஈடுபடுவதில்லை என அறிவித்துள்ளனர்.

அக்குறணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த துனுவில என்ற இடத்திலிருந்து பங்கொல்லாமடை என்ற முஸ்லிம் கிராமம் வரையிலான பகுதியில் அமைந்துள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் சிகரட் மற்றும் புகைத்தல் தொடர்பான சகல பொருட்களையும் விற்பனை செய்வதை நிறுத்த முடிவு செய்துள்ளனர். ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மேற்படி நடவடிக்கையை முன் எடுக்கத் தீர்மானித்துள்ளதாக பிரதேச வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அப் பிரதேசத்திற்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் விஜேசேனாரத்ன தெரிவித்ததாவது,

இப்பிரதேசவியாபாரிகள்சுயமாகவே முன்வந்துசிகரட் உட்பட அனைத்து புகையிலை உற்பத்திகளையும் விற்பதை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

இப் பிரதேசத்தில் சுமார் 30 வர்த்தக நிலையங்கள் இருப்பதாகவும் அந்நிறுவனங்களிலிருந்து வருடத்திற்கு 52 இலட்சம் ரூபாய் வரையிலான சிகரட் விற்பனையாவதாகவும் அவர் தெரிவித்தார்.

வியாபாரிகளின் தீர்மானப்படி ஜனவரி முதலாம் திகதி முதல் இப்பிரதேசத்தில் சிகரட் விற்பனை முற்றாக நிறுத்தப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## துறைமுகநகர் திட்டத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைக்கப்படவுள்ளது.

இதற்கான முதற்கட்ட பேச்சுக்களை ஜனவரி 6 ஆம் திகதி சீன அரசின் உயர்மட்டக்குழுவுடன் இலங்கை அரசு மேற்கொள்ளவுள்ளது.

கொழும்பு, காலி முகத்திடலில் 450 ஏக்கர் பரப்பளவில் துறைமுக நகரம் அமைக்கப்படவுள்ளது. மஹிந்த அரசினால் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகளை தோற்றுவித்தது.

அதாவது, சீன அரசுக்கும் மஹிந்த அரசுக்கும் இடையில் இதுதொடர்பில் செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் சீனா நாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மாற்றமடையவுள்ளது என்றும் அப்போதைய பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிரணிகளால் குற்றம் சுமத்தப்பட்டது.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இத்திட்டத்தை இடைநிறுத்திய தேசிய அரசு, இதுதொடர்பில் விசேடமாக ஆராய்ந்தே அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை எடுப்போம் எனவும் அறிவித்தது.

இந்நிலையில், மேல்மாகாண அபிவிருத்தி மற்றும் மெகா பொலிஸின் அமைச்சுக்குக் கீழ் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்த கொழும்பு துறைமுக நகரத் திட்டமானது, அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பமாகும் என அரசு குறிப்பிட்டிருந்தது.

ஆகவே, இதன்முதற்கட்டமாக எதிர்வரும் 6 ஆம் திகதியன்று சீன அரசின் உயர்மட்டக்குழுவுடன், இலங்கை அரசின் உயர் மட்டக்குழுவினர் சந்தித்து விசேடமாக கலந்துரையாடவுள்ளனர்.

இங்கு, சீனாவுடன் கடந்த அரசினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மாற்றியமைப்பது தொடர்பிலேயே பிரதானமாக கவனம் செலுத்தப்படவுள்ளது.

அவ்வொப்பந்தத்தில் காணப்பட்ட பாரதூரமான விடயங்களை இல்லாது செய்யவும், இலங்கைக்கும், இலங்கையை சூழவுள்ள நாடுகளுக்கும் பாதிப்பேற்படாத வகையில் புதிய ஒப்பந்தத்தை செய்து கொள்வது தொடர்பிலுமே எதிர்வரும் 6 ஆம் திகதி பேச்சு நடைபெறவுள்ளது.

# வெலிகாமம் முர்ஸியாவின் 15ஆவது பட்டமளிப்பு விழா

(பேருவளை பீ.எம் முக்தார்)

தென் மாகாணத்தில் புகழ் பெற்றுள்ள வெலிகாமம் புதிய தெரு முர்ஸியா அறபுக் கல்லூரியின் 15ஆவது பட்டமளிப்பு விழா 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அல் உஸ்தாத் கலீபதுல்ஸாதுலி மௌலவி சல்மான் ஏ முஹியத்தீன்(பஹ்ஜி) தலைமையில் விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இவ்விழாவில் சவூதி அரேபியாவின் ஜித்தாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பன்னூலாசிரியரும் இஸ்லாமிய ஆய்வாளருமான கலாநிதி அஸ்ஸெய்யித் ஹபீப் அபூபக்கர் அல் மசூர் மௌலானா, ஸ்ரீலங்கா பசஸ் (சர்வதேச மாணிக்கக்கல், ஆபரண கண்காட்சி) தலைவர் அல்ஹாஜ் முஸ்தாக் நல்பல் ஜாபிர் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்வர்.அஸ்ஸெய்யித் அப்துல் காதர் மசூர் மௌலானா மற்றும் தொழிலதிபர்களான அல்ஹாஜ் நைஸர் காதர், எம்.ஏ.எம். ஸல்வான், எஸ்.ஏ அப்துல் குத்தூஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பங்குபற்றுவர்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் கலீபதுல் குலபா மௌலவி ஜே.அப்துல் ஹமீத் (பஹ்ஜி) புத்தளம் ஆன்மீக ஒருமைப்பாட்டு நிலைய தலைவர் மௌலவி அப்துல் காதர் நாஸர் (ரஹ்மானி) ஆகியோர் விசேட பேச்சாளர்களாக கலந்து கொள்வர். 2014, 2015ஆம் ஆண்டு தீ தியடைந்த 13 பேருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

அஸ்ஸெய்யித் மௌலவி ஸாலிஹ் மௌலானா அல்-ஹாஷிமிய்யி (அல்-மக்கி) அஸ்ஸெய்யித் முஹம்மத் மௌலானா, தொழிலதிபர்களான எம்.ஏ.எம் இன்ஆம், எம்.ஏ.எம் நிஸ்வான் ஆகியோர் கௌரவ அதிதிகளாக சிறப்பிப்பர்.

# சட்டவிரோத கட்டடம் பிக்குகள், பொலிஸார் வாக்குவாதம்

(வத்துகாமம் நிருபர்)

அஸ்கிரிய விகாரைக்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்டிருந்த சட்ட விரோத கட்டடம் ஒன்றை அகற்றச் சென்ற பொலிஸாருக்கும் பிக்குகளுக்கு மிடையே வாக்குவாதம் எற்பட்டு அசாதாரண சூழ்நிலை ஒன்று உருவெடுக்கும்நிலை தோன்றியது.

கண்டி, அஸ்கிரிய மகா விகாரைக்குச் சொந்தமான காணியில் சட்ட விரோத கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்துத் தொடரப்பட்ட வழக்கில் அதனை அகற்றுமாறு நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனவே 30 ஆம் திகதி பொலிசார் அதனை அகற்ற அங்கு சென்ற போது மோதல் நிலை ஒன்று உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது. ஏற்கனவே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட கடைக் கட்டிடம் பின்னர் தியான மண்டபமாக மாறி இருந்ததாலே இப்பிரச்சினை உருவெடுத்தது. அதாவது தியான மண்டபம் என அது அச்சந்தர்ப்பத்தில பெயரிடப்பட்டிருந்தது. இதன்காரணமாக பிக்குகளுக்கும் பொலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பிக்குகள் அதனை அகற்ற இடமளிக்க வில்லை. கண்டி மாநகர சபை மேற்படி வழக்கை தாக்கல் செய்திருந்தது.

## ஏகமனதாக நிறைவேறியது...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விசேட அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

மேல் மாகாண சபையின் சுகாதார அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் தோற்கடிக்கப்பட்டமையினால் ஏற்பட்ட சிக்கல் நிலையின் காரணமாக மாகாண ஆளுநரினால் விடுக்கப்பட்ட பிரகடனத்தின் அடிப்படையில் மாகாண சபையின் விஷேட அமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேல் மாகாண முதலமைச்சரும் சுகாதார அமைச்சருமான இசுர தேவப்பிரியவினால் சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபையின் வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான மீளாய்வுப் பிரேரணைகள் சபையில் சமர்பிக்கப்பட்டன.

இதுதொடர்பில் இடம்பெற்ற விவாதத்தில் எதிர்க் கட்சிதலைவர் மஞ்சு ஸ்ரீ அரங்கல உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளும்தரப்பு உறுப்பினர்களும் உரையாற்றினர்.முதலமைச்சர் இசுர தேவப்பிரிய விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றினார். மேல் மாகாண சபையின் 2016 வரவு செலவு திட்டத்துக்கு சபையில் எதிர்ப்புகள் தெரிவிக்கப்படவில்லை. வரவு செலவுத் திட்டம் திருத்தங்களின்றி சபை அங்கீகாரம் பெற்றதாக மாகாண சபையின் தலைவர் சுனில் விஜேரத்ன பிரகடனப்படுத்தினார்.

## மக்காவின் இலங்கை இல்ல...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

உம்றாவை நிறைவேற்றுவதற்கு புனித மக்கா சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் அரப் நியூஸ் பத்திரிகைக் களித்த பேட்டி ஒன்றிலே இதனைத் தெரிவித்துள்ளார்.

தனிநபர் ஒருவரது கையிலுள்ள இலங்கையர் இல்லத்தை பொறுப்பேற்று புதிய நம்பிக்கையாளர்களை நியமிக்கவேண்டும். இலங்கை திரும்பியதும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அப்துல் ஹலீமுடன் உரையாடவுள்ளதாகவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இலங்கையர் இல்லத்தின் நம்பிக்கையாளர்கள் காலமானதன் பின் ஒரு தனிநபரின் கீழ் இது உள்ளது. இதனை அவரிடமிருந்து பொறுப்பேற்று இலங்கை அரசு சட்டரீதியாக நம்பிக்கையாளர்களை நியமிக்கவேண்டும் என்றும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

மக்கா விஸ்தரிப்பு காரணமாக இலங்கையர் இல்லம் இருந்த கட்டடம் உடைக்கப்பட்டு புதிய இடம் வழங்கப்பட்டது. இப்போது ஆசியாவில் இந்த கட்டடம் அமைந்துள்ளது.

நாலு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடத்தில் 261 யாத்திரிகள் தங்கியிருக்கலாம். இது பல்கலைக்கழகப் பிரதேசத்தில் ஹரிரி பள்ளி அமைந்துள்ள பிரதேசத்தில் அமைந்துள்ளது.

தற்போதைய கட்டடத்தை நிர்வகிக்கும் நபர் பாகிஸ்தான் ஹஜ் யாத்திரிகர்களுக்கு வழங்கி பெரும் பணம் சம்பாதிப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

ஹஜ் காலத்தில் இரண்டு மில்லியன் றியாலுக்கு மேற்பட்ட வாடகை இக்கட்டடம் மூலம் பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மலரும் புத்தாண்டு நாட்டுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2016 புது வருடமானது மக்கள் எதிர்பார்ப்புக்களை வெற்றியடையச் செய்து, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும், ஒழுக்கநெறி மிக்க சமூக சூழ்நிலையொன்றினுள் நுழைவதற்கான விரிவான ஒரு சந்தர்ப்பத்தை இலங்கை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் பிறந்துள்ளது. அழுத்தம் மற்றும் அடக்குமுறையுணர்வின்றி சுதந்திரமான ஒரு சூழலில் புது வருடத்தை வரவேற்கக் கிடைத்தமையானது நாம் பெற்றுக் கொண்ட பாரிய வெற்றியாகும்.

இன்று நம் முன்பே புதியதொரு அரசியல் கலாசாரம் காணப்படுகிறது. அது இன, மத, கட்சி பேதங்களை மறந்து தேசத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய காலமாகும். மனித கௌரவத்தைப் பாதுகாக்கும், நிலையான அபிவிருத்தியை அடைந்த ஒரு நாட்டை மீள நிர்மாணிக்கும் பொறுப்பு மலர்ந்துள்ள இப்புது வருடத்தில் எமக்கு சவாலாக அமைந்துள்ளது.

இப்புதுவருடத்தில் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக பாதுகாப்புப் பெற்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவது எமது ஒரே நோக்கமாக காணப்படுவதுடன், அதனை ஆதரிக்கும் அனைத்து மக்களும் எமது அரசாங்கத்துடன் தோளோடு தோள் நின்று செயற்படுவதற்காக முன்வருவர் என நான் நம்புகிறேன்.

2016 ஆம் வருடமானது அனைத்து சிறந்த நோக்கங்களும் சிறப்பாக வெற்றியடையக் கூடிய வருடமாக அமையட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

## நவாஸ் ஷெரீப் கண்டி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இவர் விஜயம் செய்கிறார்.

இவரது விஜயத்தின்போது இலங்கை அரசுடன் 10 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

## சம்மாந்துறையில் துக்கதினம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம்(30) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தின் போது சம்மாந்துறைச் சேர்ந்த வேன் சாரதி உட்பட பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆறுபேர் உயிழந்ததுடன் 14 பேர் வரை படுகாயமடைந்திருந்தனர்.

உயிழந்தவர்களின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று காலை இடம்பெற்றது. இதில் உறவினர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு இறைவனிடம் பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருந்தனர்.

சம்மாந்துறைப் பிரதேசத்திலுள்ள கடைகள், வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டு என்பன துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. உள்ளூர் வாகனப்போக்குவரத்தும் இடம்பெறவில்லை. அத்துடன், வீதிகள் எங்கும் வெள்ளைக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. எங்கும் சோகமயமாகவே காட்சியளித்தன.

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில் சகல பள்ளிவாசல்களிலும் தொழுகையின் பின்னர் உயிரிழந்தவர்களுக்காக விசேட துஆப்பிராத்தனையிலும் ஈடுபட்டனர்கள்.

உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு நேற்று வியாழக்கிழமை(31) சம்மாந்துறைப் பிரதேசமெங்கும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

## ஒற்றுமை, சகவாழ்வினை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எண்ணற்ற எதிர்பார்ப்புகள் நம் எதிரே சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கின்றன. நாம் கடந்த ஜனவரியில் எங்களுடையதும் எமது பரம்பரையினரதும் வாழ்வினை புதியதொரு திருப்புமுனைக்கு இட்டுச் சென்ற ஒரு முக்கியமான பிரவேசத்தின் ஊடாக மிகவும் பலம்வாய்ந்த, நிலைபேறான நோக்கத்துடன் முன்னோக்கிய பயணத்தை துரிதப்படுத்தப்பட வேண்டிய ஒரு முக்கிய தடையினை தாண்டவேண்டியதொரு கட்டத்தில் புதுவருடத்தை சந்தித்துள்ளோம்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி நான் உங்களுக்கு வழங்கிய புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்திய, ஜனநாயக சுதந்திரம், ஊழல் மற்றும் அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, இந்நாட்டில் இல்லாதொழிக்கப்பட்டிருந்த நல்லிணக்கம், சர்வதேசத்தின நல்லெண்ணம் என்பவற்றை மீண்டும் ஏற்படுத்தி சாதகமான விளைவுகளை நாம் இன்று அனுபவிப்பது கடந்த ஜனவரி மாதத்தில் நாம் கொண்ட இலட்சியத்தின் பயனாகும்.

அன்று நீங்கள் என்மீது கொண்ட நம்பிக்கையினைப் பாதுகாத்து உங்களிடம் நான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வெற்றிவாகை சூடியதொரு ஆண்டாக 2015ம் ஆண்டினை மாற்றினேன். மலர்ந்துள்ள 2016ம் ஆண்டு உங்களுக்கும் எங்களுக்கும் ஓய்வற்றதொரு ஆண்டாக அமைய உள்ளது. 2 மில்லியன் மக்களின் எதிர்காலத்திற்காக நாம் ஆரம்பித்த பாரிய வேலைத்திட்டத்தின் ஊடாக ஈடு இணையற்ற ஓர் பயணத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

எமது நன்நோக்கங்கள் போன்றே குரோதமற்ற சிந்தனைகளும், அதிகாரத்தை அடைந்து கொள்வதற்கு பதிலாக, அதிகாரத்தை விட்டுக்கொடுத்து மக்களை வலுவடையச் செய்யும் பணியுடன் நாம் இலங்கையின் அரசியல் வடிவத்தினை முற்றுமுழுதாக மாற்றியமைத்துள்ளோம். இவையனைத்தும் மலர்ந்துள்ள புத்தாண்டின் நிகழ்ச்சிநிரலுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது.

அன்று நம்மத்தியில் ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைப் பிணைப்பு, கூட்டு ஒத்துழைப்பு ஆகியவற்றை முன்னோக்கி நகர்த்துவதன் ஊடாகவே வெற்றியின் ஒட்டுமொத்த பயனை அடைந்துகொள்ள முடியும்.

எனவே புத்தாண்டின் எமது பொது நோக்கமாக ஒற்றுமை மற்றும் அதனூடாக வலுவடையும் கூட்டு ஒத்துழைப்பினையும் சகவாழ்வினையும் பாதுகாப்பதே எமது இலட்சியமாக அமைதல் வேண்டும்.

குறித்த இலட்சியத்துடன் பிரார்த்தனைகள் நிறைவேறும் புத்தாண்டில் காலடி எடுத்துவைக்கும் உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் மலர்ந்துள்ள இப்புத்தாண்டு சௌபாக்கியமான ஆண்டாக அமைய பிரார்த்திக்கின்றேன்.




# கருத்தறிந்து கற்போம் அல் குர்ஆனை

அல்குர்ஆன் ஒரு வித்தியாசமான நூல். அதனை பல வகையில் நோக்க வேண்டும். வாசிக்க வேண்டும். மிகவும் ஆழ்ந்து அதனை ஆராய வேண்டும். அப்போது தான் அதன் கருத்துக்களை விரிவாகவும், மிகச் சரியாகவும் புரிந்து கொள்ள முடியும்.

சிலபோது அது வெறும் தனிச் சொற்களாலேயே ஒரு பெரிய, ஆழமான கருத்தை முன் வைத்து விடும்.

அல்குர்ஆன் வெறுமனே, தொழுங்கள் என்று சொல்லாது தொழுகையை நிலை நாட்டுங்கள், என்று கட்டளையிட்டிருக்கும். சாதாரணமாகத் தொழுவது போதாது. மிகச் சரியாக அதனைத் தொழ வேண்டும் என்ற கருத்தை இது கொடுக்கிறது. இந்த வகையில் உரிய நேரத்தில் தொழுதல், தொழுகையின் சட்டங்களையும், ஒழுங்குகளையும் பேணித் தொழுதல், குறிப்பாக, தொழுகையின் உயிரோட்டம் காணப்படல் என்ற கருத்துக்கள் அனைத்தையும் அது பொதிந்திருக்கும்.

பணக்காரர்களிடம் குறிப்பிட்ட அளவிலான வரியை அறவிட்டு முதன்மையாக ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் பொருளாதார செயற்திட்டத்திற்கு ஸகாத் என்றழைக்கைப்படும். அதற்கு தூய்மை, வளர்ச்சி என்று பொருளுண்டு. பொருள் மீதான பற்றை அறுத்துத் தூய்மை பெறல், சமூகம் வளர்ச்சி காணல் என்ற இரு கருத்தையும் இச்சொல் உணர்த்தி, ஸகாத்தின் இலக்கையே உணர்த்தி விடுகிறது.

''அவர்களுக்கு நாம் வாழ்வாதாரமாக வழங்கியவற்றிலிருந்து செலவழிப்பார்கள்.'' (பகரா-03) என்று செலவழித்தல் பற்றிச் கூறப்படும் இந்த வசனத்தில் வரும், ''நாம் வழங்கியவற்றிலிருந்து'' என்ற பிரயோகம்:

நீ செலவழிப்பது உனது சொத்தையல்ல. எனவே உலோபித்தனம் காட்டுவதில் அர்த்தமில்லை. என்ற ஆழமான கருத்தை தெளிவுபடுத்துகின்றது. அத்தோடு பிறர் சொத்தை செலவழித்து விட்டு பெருமையடிக்க என்ன இருக்கிறது? என்றும் பொருள் படும். மனிதன் செல்வத்தின் உண்மையான சொந்தக்காரனல்ல. அதன் மீதான பிரதிநிதி மட்டுமே என்ற உண்மையையும் இந்த சிறு வசனம் தெளிவுபடுத்துகின்றது.

இப்படி இன்னும் பல சொற்களை, வசனங்களை அல்குர்ஆனில் அவதானிக்க முடியும். அவை இவ்வாறு ஒரு கருத்தை, சிந்தனையை, சில போது ஒரு கொள்கையையே முன்வைத்து விடும். நாம் அல்குர்ஆனை ஆழமாக கருத்தறிந்து கற்க வேண்டும்.



# பெண்களை கண்ணியப்படுத்தும் இஸ்லாம்



உலகம் மிக வேகமாக முன்னேற்றமடைந்துகொண்டே செல்கின்றது. முன்பிருந்த அடிமைத்துவ முறை ஒழிக்கப்பட்டாலும் இன்று மனிதனை மனிதன் பலவகையிலும் அடிமையாக்கி வருகின்றான். அது தொழிநுட்பத்தால், வங்கிக் கடன்களால், வட்டியால் என்று பல வகையிலும் ஒருவன் அடிமைப்பட்டிருக்கலாம். பெண் உரிமை, சம உரிமை பேசும் மேற்கு நாடுகள் இன்றுவரையிலும் பெண்களை ஒரு போகப் பொருளாகவே பார்க்கின்றது. அதேபோன்று பெண்களுக்கென்று பல உரிமைகளை அவர்களை அறியாமலே இன்றுவரை புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். மாறாக பெண் உரிமை என்பது ஆடையிலும் நடத்தையிலும் இருக்கின்றது என்ற ஒரு தவறான கருத்தின்பால் மேற்கு பெண்களை வழிநடத்துகின்றனர். ஆனால் இஸ்லாம் ஆண்களுக்குக் கொடுத்திருக்கும் சம உரிமையை, கண்ணியத்தை, பாதுகாப்பை பெண்களுக்கும் வழங்கியிருக்கிறது. இறைவன் அவனது திருமறையில் ஆண்களையும் பெண்களையும் ஒன்றாகத்தான் பார்க்கின்றான். மனிதனென்ற அடிப்படையில் இறைவனிடத்தில் ஆண், பெண் இரண்டு சாராரும் சமமானவர்கள். இறைவன் திருக்குர்ஆனில் அதிகமான இடங்களில் ''ஈமான் கொண்ட விசுவாசிகளே! உங்களது இறைவனைப் பயந்து கொள்ளுங்கள்'' என்று கூறுகின்றான். இதில் இறைவன் ஈமான் கொண்ட ஆண்கள் அல்லது ஈமான் கொண்ட பெண்கள் என்று சொல்லவில்லை. மாறாக ஈமான் கொண்டவர்களே! என்றே கூறுகின்றான். இது எமது முதன்மை மூலாதாரமான குர்ஆனின் நிலைப்பாடு .

நபிஸல் அவர்கள் கூறினார்கள், ''ஆண்களில் கண்ணியமானவர்கள் பெண்களைக் கண்ணியப்படுத்துபவர்கள் . மாறாக அவர்களை இழிவுபடுத்துபவர்களே ஆண்களில் இழிவானவர்கள்'' என்றார்கள்.

இன்னொரு ஹதீஸில் ''பெண் ஆணுடைய பாதி'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பொறுப்பு என்ற வகையில் ஆண்களும் , பெண்களும் சமமானவர்கள் .

''யார் ஸாலிஹான அமல் செய்கின்றாரோ அது ஆண்களாக இருந்தாலும் சரியே, பெண்களாக இருந்தாலும் சரியே, அவர் முஃமீன்தான் என்று இறைவன் கூறுகின்றான். பொறுப்பில் சமமானவர்கள்.

சொத்துரிமையிலும் சமமானவர்கள் . ஒரு பெண்ணுக்கு சொத்துக்கள் பகிர்ந்தளிக்கின்ற போது அவளுக்கு 3/1 கிடைக்கும். அதேபோல் அவளுடைய கணவனுக்கு 3/2 பங்கு கிடைக்கும் . ஆனால் அவளுக்குச் செலவு செய்வது கணவனின் பொறுப்பு எனவே அவளுடைய சொத்துக்கள் பாதுகாக்கப்படும்.

இதனூடாகவும் இஸ்லாம் பெண்களை இஸ்லாம் கண்ணியப்படுத்துகின்றது.

ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்கான உரிமையை எப்படி ஒரு ஆணுக்குக் கொடுத்துள்ளதோ அதே உரிமையை பெண்ணுக்கும் கொடுத்துள்ளது. திருமண விடயங்களில் மணப்பெண்ணின் விருப்பு வெறுப்புகளையும் இஸ்லாம் கவனிக்கத் தவறவில்லை.

ஒரு ஆணுக்கு அல்லது கணவனுக்கு இஸ்லாம் எப்படியான இடத்தை, கண்ணியத்தை கொடுத்துள்ளதோ அதேபோன்ற கண்ணியத்தை மகத்துவத்தை பெண்களுக்கும் மனைவிமாருக்கும் கொடுத்திருக்கின்றது.

இறைவன் தந்தை என்ற உறவை ஆண்களுக்கும், தாய் என்ற உறவை பெண்ணுக்கும் கொடுத்துள்ளான். அவரவர்கள் அவரவரது கதாபாத்திரத்தில் சிறந்தவர்கள். குடும்பத்தில் தந்தையின் கதாபாத்திரத்தை ஒரு தாயால் ஈடுசெய்ய முடியாது. அதேபோன்று தாய் என்ற பொறுப்புவாய்ந்த கதாபாத்திரத்தை ஒரு தந்தையாலோ, இன்னொரு ஆணாலோ ஈடுசெய்ய முடியாது. எனவே இஸ்லாம் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான உரிமைகளைத்தான் வழங்கியிருக்கின்றது. இஸ்லாம் தந்தையின் அதிருப்தியில் அல்லாஹ்வின் அதிருப்தியையும் தாயின் காலடியில் சுவனத்தையும் வைத்து ஆண் பெண் இருபாலரையும் கண்ணியப்படுத்தியுள்ளான்.

★ ஹபீஸ் அப்துல் முத்தலிப்
வரிப்பத்தான்சேனை

# உள்ளதைக் கொண்டு திருப்தியடைவோம்

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை எங்களுக்கு எல்லாவகையிலும் முன்மாதிரியாகவே இருக்கின்றது. அவர்கள் வறுமையிலும் செல்வத்திலும் திருப்தியுடனே இருந்தார்கள். கிடைத்ததைக் கொண்டு போதுமாக்கிக் கொண்டவனே சிறப்பானவான் என்பது நாயகம் அவர்களின் வாக்காகும்.

நமது நிலைமையிலும் மேலான தரத்தில் இருப்பவனைக் கண்டு ஏங்குவது மடமையாகும். நம்மிலும் கீழானவர்கள் பலபேர் இருக்கின்றனரென்பதை நாம் மறந்துவிடுகின்றோம். எம்மைப் படைத்த அல்லாஹுத் தஆலா இந்த நிலமையிலாவது வைத்துப் பார்த்து வருகிறானே என்ற திருப்தி எம்மில் ஏற்பட வேண்டும். சொற்பமானதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வது அதிகமாக இருந்துவீணாக்குவதை விட மேலானது என்பது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கருத்தாகும்.

அல்லாஹ் முயற்சியுடையோர்களை நேசிக்கின்றான். அவர்களுக்கு உதவுகின்றான். நமது முயற்சிக்கு ஏற்றவிதமாகவே வாழ்க்கை வசதிகளும் அமைகின்றன. அந்த முயற்சி அல்லாஹ்வின் பொருத்தத்திற்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல்லுக்கும் ஏற்றவிதமாக இருக்க வேண்டும்.

நமது வரவை அறிந்து செலவு வைத்துக்கொள்ள வேண்டும். பத்து ருபாவைச் சம்பாதித்துக் கொண்டு பதினைந்து ருபாவைச் செலவு செய்வது புத்திசாலித்தனமல்ல. அதனால் கடன் தொல்லைகள் அதிகமாகும். கடன் காரன் என்ற பழிச் சொல்லும் ஏற்படும். கடன்படுவது பகலில் இழிவையும் இரவில் கவலையையும் அளிக்கிறது. வீணாக கடன்படுவதை நபியவர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

சிக்கனம் திருப்தியான வாழ்வுக்கு அவசியமாகும். வீண்விரயத்தையும் பெருமையையும் இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை, மாறாக இஸ்லாம் வீண்விரயத்தை தடுத்து தர்மத்தின் பால் எம்மை வழிகாட்டுகின்றது. எனவே உள்ளதைக் கொண்டு திருப்தியான வாழ்க்கையை நடத்தி சிறப்படைவோம்.

★ மனாஸா மஹ்பூப்
அம்பேபுஸ்ஸ





இவரது பெயர் எட்வின், பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்தவர். அல்லாஹ்வின் தூதரின் இறுதிப் பேருரையின் போது நபியவர்கள், ''இங்கு வந்த நீங்கள், இங்கு வராத மக்களுக்கு இஸ்லாத்தை கொண்டு செல்லுங்கள், என்னிடமிருந்து ஒரேயொரு செய்தி கிடைத்தாலும் அதை பிறருக்கும் எத்திவையுங்கள்.'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்களே!

நம் உயிரினும் மேலான பெருமானார் ரசூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்களின் நாவிலிருந்து அந்த வார்த்தை வெளிவந்தவுடன் ஸஹாபாக்களின் வாகனங்கள் எந்த திசையில் நின்றதோ அதே திசையில் புறப்பட்டு இஸ்லாத்தை உலக மக்களுக்கு பறை சாற்றுவதற்கு ஸஹாபாக்கள் புறப்பட்டார்களே!

அந்த இனிய இஸ்லாம் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த இந்த எட்வினையும் வந்தடைகிறது. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு எட்வின் இம்ரானாக மாறுகிறார். அரபு நாடுகளில் ஒன்றான பஹ்ரைனில் மனைவி, குழந்தைகளுடன் தற்போது வாழ்ந்து வருகின்றார்.

எட்வினுக்கு (இம்ரான்) கிடைத்த இனிய இறைவழிகாட்டல் இன்னும் கிடைக்காத கோடிக்கணக்கான எட்வின்களுக்கும், டேவிட்களுக்கும், பீட்டர்களுக்கும் கிடைப்பதற்காக இரவுபகல் பாராமல் கணவன் மனைவி இருவரும் இஸ்லாமிய பிரச்சாரம் செய்துவருகின்றனர். பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் இம்ரான் மூலமாகவும், அவருடைய மனைவி மூலமாகவும் இஸ்லாத்தை தங்களது வாழ்வியல் நெறியாக ஏற்றுள்ளனர். இன்னும் பலர் இந்த ஜோடிகளின் முயற்சியால் புனித இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்பட்டும் வருகின்றனர்.

இந்த தம்பதிகளை நினைக்கும் போது பல நேரங்களில் பொறாமைப்பட்டதும் உண்டு. நமக்கு கிடைத்த இஸ்லாத்தை, இஸ்லாத்தின் சுவையை நாம் மட்டும் சுவைக்கிறோமே! நம்முடைய தொப்புள் கொடி உறவுகளுக்கு கொண்டு சென்று அவர்களையும் சுவைக்க வைக்க முடியாமல் நிற்கிறோம்.

நிச்சயமாக நாம் சுயநலவாதிகள். நமக்கு கிடைத்த பொக்கிஷத்தை நம் உறவுக்கு கிடைக்கக்கூடாது என்று மனதால் நினைக்காவிட்டாலும் செயலால் அவ்வாறே இருக்கிறோம். நம்மை விட இம்ரான் ஆயிரம் மடங்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றவராக இருக்கிறார். நாமும் இவர்களின் வாழ்க்கையில் இருந்து படிப்பினை பெறுவோமாக.

★★★

நன்றி இணையம்

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது

மௌலானா அப்துல் வஹ்ஹாப் | தொகுப்பு: அபூஸப்வான் ஸாபித்

## தொடர் - 46

### மிக மேலாகத் தீர்ப்புச் செய்பவன்

திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம். பின்னர் (அவன் செயல்களின் காரணமாக) அவனைத் தாழ்ந்தவர்களில், மிக்க தாழ்ந்தவனாக்கினோம். எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தார்களோ அவர்களுக்கு என்றும் முடிவில்லாத (நற்)கூலியுண்டு. எனவே (இதற்குப்) பின்னர், நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றி உம்மிடம் எதை பொய்யாக்க முடியும்? அல்லாஹ் தீர்ப்புச் செய்வோரில் எல்லாம் மிக மேலாகத் தீர்ப்புச் செய்பவனில்லையா?

(ஸூரத்துத் தீன் 4-8)

### துன்பத்துடன் இன்பம்

எனவே, நிச்சயமாகத் துன்பத்துடன் இன்பம் (இலகு) இருக்கிறது. நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது. எனவே, (வேலைகளிலிருந்து) நீர் ஓய்ந்ததும் (இறைவழியிலும், வணக்கத்திலும்) ஈடுபடுவீராக. மேலும், முழு மனதுடன் உம் இறைவன் பால் சார்ந்து விடுவீராக.

(ஸூரத்து அலம் நஷ்ரஹ் 5-8)

### அநாதைகள், யாசிப்போர்

எனவே, நீர் அநாதையைக் கடிந்து கொள்ளாதீர். யாசிப்போரை விரட்டாதீர். மேலும், உம்முடைய இறைவனின் அருட்கொடையைப் பற்றி (பிறருக்கு) அறிவித்துக் கொண்டிருப்பீராக.

(ஸூரத்துள் ளுஹா 9-11)

### சுவர்க்கத்தின் வழி

எனவே எவர் (தானதருமம்) கொடுத்து, (தன் இறைவனிடம்) பயபக்தியுடன் நடந்து, நல்லவற்றை (அவை நல்லவையென்று) உண்மையாக்குகின்றாரோ, அவருக்கு நாம் (சுவர்க்கத்தின் வழியை) இலேசாக்குவோம்.

(ஸூரத்துல் லைல் 5-7)

# நபிகளாரின் தோற்றம்

நபிகளாரின் வீட்டை அண்மித்து உள்நுழைவதற்காக அனுமதி கேட்டு கதவைத் தட்டுகிறோம். நபிகளாரின் தோற்றத்தைப் புரிந்துகொள்வதற்காக அவர்களைப் பற்றிக் கூறியவற்றை உங்களின் முன்னிலையில் விபரிக்கிறோம். அவ்வார்த்தைகள் எமக்கு நபியவர்களை நேரில் காண்பது போலக் காட்சியளிக்கச் செய்கின்றன.

அல்பரா பின் ஆஸிப் [ரழி] அவர்கள் கூறுகிறார்கள். '' நபி [ஸல்] அவர்களின் அழகிய முகத் தோற்றத்தையும் சிறந்த உருவ அமைப்பையும் கொண்டவர்களாக இருந்தார்கள். அதிக உயரமுடையவர்களாகவோ, மிகக் குட்டையானவர்களாகவோ, அவர்கள் இருக்கவில்லை.''

[புஹாரி]

''ஒருமுறை ஒரு மனிதர், நபிகளாரின் முகம் வாளைப் போன்று இருந்ததா?'' என அல்பரா [ரழி] அவர்களிடம் கேட்டார். இதற்கு அவர், ''இல்லை அது சந்திரனைப் போன்று இருந்தது'' எனக் குறிப்பிட்டதாக அபூ இஸ்ஹாக் அஸ்ஸபீஈ அறிவிக்கிறார்கள்.''

[புஹாரி]

நபி [ஸல்] அவர்களது மென்மையான கரங்களைப் பற்றி அனஸ் [ரழி] அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்.

'' நான் எனது கரங்களால் நபி [ஸல்] அவர்களின் கரங்களைவிட மென்மையான எதனையும் தொட்டதில்லை. நபிகளாரின் மணத்தைவிட வாசனைமிக்க எந்தவொரு வாசனையையும் நான் நுகர்ந்ததில்லை.'' [புஹாரி, முஸ்லிம்]

நபி [ஸல்] அவர்களின் பண்புகளில் மிக முக்கியமானது வெட்க உணர்வாகும். இது குறித்து அபூ ஸயீத் அல் குத்ரி [ரழி] அவர்கள் தனது வார்த்தைகளால் வர்ணிப்பதைச் சற்று நோக்குங்கள். ''நபி [ஸல்] அவர்கள் ஒரு கன்னிப் பெண்ணைவிடவும் அதிகம் வெட்கப்படுபவர்களாக இருந்தார்கள். அவர் வெறுக்கின்ற ஒரு விடயத்தை அவரின் முக மாறுதல்களைக் கொண்டு இனங்காண முடியுமாக இருந்தது.''

[புஹாரி]

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவைகள் அனைத்தும் இறைத்தூதர் நபி [ஸல்] அவர்களது தோற்றத்தையும் பண்புகளையும் விளங்கப்படுத்துகின்ற சில வர்ணனைகளாகும். அல்லாஹுத் தஆலா நபி [ஸல்] அவர்களது பண்புகளையும் தோற்றத்தையும் முழுமையானதாக அமைத்திருந்தான்.

# வக்பு சொத்தும் அதன் வருமானத்தைச் செலவிடலும்

ஒரு பள்ளிக்கு பலர் வக்பு செய்திருந்தனர். பலவகைப் பயிர்களைக் கொண்ட நிலங்களே அவை. அதன் அறுவடை விற்பனை செய்யப்பட்டு நோன்பு மாதத்தில் கேட்டு வரும் ஏழைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. இப்போது அவ்வாறு பிச்சை கேட்டு வருவோர் இல்லை. இப்போது அதனைப் பள்ளியின் வேறு நலன்களுக்காக செலவிட முடியுமா?

பள்ளிக்கென வக்பு செய்யப்பட்டவற்றை பள்ளியின் நலன்களுக்காகவே செலவிட வேண்டும். அது ஏழைகளுக்காக செலவிடப்படக் கூடாது. ரமழான் மாதமாயினும், எம் மாதமாயினும் இவ்வாறே நடந்து கொண்டிருக்க வேண்டும். பள்ளியின் தேவை போக எஞ்சியவை இதற்கு விதிவிலக்கு. வக்பு செய்தவரின் ஷரத்துப்படி செலவிடலே வக்பில் கடைப் பிடிக்கப் பட வேண்டிய கடமையாகும். அவர் செலவிடச் சொன்ன விடயம் ஹராமாக இருந்தால் மட்டுமே அதனை ஏற்கக் கூடாது. எனினும் வக்பு செய்தவர் குறிப்பிட்ட பகுதியை விட இன்னொரு பகுதிக்கு செலவிடல் சிறந்தது எனவும் முஸ்லிம்களுக்கு மிகப் பிரயோசனமானது எனவும், வக்பு செய்தவருக்கும் கூடுதலான நன்மைகளைத் தரக் கூடியது எனவும் வக்பு சொத்தைப் பராமரிப்பவர் கண்டால் வக்பு செய்தவரின் ஷரத்திற்கு முரண்பட்டாலும் அந்த பிரயோசனம் கூடுதலாக உள்ள இன்னொரு பகுதிக்கு செலவிடலாம்.

இதற்கான ஆதாரம்: ஒரு மனிதர் இறை தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, ''மக்காவை அல்லாஹ் வெற்றி கொள்ள வைத்தால் பைத்துல் முகத்தஸ் போய் தொழுவேன் என நேர்ச்சை வைத்துள்ளேன்; இப்போது என்ன செய்யட்டும்'' எனக் கேட்டார்: அப்போது இறை தூதர் (ஸல்) ''இங்கே தொழு'' என்றார்கள். அவர் மீண்டும் கேட்டார். அப்போதும் இறை தூதர் (ஸல்) ''இங்கே தொழு'' என்றார். மூன்றாம் முறை அம்மனிதர் அதையே கேட்டார். ''இங்கே தொழு'' என்று இறை தூதர் (ஸல்) கூறினார்கள். நான்காவது முறையும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்ட போது ''அப்படியாயின் நீ விரும்பியவாறு செய்'' என்றார்கள்.

நேர்ச்சை கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறிருந்தும் கூட அதனையும், அதனையும்விட சிறந்த ஒரு செயற்பாட்டிற்கு மாற்றிக் கொள்ளலாம் என இந்த ஹதீஸ் சொல்கிறது. இவ்வகையில் வக்பு சொத்தையும் மாற்றிக் கொள்ள முடியும் என்பது தெளிவாகிறது. எனினும் வக்பை மாற்ற முனையும் போது நீதி மன்ற உத்தரவை அவர் பெற வேண்டுமென்றே நான் கருதுகிறேன். இதுவே விடயத்தை நன்கு கவனத்துடன் செய்ய ஏதுவாகும்.

இந்தக் கேள்விக்கான பதில் இப்போது தெளிவு. அந்த சொத்தின் அதிகமானதை பள்ளி நலன்களுக்கே முதலில் செலவிட வேண்டும். எஞ்சினால் ஏழைகளுக்கு வழங்கலாம். ரமழானில்தான் வழங்க வேண்டும் என்பதில்லை. வேறு மாதங்களிலும் வழங்கலாம். குறிப்பிட்ட பள்ளிப் பகுதியிலுள்ள ஏழைகளுக்கு மட்டுமன்றி அதற்கு வெளியே உள்ள பகுதி ஏழைகளுக்கும் செலவிடலாம்.

மொழிபெயர்ப்பு-
அல் முஂதமஉ

# WhatsApp தரவுகளை பாதுகாக்க சிலவழிகள்





இன்றுவரை 700 மில்லியன் மக்கள் ஒரு மாதத்தில் வட்ஸ்அப் செயலியை பயன்படுத்தி வருகின்றனர். வட்ஸ்அப் இல் ஒரு மாதத்தில் மட்டும் 30 பில்லியன் செய்திகள் பரிமாறப்படுகின்றன. இந்த வட்ஸ்அப் மூலம்தான் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களது சுயவிபரங்களை பரிமாறிக் கொள்கிறார்கள். இங்கு சாதாரணமாக பேசுவது தொடக்கம் புகைப்படங்கள், வீடியோ, வங்கி கணக்கு விவரங்கள், முகவரிகள் மற்றும் தொடர்புகொள்ளும் பல வழிமுறைகள் தனிப்பட்ட வகையில் பரிமாறப்படுகின்றன.

இங்கு Privacy இல்லாததால், சமூக வலைத்தளங்களில் உலவும் தீய எண்ணமுடையவர்கள் அதை தவறாக பயன்படுத்த முடியும். அதனால் ESET நிறுவனம், உங்களது சுயவிபரங்கள் தவறாக பயன்படுத்தப்படாதவாறு பாதுகாக்க சில முக்கிய குறிப்புகளை வழங்கியுள்ளது.

## 1. வாட்ஸ்அப் லொக்

வாட்ஸ் அப் செயலியை லொக் செய்வதில் முக்கியமான விடயம் முதலில் ஒரு கடவுச்சொல் (Password) அல்லது PIN பயன்படுத்துதலே சிறந்தது. வட்ஸ்அப் செயலிக்கென பிரத்தியேகமாக எந்த ஒரு லொக்கும் இல்லை. இதற்கென ஆப் லொக்கை பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால், மூன்றாவது மனிதர்கள் பயன்படுத்துவதை தவிர்க்க முடியும்.

ஆனாலும், செல்போன் தொலைந்துபோகும் பட்சத்தில் அதை தவறாக பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளது. எனவே சட் லொக், வட்ஸ்அப் லொக், செக்யூர்சாட் இவை மூன்றையும் அண்ட்ரொய்ட் போன்களில் எளிதாக பயன்படுத்தலாம். எனவே இவற்றை பயன்படுத்தி யாரும் உங்களது தகவல்களை திருடாமல் பார்த்துக் கொள்ளலாம்.

## 2. படங்கள் கலரியில் சேர்வதை தடுத்தல்

வட்ஸ்அப் மூலம் புகைப்படங்களை பரிமாறும்போது அவை பொதுவாக உங்கள் கலரியில் சேகரிக்கப்படுகிறது. அதனால் அவை திருடப்பட வாய்ப்புகள் அதிகம். இவற்றை ஐபோனில் எளிதில் தடுக்கலாம்.

போன் செட்டிங்கில் உள்ள மெனுவில் சென்று, பிரைவசியில் உள்ள புகைப்படத்தை ''டிசெலக்ட்'' செய்ய வேண்டும். இதனால் அவை கலரியில் சேர்வது எளிதில் தடுக்கப்படுகிறது.

அண்ட்ரொய்ட் பயனாளர்கள், இதனை ''பைல் எக்ஸ்ப்லோரர் அப்'' மூலம் தடுக்கலாம். இதில், நோ மீடியா எனும் பைலை உருவாக்குவதின் மூலம் தடுக்கப்படுகிறது. வட்ஸ்அப் படங்களை லொக் செய்வது ஒரு சிறந்த வழிமுறையாக இருக்கலாம். ஆனால், போன்கள் திருடப்படும்போது 100% பாதுகாப்பை தரும் என்று கூறமுடியாது.

## 3. Last Seen மறைப்பது

நீங்கள் கடைசியாக எப்போது ஒன்லைனில் இருந்தீர்கள் என மற்றவர்களுக்கு தெரியும். இது மற்றவர்கள் தவறாக பயன்படுத்த வழிவகை செய்யலாம். இந்த லாஸ்ட் சீன் மற்றவர்கள் அறியாதவாறு தடுக்க 'ஹைட் லாஸ்ட் சீன்' பயன்படுத்தலாம். ஆனால் இதை செய்தால் உங்கள் தொடர்புகளில் உள்ளவர்களின் லாஸ்ட் சீனையும் நீங்கள் தெரிந்துகொள்ள முடியாது.

## 4. Profile picture பாதுகாப்பு

உங்கள் புரஃபைல் படங்களை நீங்கள் பயன்படுத்தும்போது அதை மற்றவர்கள் தவறாக பயன்படுத்த வாய்ப்பு அதிகம். அத்தோடு இந்த புரஃபைல் படத்தை பயன்படுத்தி கூகுள் தேடலில் உங்களது விவரங்களை பெறமுடியும். அதனால், பிரைவசியில் உங்கள் புகைப்படத்தை தொடர்புகளில் மட்டும் பொருத்த வேண்டும்.

## 5. போலி தகவல்களால் ஏமாறாதீர்கள்

வட்ஸ்அப் எப்பொழுதும் நேரடியாக உங்களோடு தொடர்பு கொள்வதில்லை என்ற உண்மையை புரிந்துகொள்ளுங்கள். வட்ஸ்அப் உரையாடல்கள், ஒடியோ தகவல்கள், புகைப்படங்கள், மாற்றங்கள், வீடியோக்களை எப்பொழுதும் மின்னஞ்சல் உதவியில்லாமல் உங்களுக்கு அனுப்பாது. குறிப்பிட்ட இலவச நன்கொடைகள் பற்றிய தகவல்கள் வந்தால் நிச்சயம் அது போலியாகத்தான் இருக்கும். இவை நம்பத்தகுந்ததல்ல.

## 6. தொலைபேசி தொலைந்தால்...

உங்களது செல்போன் தொலைந்தால், வட்ஸ்அப் தனது பயனாளர்களுக்கு எளிய மற்றும் சிறந்த பாதுகாப்பு வசதிகளை வழங்குகிறது. சிம் கார்டை லொக் செய்வது பற்றிய வசதிகளை அளிக்கிறது. தொலைபேசி தொலைந்து போனால் உடனே அதே எண்ணில் மற்றொரு தொலைபேசியில் வட்ஸ்அப் அக்கவுண்ட்டை திறந்தால் தானாகவே தொலைந்த வட்ஸ்அப் கணக்கு செயலிழந்துவிடும். இதன்மூலம் வட்ஸ்அப் அக்கவுண்ட் தானாகவே செயலிழந்துவிடும்.

## 7. பேசுவது பற்றி தெளிவாக இருங்கள்

இது கடைசி, இதுவே முடிவல்ல என்பதை உணர்ந்து செயற்படுங்கள். சுய தகவல்களை எப்பொழுதும் பகிர்வதிலிருந்து தவிர்த்துகொள்ளுங்கள். முகவரி, தொலைபேசி எண், வங்கி விவரம், கடனட்டை விவரம், கடவுச்சொல் போன்றவற்றை வட்ஸ்அப்பில் பகிராதீர்கள்.

## 8. லொக் அவுட் செய்ய மறக்காதீர்கள்

வட்ஸ்அப் தற்போது நிறைய சேவையை வழங்கி வருகிறது. பல பயனாளர்களுக்கு வட்ஸ்அப் லொக் அவுட் செய்வது பற்றிய விவரம் தெரிவதில்லை. இதை தொலைபேசி மூலமோ பிரவுசர் மூலமோ செய்யலாம்.

# புவியை கண்காணிக்கும் செயற்கைக்கோள்

பூமியை மிக நுட்பமாக கண்காணிக்கும் செயற்கைக்கோளை சீனா 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விண்வெளிக்கு ஏவியுள்ளது. இந்த செயற்கைக்கோளின் பெயர் Gaofen4. இது சீனாவின் உயர் வரையறை (HD) தொழில்நுட்பத்தினை கொண்ட புவியை கண்காணிக்கும் திட்டம் என்று அறிக்கைகள் கூறுகின்றன. Gaofen4 செயற்கைகோள் தென்மேற்கு பிரதேசமான சிக்சுவானில் உள்ள சுஷிசங் செயற்கைக்கோள் மையத்தில் இருந்து மு.ப. 00:04 மணிக்கு லாங் மார்ச்-3பி கெரியர் ரொக்கெட் மூலம் ஏவப்பட்டது.

அறிவியலின் மாநில நிர்வாகம், தொழில்நுட்ப மற்றும் தேசிய பாதுகாப்பு தொழில்துறையின் வழிமுறையின்படி இந்த லாங் மார்ச் ரொக்கெட் தொடரின் 222ஆவது ரொக்கெட் ஆகும்.

தேசிய பாதுகாப்பு தொழில்துறை மற்றும் சீன தேசிய விண்வெளி நிர்வாகத்தின் தலைவரின் தகவலின்படி, Gaofen4 செயற்கைக்கோள், சீனாவின் முதல் புவி வட்டப்பாதையின் HD Optical Imaging செயற்கைக்கோள் மற்றும் உலகின் மிக நுட்பமான HD புவி வட்டப்பாதையின் தொலை உணர்வு (remote sensing) செயற்கைக்கோள் நிலை நிறுத்தப்படுகிறது.

2015இல் வெற்றிகரமாக ஏவப்பட்ட செயற்கைக்கோள்களில் Gaofen4 செயற்கைக்கோள் 19ஆவது செயற்கைக்கோளாகும். இது பேரழிவு தடுப்பு மற்றும் நிவாரணம், புவியியல் பேரழிவுகள், வன பேரழிவுகள் மற்றும் meteorologic ஆகியவற்றை கண்காணிக்க பயன்படுத்தப்படும் என்று இந்த Gaofen4 செயற்கைகோள் திட்டத்தின் தலைமை வடிவமைப்பாளர் டோங் சூங்டொங் கூறியுள்ளார்.



# தொழில்நுட்ப உலகம்

பிறவ்ஸ் முஹம்மட்



## செய்தி வாசிக்கும் ரோபோ

சீனாவில் பிரபல தொலைக்காட்சி நிறுவனம் முதன்முறையாக ரோபோ ஒன்றை நிகழ்ச்சி தொகுப்பாளராக அமர்த்தியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக இனிவரும் காலங்களில் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கு வேலை இல்லாமல்போகும் நிலை உருவாகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சீனாவின் ஷாங்ஹாய் டிராகன் தொலைக்காட்சி நிறுவனத்தினர் முதன்முறையாக ஒரு செயற்கை நுண்ணறிவைக் கொண்ட ரோபோவை காலை நிகழ்ச்சியில், நேரலை வானிலை அறிக்கை வாசிக்கும் பணியில் ஈடுபடுத்தியுள்ளனர். அந்த ரோபோவிற்கு XiaoIce என்று பெயர்வைத்துள்ளனர். இதை கடந்த 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை முதன்முறையாக அறிமுகப்படுத்தினர்.

சீனாவில் பிரபலமான தொலைக்காட்சிகளில் ஒன்றான ஷாங்ஹாய் டிராகன் ரி.வி. வழக்கமாக வானிலை அறிவிப்புகள் நேரலையாக ஒளிபரப்பி வருகின்றது. இந்நிலையில், இந்த நிகழ்ச்சிக்கு செயற்கை அறிவு கொண்ட பெண் ரோபோ ஒன்று நிகழ்ச்சி தொகுப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியது.

XiaoIce ரோபோ, மைக்ரோசாப்ட் உருவாக்கிய மென்பொருளின் ஒரு பகுதியை கொண்டுள்ளது. XiaoIce ரோபோவின் முதல் இரண்டு நாட்கள் பணியிலிருந்து அந்த ரோபோவின் அழகான குரல் பலரை கவர்ந்துள்ளது என்று பெரிய செய்தி நிறுவனங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

அழகான பெண் குரலில் வானிலை அறிவிப்புகளை மனிதர்களை போலவே துல்லியமாக ஏற்ற இறக்கத்துடன் வாசிக்கிறது. அந்த XiaoIce ரோபோவின் குரல் மனித குரலை நெருக்கமாக ஒத்துள்ளது. இது பெரும்பாலான நேயர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது மட்டுமின்றி அவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது.

# சாதாரண மடிக்கணனியை Touchscreen ஆக மாற்றலாம்



சாதாரண மடிக்கணனிகள் மீதான மக்களின் ஆர்வம் தற்போது மெதுவாக குறைந்து வருகிறது இலகுவாக பயன்படுத்த வசதியாக தொடுதிரை (Touchscreen) மடிக்கணனிகளையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர்.

ஆனால், இதற்காக ஏற்கனவே இருக்கும் பழைய மடிக்கணனிகளுக்கு பதிலாக புதிதாக தொடுதிரை மடிக்கணனிகளை வாங்க வேண்டிய நிலை இனியிருக்காது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த Neonode என்ற நிறுவனம் புதிய கருவி ஒன்றை விற்பனைக்கு கொண்டுவந்துள்ளது. AirBar என்ற இந்த USB கருவியை பென்டிரைவ் போல மடிக்கணனியில் பொருத்தினால் சாதாரண மடிக்கணனி தொடுதிரையை கொண்ட கணனியாக மாறிவிடும்.

கண்ணுக்கு புலப்படாத ஒளிக்கதிர்களை திரையின் மேற்பரப்பில் செலுத்தும் அந்த கருவி தொடுகை வசதியை தருகிறது. இந்த கருவி மூலமாக படங்களை பெரிதாக்க முடியும். விண்டோவை நகர்த்தலாம், லிங்கை கிளிக் செய்யலாம். கைவிரலால் படத்தை வரையலாம். கைவிரல்கள் மட்டுமில்லாது எந்த பொருளைக் கொண்டும் ஸ்கிரீனை தொட்டால் அது தொடுதிரையாக இயங்கும்.

இதற்காக எந்த மென்பொருளையும் பயன்படுத்தவேண்டிய அவசியமில்லை. இந்த கருவியின் ஒருபகுதியை USB போர்ட்டிலும் மற்றொரு பகுதியை மடிக்கணனி திரையின் அடிப்பகுதியிலும் பொருத்தினால் போதும்.

முதற்கட்டமாக, 15.6 அங்குலம் திரைகொண்ட மடிக்கணனிகளில் பயன்படுத்தக் கூடிய வகையில் மட்டுமே இந்த கருவி வெளியிடப்பட்டுள்ளது.

விண்டோஸ் மற்றும் குரோம் இயங்குதளங்களில் இயங்கும் மடிக்கணனிகளுக்கு பொருத்தமாக இது இயங்கும். ஆனால், மெக் இயங்குதளத்துக்கு இன்னும் வெளிவரவில்லை.

இந்த புத்தாண்டில் விற்பனைக்குவரும் இந்த AirBar கருவியின் அறிமுக விலை 49 அமெரிக்க டொலராகும்.

# Waterproof iPhone 7



ஐபோன் 6 எஸ் மற்றும் 6 எஸ் பிளஸ் வெளியாகி ஓரிரு மாதங்கள் கூட முடியாத நிலையில் ஐபோன் 7 பற்றிய செய்திகள் பரபரப்பை ஏற்படுத்திவருகின்றன. தற்போது பயன்பாட்டிலுள்ள ஐபோன் 6 எஸ் மற்றும் 6 எஸ் பிளஸ் முற்றிலும் Waterproof வசதியை கொண்டதல்ல. ஆனால், ஸ்மார்ட்போன் சந்தையில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால் தொடர்ந்து புதிய வசதிகளை அறிமுகப்படுத்தியே ஆகவேண்டும் என்ற கட்டாயம் அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

அதில் மிக முக்கியமான தொழில்நுட்பம் Waterproof, தண்ணீர், புகை, தூசு போன்றவற்றிலிருந்து பாதிக்கப்படாத ஸ்மார்ட்போன்களுக்கு அதிக கிராக்கி உருவாகிவருகிறது. இந்நிலையில் முற்றிலும் Waterproof உடன் கூடிய ஐபோனை உருவாக்கும் முயற்சியில் அப்பிள் நிறுவனம் களமிறங்கியுள்ளது.

சுயசிகிச்சை முறையில் தன்னை மீளுருவாக்கம் செய்துகொள்ளும் பொருட்களை (Selfhealing elastomer) கொண்டு Waterproof ஐபோனை உருவாக்க அப்பிள் முயற்சித்துவருவது, அதன் காப்புரிமை தொடர்பான தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த ஐபோனின் சிறப்பம்சம் ஹெட்போன் போன்ற சாதனங்களை இதனுடன் இணைக்கும்போதும் இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அடைப்புகள் சற்று தளர்ந்து அதற்கு வழிவிடும். ஹெட்போனை அகற்றியவுடன் இது மீண்டும் தனது பழைய நிலைக்கு திரும்பி துளைகளை மூடிக்கொள்ளும். இந்த முறையானது போனை தண்ணீர், புகை, தூசு போன்றவற்றிலிருந்து காக்கிறது. எனவே விரைவில் waterproof உடன் கூடிய புதிய அப்பிள் ஐபோன் 7 ஸ்மார்ட்போன் சந்தையை ஆகிரமிக்கக்கூடும்.

# அணுகதிர் வீச்சை கண்டறியும் பளிங்குகள்



அணுகதிர் வீச்சை கண்டறிவதற்கு Stilbene படிக பளிங்குகள் பெரிதும் உதவுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த பளிங்குகள் ஊதா நிறத்தில் [illegible] கதிரியக்க பொருட்கள் போன்று காணப்படுகிறது. இந்த பளிங்குகளின் உணர்வூட்டும் திறன்கள் 1940ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இதனை ஒப்டிக்ஸ் உற்பத்தியாளர்கள் Inrad வணிக பதிப்பு முறைகளை கண்டறியும் கருவியாக பயன்படுத்தியுள்ளனர். இந்தவகை பளிங்குகள் மிக விரைவாக அணு கதிர் வீச்சை கண்டறியும் ஆற்றல்கொண்டது.

# அடக்குமுறைக்குள் அடக்கப்பட்டவர்கள்

★ கே.சுபானி

காலங்கள் உருண்டோடி விட்டன... ஆனால், கடந்து வந்த பாதையின் சுவடுகள் வரலாற்றின் ஒரு புள்ளியாக மிளிர்ந்துகொண்டிருக்கின்றன.. அவற்றில் சில அடுத்த சந்ததியினரின் வாழ்வுக்கு வழி வகுப்பனவாகவும், சில கார்மேகம் சூழ்ந்து கறைபடிந்ததாகவுமே திகழ்கின்றன.

அந்த வகையில் அண்மையில் வெளியான செய்தி ஒன்றின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் சுமார் 110 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

உலகத்தின் ஊழிகளை படம்போட்டு காட்டும் காலத்தின் கண்ணாடியாக, மக்களின் பிரச்சினைகளை மக்களுக்காக எடுத்துரைத்து அவர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் இரண்டறக் கலந்து தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் ஊடகங்களின் சேவையானது அளப்பரியது.

எனினும், அண்மைக் காலங்களாக ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது, காணாமல் போவது போன்ற விடயங்கள் நெஞ்சை பதைபதைக்க வைப்பதாக அமைந்திருக்கின்றன.

ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் காணப்படுகின்றபோதும், அவை அனைத்தும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் காணப்படுகின்றன.

அந்தவகையில் லண்டனை அடிப்படையாக கொண்டு இயங்கும் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விபர அறிக்கையின் படி கடந்த 2015ஆம் ஆண்டு மட்டும் உலகம் முழுவதும் 110 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்ட இந்த ஊடகவியலாளர்களில் 67 பேர் செய்தி சேகரிப்பில் ஈடுப்பட்டிருந்தபோது கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும், மீதமுள்ள 43 பேர் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறித்த தெளிவான தகவல்கள் தெரிவிக்கப்படாது மர்மமாக உள்ளது.

அந்தவகையில் ஊடகவியலாளர்களுக்கு மிகவும் அச்சுறுத்தலான மற்றும் பாதுகாப்பற்ற நாடுகளின் பட்டியலில் தற்போது உள்நாட்டு கிளர்ச்சியின் ஊழித்தாண்டவத்தால் உருக்குலைந்துகொண்டிருக்கும் ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2015 ஜனவரி மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலுள்ள சேர்லி ஹெப்டோ பத்திரிகையின் தலைமையகத்தில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டதை அடுத்து உலகில் ஊடகவியலாளர்களுக்கு மிகவும் மோசமான நாடுகளின் பட்டியலில் பிரான்ஸ் இரண்டாமிடத்தை பிடித்துள்ளது.

இந்த தாக்குதலில் செய்தியாளர்கள் 9 பேர் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்தும் 3 நாட்களாக தீவிரவாதிகள் நடத்திய இந்தத் தாக்குதல் உலக நாடுகளையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அது மட்டுமல்லாது கடந்த 2011ஆம் ஆண்டு முஹம்மது நபியைப் பற்றிய ஒரு கட்டுரையை வெளியிட்டதாக இதே பத்திரிகை அலுவலகத்தின் மீது வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் 2015 ஆம் ஆண்டு மாத்திரம் தமது பணியை செய்ததற்காக பிரான்ஸில் மொத்தமாக 13 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த பட்டியலில் முதலாவது இடத்தில் சிரியா உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டில் தமது தொழில் காரணமாக மொத்தமாக 69 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என சி.பி.ஜே. எனப்படும் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு அறிவித்துள்ளது.

அதில் 40 வீதமானோர் அதாவது 28 பேர் உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக், பிரேஸில், பங்களாதேஷ், தென் சூடான் மற்றும் யெமன் ஆகிய நாடுகளில் இந்த ஆண்டு குறைந்தது 5 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது, ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 23 ஆம் திகதி வரை தமது பணியை செய்ததற்காக கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

2014 இல் இவ்வாறு உயிரிழந்த ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை 61 என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மரணமடைந்திருந்த ஊடகவியலாளர்களில் குறைந்தது 26 பேரின் இறப்பு அவர்களது தொழில் காரணமாகவா ஏற்பட்டது என்பது குறித்து சி.பி.ஜே. விசாரித்து வரும் நிலையில் 2015ஆம் ஆண்டு கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் மொத்த தொகை அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்களுக்கு மிகவும் மோசமான நாடுகளின் பட்டியலில் சிரியா கடந்த நான்கு ஆண்டுகளாக முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. 2015ஆம் ஆண்டில் மட்டும் 13 ஊடகவியலாளர்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர். ஆனாலும் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை குறைவாகும்.

இஸ்லாமிய அரசு என தம்மை மார்தட்டிக்கொள்ளும் ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியாவில் தமது கட்டுப்பாட்டு பகுதியை விஸ்தரித்துள்ள நிலையில் அந்தப் பகுதியில் கடமையாற்றும் செய்தியாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமை இதற்கு காரணம் என குறிப்பிடும் சிபிஜே, அங்கு நடைபெறும் வன்முறைகளை கண்காணிப்பதில் நிலவும் சிரமம் அதிகரித்துள்ளமையும் இதற்கு காரணங்கள் என தெரிவித்துள்ளது.

போர் காரணமாக அல்லலுறும் லிபியா, யெமன், ஈராக் போன்ற ஏனைய நாடுகளில் தகவல்களை கையாள்வதில் கட்டுப்பாடுகள் உள்ளமையும் உலகளவில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கையை துல்லியமாக கணிக்கமுடியாமல் உள்ளமைக்கு காரணமாக இருக்கலாம்.

உலகளாவிய ரீதியில் தமது தொழில் காரணமாக இலக்கு வைத்து கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள், மோதல்களில் இடையில் அகப்பட்டு உயிரிழந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஆபத்தான செய்திப் பணிகளின் போது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் விபரங்களையும் சிபிஜே வெளியிட்டுள்ள இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

மேலும் உலகளாவிய ரீதியில் 2015 ஆம் ஆண்டு மட்டும் சுமார் 199 ஊடகவியலாளர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாக நியூயோர்க்கை தளமாக கொண்டியங்கும் ஊடக நிறுவனமொன்று சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நாடுகளின் பட்டியலில் சீனா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் கடந்த 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இத்தொகை குறைவானதாக காணப்படுகின்றது.

காரணம் கடந்த 2014 ஆம் ஆண்டு மாத்திரம் சுமார் 221 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 2015 ஆம் ஆண்டு மட்டும் பணி நிமிர்த்தம் ஒரு நாட்டை விட்டு பிறிதொரு நாட்டுக்குச் சென்ற ஊடகவியலாளர்களில் 49 பேர் பல்வேறு நாடுகளிலும் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என கருதி எகிப்து ஜனாதிபதி அப்துல் பதாஹ் சிசி தலைமையிலான அரசு 23 ஊடகவியலாளர்களை கைது செய்துள்ளது.

துருக்கியில் 2015 ஆண்டே ஊடகச் சுதந்திரம் குறைந்து அடக்குமுறைகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் தொழில் ரீதியாக அல்லாமல் மக்கள் - ஊடகவியலாளர்கள் பிரிவில் பணியாற்றிய 37 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஊடக நிறுவனங்களில் வேலைபார்த்த 7 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு ஊடகவியலாளர்கள் அமைதி தவழும் நாடுகளில் கொல்லப்பட்டுள்ளனர் .

2014ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் மூன்றில் 2 பங்கு பேர் போர் நடைபெற்ற நாடுகளில் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு உலக அளவில் ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தாக விளங்கிய நாடுகள் பட்டியலில் ஈராக் மற்றும் சிரியா முதல் இடத்தில் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக பிரான்ஸ், யெமன், தென்சூடான், இந்தியா, மெக்சிகோ, பிலிப்பைன்ஸ் மற்றும் ஹொண்டாரஸ் ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.


என்னடா இது... உலக நாடுகளில் மட்டும் தானா ஊடகவியலாளர்கள் இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையை எதிர்நோக்குகின்றனர். எமது நாட்டில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவே இல்லையா என்று தானே எண்ணுகின்றீர்கள்... ஏன் இல்லை.

ஊடக சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் 179 நாடுகளை உள்ளடக்கிய ஆய்வில் இலங்கை 165ஆவது இடத்தில் இருப்பதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊடகத்துறை மோசமாக அடக்கப்படும் 20 நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளது என மற்றுமொரு ஆய்வில் தெரிவிக்கின்றது. சர்வதேச ரீதியாக இலங்கையின் ஊடக சுதந்திரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதை இது உறுதிப்படுத்துகின்றது.


கடந்த ஒரு தசாப்த காலத்தில் 34 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இந்தக் கொலைகளுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கூட இதுவரை கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படாதுள்ளமை கவலைக்குரியதே.

(12ஆம் பக்கம் பார்க்க...)










## போர்க்குற்ற சாட்சியான அமெரிக்க ஊடகவியலாளர்

இலங்கை படைகளின் போர்க்குற்றங்களுக்கு சாட்சியாக இருந்தவரும், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் இடையில் தொடர்பாளராக செயற்பட்டவருமான லண்டன் சண்டே ரைம்ஸ் ஊடகவியலாளர் மேரி கொல்வின் சிரியாவில் படுகொலை செய்யப்பட்டார்.

ஹோம்ஸ் நகரில் அவர் தங்கியிருந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலிலேயே ஊடகவியலாளர் மேரி கொல்வினும், பிரான்ஸ் படப்பிடிப்பாளரும் கொல்லப்பட்டுள்ளனர். மூன்றாம்கட்ட ஈழப்போரின் இறுதிப்பகுதியில் 2001 ஏப்ரல் மாதம் வன்னிப் பகுதி நிலவரங்கள் குறித்து செய்தி சேகரிக்க சென்றிருந்த மேரி கொல்வின், வவுனியாவில் முன்னரங்க நிலையைக் கடக்க முயன்றபோது, இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து ஒரு கண்ணை இழந்திருந்திருந்தார்.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உள்ளிட்டோருடன் இவர் இறுதிவரை தொடர்பில் இருந்தவர் என்பதுடன் அது பற்றிய உண்மைகளையும் வெளிப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.






இந்தவார வெற்றியாளர்




★ என்.எம்.ஹமீட், அட்டாளைச்சேனை
கேள்வி: நல்லாட்சி எப்படி நடை பெறுகிறது?
பதில்: அதுதான் நீங்கள் சொல்லி விட்டீர்களே.



★ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் சிறந்த கேள்விக்கு, இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் வழங்கும் 1000/- ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

★ கேள்விகளை சுருக்கமாக தபாலட்டையில் மாத்திரம் எழுதி பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

★ முகவரி வெட்டி ஒட்டப்படாத தபாலட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

NAVAMANI Newspaper
Samookajothiyin Sangamam
# 156, Hospital Road,
Kalubowila, Dehiwala

★ ஏ.ஏ.நிலாம், மினுவாங்கொடை
கேள்வி: ஹிரு தொலைக்காட்சியில் அமைச்சர் றிஷாத்தின் விளக்கம் பேரினவாதிகளின் கண்களைத் திறந்திருக்குமா?



பதில்: பலரின் கண்களை திறந்திருக்கும். ஆனால் குலத்தை கெடுக்க வந்த கோடரிக் காம்புகளின் கண்கள் திறக்கவே செய்யாது.

★ எஸ்.எஸ்.சுபைர், சம்மாந்துறை
கேள்வி: கொள்கையில்லாத மனிதன்?



பதில்: சுக்கான் இல்லாத கப்பல்.

★ பி.எச்.ஏ.சலாம், பாணந்துறை
கேள்வி: அளவானது எது, அளவில்லாதது எது?
பதில்: அறிந்தது அளவானது. அறியாதது அளவில்லாதது.

★ ஏ.எல்.எம்.வஹாப், புத்தளம்
கேள்வி: தாய்க்கும் தாரத்துக்கும் என்ன வித்தியாசம்?
பதில்: தாய் நமக்கு முன்னிருந்த தெய்வம். தாரம் நம்பிள்ளைகளுக்கு முன்னிருந்த தெய்வம்.

★ எம்.எம்.மன்சூர், நீர்கொழும்பு
கேள்வி: காற்றடிக்கும்போது தென்னை மரம் ஆடுகிறதே?
பதில்: அதில் 'கள்' இருப்பதால் போதும்.

★ ஆர்.எம்.முனாஸ், கண்டி
கேள்வி: நதிகளெல்லாம் சமுத்திரத்தில் சங்கமமாவது ஏன்?



பதில்: சமுத்திரம் பள்ளத்தில் இருப்பதால்

★ ஏ.எம்.நிஸாம், காத்தான்குடி
கேள்வி: நம் நாட்டில் கவிஞர்கள் அதிகரித்து விட்டார்களே?
பதில்: உண்மைக் கவிஞர்கள் ஒரு சிலர் தான். கவிஞர் என்று காட்டிக் கொள்பவர்கள் தொகைதான் பெரிது.

★ எம்.ஏ.ரஹ்மான், மாவனல்லை
கேள்வி: மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் தோல்வி அடைந்தவனின் நிலை என்ன?
பதில்: மரணத்தைத் தேர்ந்தெடுப்பதில் வெற்றி பெறுவான்.

★ எம்.உதயகுமார், கொழும்பு
கேள்வி: தீயவர்' என்ற வார்த்தைக்கு எதிர்ச்சொல் என்ன?
பதில்: 'நீரவர்' என்கிறார் கண்ணதாசன்

★ எஸ்.எம்.ராஸிக், அவிசாவளை
கேள்வி: பொன்னாடைகள் கண்ணீர் வடிக்குமா?
பதில்: வடிக்கும். சான்றோர்களின் தோளை முத்தமிட்ட பொன்னாடைகள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கும். சண்டாளர்களின் தோளில் விழுந்த பொன்னாடைகள் ஆதங்க கண்ணீர் வடிக்கும்.

★ எம்.ஏ.எம்.சுபைர், சம்மாந்துறை
கேள்வி: யாரைக் குணப்படுத்தலாம், யாரை குணப்படுத்த முடியாது?
பதில்: முன்னவன் பைத்தியக்காரன். பின்னவன் தற்பெருமைக்காரன்.


★ எஸ்.எம்.அபுசாலி, பலாங்கொடை
கேள்வி: அயோக்கியனை அடையாளம் காண்பது எப்படி?
பதில்: யோக்கியனைக் குறை கூறிக் கொண்டே இருப்பான்.

★ எஸ்.கே.நிஹாரா, கல்முனை
கேள்வி: நல்லவைகள் எல்லாம் சிறந்தவைகளா?
பதில்: ஆம். ஆனால் சிறந்தவைகள் எல்லாம் நல்லவைகள் அல்ல.

**அறிவித்தல்:** புதுவருடத்தை முன்னிட்டு பரிசுகள் வழங்குவதில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதால் குறுக்கெழுத்துப் போட்டி தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகிறது. இதற்கு முன்னர் வெளிவந்த குறுக்கெழுத்துப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும். அத்துடன் குறுக்கெழுத்துப்போட்டி விரைவில் மீள ஆரம்பிக்கப்படும்.




# புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு BOCரண்கெகுளு விருது




இலங்கை சிறுவர்களுக்கான முதல்தர சேமிப்பு கணக்கான BOC ரண்கெகுளு சேமிப்பு கணக்கின் மூலமாக இவ்வருடமும் 13 ஆவது தடவையாக 2015 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனைபடைத்த 2000 மாணவர்களுக்கு 10இ000 ரூபா உதவித்தொகை புலமைப்பரிசில்களை வழங்குகிறது.

புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்ற 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதிக்கு முன் அல்லது அதற்குப் பின் BOC ரண்கெகுளு கணக்கில் குறைந்த இருப்பாக 2500 ரூபாவைக் கொண்டு 175 அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களை பெற்ற மாணவர்கள் BOC ரண்கெகுளு புலமைப்பரிசிலுக்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய BOC ரண்கெகுளு கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதோடு அவர்களும் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச இருப்பினை கொண்டிருப்பது அவசியமாகும்.







# கொமர்ஷல் வங்கி அறிமுகப்படுத்தும் மாணவர்களுக்கான கணித ஆய்வுகூடம்;




மாணவ சமூகத்தின் கணித மற்றும் பகுப்பாய்வு ஆற்றலை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கியமான புதிய முன்னோடித் திட்டத்தை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது. வங்கியின் கல்விச் செயற்பாட்டுத் திட்டத்தை மையமாகக் கொண்ட கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஆசிரியரும் கற்றல் உபகரணங்களின் ஆக்கபூர்வ வடிவமைப்பாளருமான எச்.ஏ. தர்மசிறி பசறையில் உள்ள மீயனகந்துர அரசாங்க பாடசாலையில் அறிமுகம் செய்த கணித ஆய்வு கூட கருப்பொருள் திட்டத்தினால் ஏற்பட்ட தாக்கத்தால் உந்தப்பட்டு நான்கு அரச பாடசாலைகளைச் சேர்ந்த 4500 மாணவர்களையும் ஒரு மாற்றுத் திறனாளிகள் இல்லத்தையும் உள்ளடக்கியதாக கொமர்ஷல் வங்கி இந்த புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் இந்த முன்னோடித் திட்டத்துக்கு அநுர மத்திய கல்லூரி யக்கல, வேவிட மைத்ரீ நவோதயா மகா வித்தியாலயம் பண்டாரகம, ஸ்ரீ பியரத்ன மகா வித்தியாலயம் பாதுக்கை, தொம்பே ஆரம்ப பாடசாலை மற்றும் பிடகோட்டேயில் உள்ள செவண சிறுவர் இல்லம் என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டுள்ள இந்த இடங்களில் கணித ஆய்வுகூடங்களை நிறுவவும் அதற்கு தேவையான உபகரணங்களைப் பெறவும் கொமர்ஷல் வங்கி தேவையான நிதி உதவிகளை வழங்கும்.

அத்தோடு இதனைப் பயன்படுத்தவும் பராமரிக்கவும் மாணவர்களை பயிற்றுவிக்கத் தேவையான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்கல், திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ள உரிய பொறிமுறை ஒன்றை வகுத்தல், இந்த நிலையங்களில் கணித சமூகங்களை உருவாக்குதல் என்பன வற்றுக்கும் தேவையான உதவிகளை வங்கி வழங்கும். நிலையான கணித ஆய்வுகூட அபிவிருத்தி திட்டத்தின் ஒரு அங்கமாக வங்கி இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாணவர்களின் தர்க்க ரீதியான மற்றும் பகுப்பாய்வு முறையின் சிந்தனா ஆற்றலை மேம்படுத்தும் வகையில் கருவிகளையும் மற்றும் மாணவர்களுக்கு அதற்கேற்ற சூழலையும் வழங்கும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கணித ரீதியான பிரச்சினைகளை இலகுவான நுட்பங்களைப் பயன்படுத்தி வியக்கத்தக்க வகையில் மாணவர்கள் தீர்த்துக் கொள்ள இந்த முறை வழிகாட்டுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட 70 வகையான கணித விளையாட்டுக்கள் மூலம் கஷ்டமான கணித கொள்கைகளை விளங்கிக் கொள்ளல், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சுவாரஸ்யமான செயற்பாடுகள், மாணவர்களுக்கு உதவும் வகையில் இலகுவான மற்றும் விநோதமான கணித செயற்பாடுகள், செயல்முறையில் உள்ள கணிதப் பிரச்சினை உண்மையிலேயே என்ன என்பதை இவற்றின் மூலம் தெரிந்து கொள்ள வழியமைத்தல், சிக்கலான கணிப்பீடுகளைப் புரிந்து கொள்ளலும் தீர்த்தலும் என்பன உட்பட இன்னும் பல விடயங்களை உள்ளடக்கியதே கணித ஆய்வுகூட முறையாகும்.

கணித ஆய்வுகூட திட்டத்தை அமுல் செய்வதற்கு கொமர்ஷல் வங்கி இந்த திட்டத்தின் மூலகர்த்தாவான எச்.ஏ. தர்மசிறி தலைமையில் ஆர்.எம். பிரேமதிலக்க ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், எச்.பி.லீலாரத்ன ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் மற்றும் திலீப் றோஹன முன்னாள் உப அதிபரும் கணித ஆசிரியரும் ஆகியோரை உதவி ஆசிரியர்களாகவும், அநுர ஜயவர்தன கற்றல் முறைகள் மற்றும் வாழ்வியல் ஆற்றல் சிரேஷ்ட பயிற்றுவிப்பாளரை பயிற்றுவிப்பாளராகவும் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரிவுத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி. ஆர். சஞ்சீவ சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அத்தாட்சிபடுத்தப்பட்ட கூட்டாண்மை பயிற்றுவிப்பாளரும் வருகை தரும் விரிவுரையாளரும், கூட்டாண்மை பிரிவு ஆலோசகருமான சனத் பி விதானகமகே, ஆகியோர் ஆலோசகர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# ஓவியப்போட்டி வெற்றியாளர்களுக்கு Fashion Bug புலமைப்பரிசில்கள்




நாடு முழுவதும் 16 காட்சியறைகளைக் கொண்டு இயங்கி வரும் இலங்கையின் முன்னணி ஆடை விற்பனையகத் தொடரான Fashion Bug தொடர்ச்சியான 5ஆவது வருடமாக நாடு முழுவதையும் சேர்ந்த பாடசாலைகள் மத்தியில் ஏற்பாடு செய்திருந்த ரூசித்தம் எனும் ஓவிய போட்டியில் வெற்றியீட்டியிருந்த திறமையான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கியிருந்தது.

Fashion Bug இனால் முன்னெடுக்கப்படும் பிரதான சமூக பொறுப்புணர்வு செயற்திட்டமான சிசு திரிமக நிதியம் என்பதன் மூலமாக, குறைந்த நிதிவசதிகள் படைத்த மாணவர்கள் இந்த புலமைப்பரிசில் திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு நிதியுதவிகளை வழங்கியிருந்தது. இதன்மூலம் அந்த மாணவர்களுக்கு தமது குடும்பத்தின் வறிய நிலைகளிலும் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த புலமைப்பரிசில்களை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் வழங்கியிருந்ததுடன், இந்நிகழ்வின் போது Fashion Bug இன் பணிப்பாளர் ஷபீர் சுபியன், பதில் பொது முகாமையாளர் கலாநிதி எஸ்.எச். எம்.ஃபராஸ் மற்றும் சந்தைப்படுத்தல் உதவி முகாமையாளர் எஸ்.எம்.ஃபஹாம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இரத்தினபுரி சுமன பெண்கள் பாடசாலையின் கவிஷ்கா தெவ்மினி சமரதுங்க மற்றும் கேகாலை கன்னியர் மடத்தின் கௌஷி செனுரி ஆகியோர் இந்த புலமைப் பரிசில்களை பெற்றுக் கொண்டனர். நாட்டின் மேலும் பல மாணவர்களுக்கு இந்த வாய்ப்பை பெற்றுக் கொடுக்க Fashion Bug எதிர்பார்த்துள்ளது. உலக சிறுவர் தினத்தில் முன்னெடுக்கப்பட்ட ரூ சித்தம் எனும் சித்திரப் போட்டியில் 50000க்கும் அதிகமான ஆக்கங்கள் 220க்கும் அதிகமான பாடசாலைகளிலிருந்து கிடைத்திருந்தன. இதிலிருந்து 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் மூன்று வயது பிரிவுகளிலிருந்து ஆக்கத்திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். Fashion Bug இனால் முன்னெடுக்கப்படும் விருதை வென்ற சமூகப் பொறுப்புணர்வு செயற்திட்டமாக சிசு திரிமக ஊடாக 20க்கும் மேற்பட்ட பாடசாலைகளின் 7000க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 120க்கும் மேற்பட்ட பாடசாலைகளை தற்போது இது சென்றடைந்துள்ளதுடன், 100000க்கும் மேற்பட்ட மாணவர்களையும் உள்வாங்கியுள்ளது.

# முதல் இருதயமாற்று சத்திரசிகிச்சையில் ஆசிரி சர்ஜிகல் வைத்தியசாலை

ஆசிரி வைத்தியசாலைகள் குழுமம் இலங்கையின் சுகாதார நலத் துறையில் பல விடயங்களை முதன் முதலாக அமுல் செய்தும் செய்து காட்டியும் உள்ள பெருமைக்குரிய ஒரு நிறுவனமாகும். அண்மையில் நாட்டின் முதலாவது இருதய இடமாற்ற சத்திர சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. ஆசிரி சத்திரசிகிச்சை பிரிவில் 'Minimally Invasive Coronary Surgery' முறையைப் பயன்படுத்தி இந்தச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆசிரி இருதய சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட இருதய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் விவேக் குப்தா தலைமையிலான குழுவினரே இந்தச் சத்திர சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளனர். ஹெட்டிபொல பிரதேசத்தைச் சேர்ந்த டீ.ஜு. ஜினதாஸ என்பவரே சத்திர சிகிச்சைக்கு உட்பட்டு தற்போது பூரண குணமடைந்துள்ள நபராவார். சாதாரணமாக மனித உடலுக்குள் இடது பக்கத்தில் இருக்க வேண்டிய இதயம் வலது பக்கத்தில் மாறி காணப்படுவது தான் 'dextrocardia situs inversus என்ற மருத்துவ ரீதியான பிரச்சினையாகும். இதன் காரணமாக ஏனைய பல உறுப்புக்களும் இடம் மாறி அமைந்து விடும். இதற்கான காரணம் என்ன என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. சுமார் 12இ000 பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் தான் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது.




# 25 வருடகால சேவையை பூர்த்திசெய்த கொமர்ஷல் வங்கி ஊழியர்கள் கௌரவிப்பு

கொமர்ஷல் வங்கி 25 வருடகால சேவையை பூர்த்திசெய்த ஊழியர்களை 2015ம் ஆண்டுக்குரிய வங்கியின் வருடாந்த நீண்ட கால சேவைக்கான விருது வழங்கும் நிகழ்வில் கௌரவித்தது.

அண்மையில் இந்நிகழ்வு கொழும்பு சினமன் கிராண்ட்டில் கோலாகலமாக இடம் பெற்றது.

இந்த ஊழியர்களுக்கான பரிசுகளாக சேவை விருதும், தங்க நாணயங்களும் வங்கித் தலைவர் தர்மா தீரசிங்க, பிரதி தலைவர் பிரீத்தி ஜயவர்தன மற்றும் பணிப்பாளர்கள் எஸ். சுவர்ணஜோதி, கே. தர்மசிறி ஆகியோருடன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன் துரைரட்ணம், பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ். ரெங்கநாதன் மற்றும் மனித வள முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் இசுறு திலகவர்தன ஆகியோரால் வழங்கப்பட்டன.

இங்கு நீண்ட கால சேவைக்கான விருது பெற்ற பெரும்பாலானவர்கள் 1990களில் பாடசாலையை விட்டு விலகியவர்களாக கொமர்ஷல் வங்கியில் இணைந்தவர்கள் ஆவர். இன்று இவர்கள் இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியில் முகாமையாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் பிரதி முகாமையாளர்கள் போன்ற உயர் பதவிகளில் காணப்படுகின்றனர்.

# ஜனாதிபதி ஏற்றுமதி விருது வெற்றிவாகை சூடிய GPDS



கருவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணியில் திகழும் ஜி.பி.டி. சில்வா அண்ட் சன்ஸ் இன்டர்நஷனல், டிசம்பர் 16ஆம் திகதி தாமரைத் தடாகத்தில் நடைபெற்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வில், 2010 மற்றும் 2011 வருடங்களுக்கான வாசனைத் திரவியங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதிக்கான இரு விருதுகளை வென்றுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையில் மிகவும் உயர்ந்த கௌரவிப்புகளில் ஒன்றாக கருதப்படும் ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை முன்னெடுக்கிறது. 27 வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 130 வெற்றியாளர்களுக்கான விருதுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார். 2014இல் வாசனைத்திரவியங்கள் சார்ந்த துறையின் ஏற்றுமதி 260.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. இந்தப் பெறுமதி 2015 இல் 319.45 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்திருந்ததென ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டிருந்த தரவுகளின் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது. கடந்த ஆண்டின் பிரதான சந்தைகளாக இந்தியா, மெக்சிகோ மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்றன அமைந்திருந்தன. இவற்றைத் தொடர்ந்து ஜேர்மனி, பெரு, கொலம்பியா, ஸ்பெய்ன், ஐக்கிய இராஜ்ஜியம், கோதமாலா மற்றும் ஈக்குவடோர் ஆகியன காணப்பட்டன.

தூரநோக்கு சிந்தனையுடைய தொழில் முயற்சியாளரான ஜி.பி.டி. சில்வாவினால் 1955ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்நிறுவனம், 1970ஆம் ஆண்டுகளின் பிற்பகுதி வரை உள்நாட்டு சந்தையில் பெருமளவு ஆதிக்கத்தை செலுத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்து சிலி நாட்டுக்கான ஏற்றுமதியை முதன் முதலில் ஆரம்பித்ததன் மூலம் சர்வதேச வியாபாரத்தில் கால் பதித்தது. இன்றைய காலகட்டத்தில், ஜி.பி.டி. சில்வா அண்ட் சன்ஸ் இன்டர்நஷனல், உலகின் முன்னணி கருவா ஏற்றுமதியாளராக திகழ்வதுடன், வருடா வருடம் உலகளாவிய ரீதியில் காணப்படும் கருவா கேள்வியின் 90 சதவீதத்தை நிவர்த்தி செய்து வருகிறது. மெக்சிகோ, தென் அமெரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா போன்ற பிரதான நாடுகளுக்கு தனது ஏற்றுமதிகளை மேற்கொள்கிறது. ஐக்கிய அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் சர்வதேச அலுவலகமொன்றையும் இந்நிறுவனம் கொண்டுள்ளது.

தூய மற்றும் உயர் தரம் வாய்ந்த கருவா ஏற்றுமதியில் முன்னோடியாக திகழும் இந்நிறுவனம் சாதிக்காய், கராம்பு, மிளகு, உலர்த்திய தேங்காய், ஏலம், அத்தியவாசிய எண்ணெய் வகைகள், ஜாதிப்பத்திரி, உலர்ந்த எலுமிச்சை மற்றும் ஏனைய பாரந்தளவு தயாரிப்புகள் போன்றன காணப்படுகின்றன. ஏற்றுமதித் துறையில் பெருமளவு பங்களிப்புக்காக அதிகளவு உள்நாட்டு கௌரவிப்புகளை கம்பனி பெற்றுள்ளது. சமூகத்துக்கு மீள வழங்குவது எனும் நம்பிக்கைக்கமைவாக, பல சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளை நாட்டில் முன்னெடுக்க வண்ணமுள்ளது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 03rd JANUARY 2016